45.00 ரூபா

மாத இதழ்







# ஆகவே

R.Kuddithamby




**சிறப்புக் கட்டுரை:**
பேராசிரியர் கா.சிவசேகரம்

**கவிதை:**
தானா. விஷ்ணு
சீதா குலதுங்க
ந.சத்தியபாலன்
யாத்திரீகன்
ஜபார்
சித்தாந்தன்
த.அஜந்தகுமார்

**சிறுகதை:**
குப்பிளான் ஐ.சண்முகன்
ஜபார்

**கட்டுரை:**
சு. வில்வரத்தினம்
வாசுதேவன்
அடூர் கோபாலகிருஷ்ணன்
மீரா கதிரவன்
இரா. பிரபாகர்
கோவை ஞானி
பி. ஏ. காதர்
எஸ். எம். மியாஜ்

**ஓவியம்:**
புகழேந்தி
ராஜன்

**புகைப்படம்:**
சிவரஜனி
தர்ஷா - ரவி
டெஸ்ரர்
யாத்திரீகன்
சி. சாந்தகுணம்


நேர்காணல்: சண்முகம் சிவலிங்கம்

"உலகமயமாதலுக்கு எதிராக உலகெங்கும் அணிதிரளும் உலகமயமாதல் எதிர்ப்பாளர்களுடன் நாம் அணிசேரவேண்டும். இந்த காட்டாற்று அசுரத்தத்துவத்தைகிழித்தெறியும் காலம் ஒன்று வரும். சகல ஏதாதிபத்திய அச்சுறுத்தல்களும் இதனுடைய முகமே என்பதை இனங்காணவேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 05 செப்ரெம்பர் 2005

# ஆகவே

தோன்றி வளர்ந்து சிதைந்து அழிந்து
மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும்

309, துவாளி வீதி, இமையாணன் மேற்கு
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நான்கு இதழ்களோடு நின்றுபோன 'ஆகவே' மீண்டும் வெளிவரத் தொடங்கியிருக்கிறது. அதற்கு அடையாளமாகவே இவ்விதழ். அவசர அவசரமாகப் படைப்பாளிகளை அணுகமுடியவில்லை. பொருத்தம் கருதி பல மறுபிரசுரங்கள் இடம்பெறுகின்றன. அந்த வகையில் பின்வரும் நூல்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் 'ஆகவே' தனது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

**பிரவாதம் / சமூகவிஞ்ஞானிகள் சங்கம் / பேராசிரியர். சி. சிவசேகரம்**
**உயிரோடிருத்தல் / தவிர 2 / சு. வில்வரத்தினம்**
**சினிமா உலகம் / கனவுப்பட்டறை / அடூர் கோபாலகிருஷ்ணன் - மீரா கதிரவன்**
**சினிமா ஓர் அறிமுகம் / கனவுப்பட்டறை / இரா. பிரபாகர்**
**தேனகம் / மண்முனை வடக்கு பிரதேச செயலகம் / வாசுதேவன்**
**உலக மயமாக்கலும் மார்க்சியமும் / அடையாளம் / கோவைஞானி**
**சுயம் நிர்ணயம் உரிமை / அப்பால் தமிழ் / பீ. ஏ. காதர்**
**தினகரன் வாரமஞ்சரி 2004 டிசெம்பர் 05/ லேக்ஹவுஸ் / ஜெஸ்மி எம்.மூஸா.**

'ஆகவே' யின் முதலாவது இதழ் பெரும்பாலும் இலவசமாகவே விநியோகிக்கப்பட்டது. முதலாவது இதழுடன் நின்றுபோவதைத் தவிர்த்தவர்கள் என்ற வகையில் இந்த சந்தர்ப்பத்தில் மூன்று நண்பர்களை நான் ஆழமாய் நினைவு கூரவேண்டும். முதலாமவர் ஆர் ஆர் குறூப் லிமிட்டட் திரு. ரவிச்சந்திரமோகன் அவர்கள். 'ஆகவே' நான்கு இதழ்களினதும் நிரந்தர விளம்பரதாரர். இரண்டாவது மூன்றாவது இதழ்களின் வருகைக்குக் காரணமாக இருந்த ஜேர்மன் நண்பர் பார்த்திபனும் நான்காவது இதழின் வருகைக்குக் காரணமாக இருந்த பிரான்ஸ் நண்பர் கி.பி. அரவிந்தனும் ஏனையவர்கள். அந்தவகையில் விளம்பரதாரர்கள், அன்பளிப்பாளர்கள், நிரந்தர வாசகர்கள் என்போர்களது தொடரறா உறவை 'ஆகவே' எதிர்பார்க்கிறது. கால இடைவெளியையும் தொடர்ச்சியையும் பேணத் திட்டமிடப்பட்டுள்ளது. மாத இதழாகவும் திறந்த உரையாடற்களமாகவும் 'ஆகவே' வெளிவரும் என்பதால் அனைத்துப் படைப்பாளிகளையும் பங்களிப்புச் செய்ய ஆகவே அழைப்பு விடுக்கிறது.

●

ஓர் உறவுக்காரச் சிறுமி லண்டனிலிருந்து வந்திருந்தார். அவர் ஆங்கிலம், தமிழ், பிரஞ்சு, ஜேர்மனி, இலத்தீன், ஸ்பானிஷ், டச்சு உள்ளிட்ட பத்துக்கு மேற்பட்ட மொழிகள் கற்றுத் தேர்ந்திருந்தார். இலண்டனிலேயே பிறந்து அங்கேயே கல்விகற்று வாழ்ந்துவரும் அவர் தமிழில் மிதமிஞ்சிய தேர்ச்சி பெற்றிருந்தது ஆச்சரியத்தை அளித்தது.

அவரிடம் நான் எந்தமொழி கற்பதற்கு இலகு என்றும் எது கடினமென்றும் எது அதிகம் பிடித்தது என்றும் வினவினேன். கற்றுக்கொள்வதற்கு இலகுவானமொழி ஆங்கிலமென்றும் கடினமானமொழி தமிழ் என்றும் அதிகம் பிடித்தமொழி ஸ்பானிஷ் என்றும் சொன்னார். அதற்கு அவர் குறைவான எழுத்துகளைக் கொண்டது ஆங்கிலம் என்றும் மிக அதிகமான எழுத்துக்களைக் கொண்டது தமிழ் என்றும் இலக்கியச் செழுமை கொண்டது ஸ்பானிஷ் என்றும் நிறைய உதாரணங்களுடன் விளக்கினார். உண்மையில் தமிழ் நெடுங்கணக்கு ஆழ்ந்த மறுபரிசீலனைக்குரியது என்பது எனது எண்ணம். உகர ஊகார உயிர்மெய்ச் சேர்க்கைக்கு இரு குறியீடுகளை விரைந்து நாம் கண்டுபிடிக்கவேண்டும். தற்போது ஐயும் ஔவும் 'அய்' ·'அவ்' என்று பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களை 52 அல்லது 60 இற்குள் குறைப்பதன் மூலம் ஆங்கிலத்துக்கு நிகராக தமிழைக் கொண்டுவரமுடியும். அதுவரை ஆங்கிலத்தைப் புறக்கணிக்க முடியாது. 'ஆகவே' ஆங்கிலத்திலும் தமிழிலும் சம புலமை எய்துவதே இப்போதைக்கு உலகை முழுமையாக எதிர்கொள்வதற்கான வழியாகும்.

11 ஜுன் 2002 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் நினைவுப்பேருரையாக ஆற்றப்பட்டு பிரவாதம் தொகுதி/ 2 இல் பிரசுரமான பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்களின் தாய்மொழிக்கல்விக்கான நியாயம்: நேற்று, இன்று, நாளை என்ற கட்டுரையின் ஒருபகுதி பொருத்தம் கருதி சிறப்புக்கட்டுரையாக நன்றிகளுடன் பிரசுரமாகின்றது.

காசுக்கட்டளையாக:
பெயர் - A. J. C. சாந்தவதனி
அஞ்சல் அலுவலகம் -
உடுப்பிட்டி

பங்களிப்பு:
தனி இதழ்: 45 ரூபா
ஓராண்டு: 500 ரூபா
இரண்டாண்டு: 1,000 ரூபா
ஆயுள்: 20,000 ரூபா

வெளிநாடு:
தனி இதழ்: 3US $
ஓராண்டு: 40 US $
இரண்டாண்டு: 100 US $
ஆயுள்: 500 US $

• சிறப்புக் கட்டுரை •

## ஆங்கில வழிக்கல்வியின் பயன்கள்

— பேராசிரியர் சி. சிவசேகரம் —

ஆங்கிலமே கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்று வாதிப்பவர்கள் முன் வைக்கும் சில வாதங்கள் தவறான தகவல்களின் அடிப்படையிலானவை. தென்னாசியாவுக்கு வெளியே வட ஆபிரிக்கா முதல் ஜப்பான் வரையிலான நாடுகளின் ஏகப் பெரும்பாலான மக்கள் தம் நாட்டின் பிரதான மொழியிலோ தாய் மொழியிலோதான் தமது கல்வியைப் பெறுகின்றனர். ஆங்கிலம் உலகப் பொது மொழியாகப் பெற்ற பின்னருங்கூட, இந்த நாடுகளில் அதை எல்லாருங் கற்க வேண்டும் என்ற தேவை உருவாகவில்லை. இது அவ்வாறு நம் வாழ்நாளில் நிகழும் என்பதும் ஐயமே. சீனா, ஜப்பான், அரபு நாடுகள், ஈரான், தாய்லாந்து, கொரியா போன்ற நாடுகளில் நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவை மக்கள் தமது தாய் மொழியிலேயே பெறுகின்றனர். அமெரிக்க சார்பு இஸ்ரேலில் கூட, 1948க்குப் பிறகு புத்துயிரூட்டப்பட்ட ஹீப்று மொழியிலேயே பல்கலைக்கழகக் கல்வி வழங்கப்படுகிறது.

உயர் கல்வி ஆங்கிலத்தில் வழங்கப்படும் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் ஆங்கிலக் கல்வி மூலம் நன்மையடைவோர் பெரும்பாலும் படித்த உயர் - நடுத்தர வர்க்கத்தினரும் நடுத்தர வர்க்கத்தின் ஒரு சிறு பிரிவினருமேயாவர். ஆங்கிலமே கல்வி மொழியாக வேண்டும் என்போர், எல்லாருக்கும் ஆங்கிலத்தையே போதனா மொழியாக்கலாம் என்ற தீர்வை முன் வைக்கின்றனர்.

இது எவ்வளவு தூரம் நடைமுறைக்கு ஏற்றது என்பதும் சமூகத்தின் மீது இதன் பாதிப்பு என்ன என்பதும் பற்றி கொலனி ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளில் நடந்தவற்றை வைத்துப் பயனுள்ள முடிவுகட்கு நாம் வரலாம். இது விரிவான ஒரு ஆய்வுக்குரியது என்றாலும் ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும், ஸ்பானிய மொழியும் இன்று ஆபிரிக்காவிலும் அமெரிக்கக் கண்டங்களதும் அவுஸ்திரேலியாவினது பல்வேறு தீவுகளதும் பழங்குடிகளது மொழிகளின் இடத்தைப் பிடித்துள்ளன. சில இடங்களில் ஐரோப்பிய மொழியே தாய் மொழியாகிவிட்டது. மற்ற இடங்களில் தாய் மொழியின் பாவனை மிகவும் வரையறுக்கப்பட்டுவிட்டது. இந்த இடங்களிலெல்லாம் அயல்மொழி ஆதிக்கம் அடிமைப்பட்ட மக்களில் ஒரு சிறு பகுதியினர் போக மற்றவர்களை மேலும் அடிமையாக்கி உள்ளது அல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஆங்கில மொழிக் கல்வியின் தேவை முழுச் சமூகத்தினதும் மேம்பாட்டுக்கானது என்பதோ, நமது மொழிகளால் ஆங்கிலத்தாற் போல நவீன தகவல்களை வழங்க இயலாது என்பதோ செல்லுபடியாகும் வாதங்கள் அல்ல. நமது மொழிகளுடைய இடத்தில் ஆங்கிலத்தைப் பிரதியிடுவதன் மூலம் நமது மொழியின் வளர்ச்சிக்கு உதவமாட்டோம் என்பது மட்டும் உறுதி.

அதேவேளை, எவரும் ஆங்கில மூலம் கற்பதும் ஆங்கிலத்தில் புலமை பெறுவதும் அப்படியே தீயன என்றோ பயனற்றன என்றோ நான் கூறவில்லை. சில சூழ்நிலைகளில் ஆங்கில மூலமே சில துறைகளில் பயிற்சி பெறமுடிகிறது. நமது தாய் மொழியிற் போதியளவு நூல்களும் நவீன அறிவும் தொழில்நுட்பமும் சார்ந்த செயற்பாடும் இல்லாத போது ஆங்கிலத்தில் புலமை பெற்றோர் மூலமே நமக்கு வேண்டிய விடயங்களை நமது சமூகத்திற்குப் பெற்றுத்தர முடிகிறது.

நமது பின்தங்கிய பொருளாதார, தொழில் வளர்ச்சி என்பன காரணமாக மட்டுமன்றிச் சமூக அநீதிகள் காரணமாகவும், தாய் நாட்டிற் தொழில் வாய்ப்புப் போதாத நிலை, படித்த, பயிற்சி பெற்ற இளவயதினருக்கு ஏற்பட்டுள்ளது. அவர்கள் தொழில் தேடி அயல் நாடுகட்குப் போகுமாறு கட்டாயத்திற்குள்ளாகின்றனர். இச்சூழ்நிலைகளில் ஆங்கில அறிவு அவர்கட்குக் கைகொடுக்கிறது. தாய்மொழி உட்பட இரு மொழிப் புலமையுடையோரால் அயல் மொழிகளினின்று பயனுள்ள பல விடயங்களை நமக்குக் கொண்டுவர முடியும். இன்று உலகிற் பன்மொழிப் புலமையுடைய பெரும்பாலோருக்கு ஆங்கிலப் புலமை உள்ளது. எனவே ஆங்கிலம் வாயிலாகவே உலக இலக்கியங்கள் பலவும் அயல் நாட்டுத் தகவல்களும் நம்மை வந்தடைகின்றன.

பன்னாட்டு வணிகம், தொலைத் தொடர்பாடல் போன்ற விடயங்களிலெல்லாம் ஆங்கில அறிவு பயனுள்ளதாக இருப்பதை நாம் மறுக்க இயலாது. இவ்வாறு பொதுப்படவே ஒரு அயல் மொழிப் புலமையாற் கிட்டும் நன்மைகளில் ஆங்கிலம் அந்த அயல் மொழியாயிருப்பது ஒரு படி கூடுதலான நன்மை தருகிறது என்பதையும் ஏற்க வேண்டும். ஆயினும், மேற்குறிப்பிட்ட காரணங்கள் தாய் மொழிக் கல்வியின் இடத்தில் ஆங்கிலத்தைப் புகுத்தப் போதியனவா?

சற்றுக் கூர்ந்து நோக்குவோமாயின் முற்குறிப்பிட்ட நன்மைகள் யாவும் குறுகிய கால நோக்கிலோ தனிப்பட்ட ஒருவரது உடனடியான பிரச்சனைகளின் நோக்கிலோ செல்லுபடியானவை. அவற்றை நீண்டகால நோக்கில் நன்மையானவையென்று கொள்ள இயலாது.

தாய் மொழி மூலமே உயர் கல்வி கற்பிக்கப்படும்போது அயல் மொழியில் அறிவியல் தொழிநுட்பத் தகவல்களைத் தாய் மொழிக்கு மாற்றுவதன் தேவை ஏற்படுகிறது. அதன் விளைவாக மொழி பெயர்ப்பு முயற்சிகளும் அயல் மொழி மூலம் பெற்ற தகவல்களைத் தாய் மொழியில் மீள வழங்கும் முயற்சிகளும் பெருகுகின்றன. கலைச் சொல்லாக்கம் மொழி நடைமுறைக்கு நெருக்கமாகின்றது. இவற்றின் விளைவாக மொழி வெவ்வேறு அறிவுத் துறைகட்கு ஏற்ற வளர்ச்சியைப் பெறுகிறது.

இந்த அணுகுமுறை ஒரு தென்னாசிய அரசாங்கக் கொள்கையாகும் போது ஆங்கிலப் புலமையுடையவர்கள் அனுபவித்து வந்த சில வசதிகள் அவர்கட்கு இல்லாது போகின்றன. இது தனிப்பட்ட முறையிலும் சமூக அளவிற் சிறிதும் பாதகமானதுதான். ஆயினும், ஆங்கிலம் மூலமே கல்வி என்ற கொள்கை சமூகத்தில் எந்தளவு பெரிய பகுதியினருடைய உயர் கல்வி வாய்ப்பை மறுக்கிறது என்பதையும் நாம் நினைவிலிருத்த வேண்டும்.

ஒரு நாட்டு மக்கள் அயல் நாடொன்றிற் தம் உழைப்பை விற்க வேண்டிய நிலை குறை வளர்ச்சியின் அடையாளமே ஒழியச் சமுதாய விருத்திக்கான தளமல்ல என்பதைக் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக நாம் அனுபவ வாயிலாகக் கண்டுள்ளோம். சமூகத்தின் ஒரு பகுதி அயல் நாட்டு வேலைவாய்ப்பில் தங்கியிருப்பது, ஒரு சமூகத்தின் சீரான வளர்ச்சிக்கோ மேம்பாட்டுக்கோ வழிகாட்டாது. எனவே, கல்வி பற்றிய முடிவுகளை இவ்வாறான விடயங்களின் அடிப்படையில் எடுக்க இயலாது.

சில துறைகளில் தாய் மொழியினது பின் தங்கிய நிலைக்கும் சமூகத்தின் பின் தங்கிய நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இப் பின்தங்கிய நிலைகள் ஒவ்வொன்றினின்றும் மீள்வதற்குத் தாய் மொழிக் கல்வியின் புறக்கணிப்பு எவ்வகையிலும் உதவப்போவதில்லை.

ஆங்கில வாயிலான கல்வியும் ஆங்கில மொழிக் கல்வியும்

ஆங்கிலத்தினூடாகவே பல தகவல்களைப் பெறவேண்டிய தேவை அல்லது பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற ஒரு உலகச் சூழலில் மூன்றாமுலக நாடுகளில் ஆங்கில அறிவுக்கான தேவை தொடர்ந்தும் இருக்கும். இதற்கு முகங் கொடுக்க அத்தகைய தகவல்கள் தேவைப்படும் ஒவ்வொருவரும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். அல்லது அவை கிரமமாகத் தமிழ் மொழிக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

தாய் மொழிக் கல்வி முதன்மைப்படுத்தப்படும் நாடுகளில் இரண்டு விதமான அணுகுமுறைகள் செயற்படுகின்றன. ஒவ்வொரு துறையிலும் பரவலாக அறியப்பட வேண்டிய தகவல்கள் தொகுக்கப்படும் நூல்களாகவோ கட்டுரைகளாகவோ தாய் மொழியிற் கிடைக்கின்றன. அரிதாகவே பயன்படும் தகவல்களை அறிய விரும்புவோர் நேரடியாகவோ இன்னொருவர் உதவியுடனோ தகவல்களை ஆங்கிலத்திற் பெறுகின்றனர். இதன் மூலம் நாம் காணுவது ஏதெனில், தாய் மொழி வழிக் கல்வி என்பது வேறு எந்த அயல் மொழியையும் கற்பதற்கு மாறான ஒரு கோட்பாடல்ல என்பதே.

சமூக மட்டத்திற் கல்வி தாய் மொழி வாயிலாகவே வழங்கப்படும் அதேவேளை, பயனுள்ள எந்த அயல் மொழியையும் கற்பதற்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவது சமூகத்துக்கு மிகவும் பயனுள்ளது. கற்கப்படும் அயல் மொழிகளில் ஒன்றாக ஆங்கிலம் இருக்கும் என்பது நமது சூழலில் எதிர்பார்க்கக் கூடியதே. ஆயினும் அது ஆங்கிலமாக மட்டுமே இருப்பது நமது சமூகத்திற்கும் பிற சமூகங்களுக்குமிடையே விருத்தி செய்யக் கூடிய உறவிற்கு அதிகம் உகந்ததல்ல. ஒவ்வொரு மொழி பெயர்ப்பும் தகவல்களின் இழப்புக்கோ திரிபுக்கோ இடம் தரும் என்பதால் பிற மொழிகளினின்று நேரடியாக நமது மொழிக்குத் தகவல்கள் கொண்டு வரப்படுவது பயனுள்ளது.

ஆங்கிலமே கல்விக்கான மொழியாக இருக்க வேண்டும் என்போர் தமது குறுகிய தேவைகளதும் அனுபவத்தினதும் அடிப்படையில் கல்விப் பிரச்சினையைப் பார்க்கின்றனர். அத்துடன் தாய் மொழிப்பாவனை மூலம் மக்கள் பெறக்கூடிய நலனையும், நவீன சிந்தனைகள் தாய் மொழியில் விருத்தி செய்யப்படவேண்டிய தேவையையும், இவற்றின் வழியே சமூகச் சிந்தனை காணும் வளர்ச்சியையும் மறுக்கின்றனர். இவர்கள் எவ்விதமான புதிய நியாயங்களை முன் வைத்தபோதும், இவர்களது அணுகுமுறை கொலனிய யுகத்தின் ஆங்கில மோகத்தையும் மேலாதிக்கத்தையும் சார்ந்தே உள்ளது.

மறுபுறம், 'ஆங்கிலமே வேண்டாம் என்பது ஒரு கிணற்றுத் தவளை மனோபாவமாகும். தாய் மொழியிலேயே நமக்கு வேண்டிய எல்லாமே உண்டு என்பதோ, தாய் மொழியில் மட்டுமே இயங்கித் தமது சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யலாம் என்பதோ நமது சூழலின் யதார்த்தத்துக்குப் பொருந்தாது. ஆங்கிலம் ஒரு விருப்பப் பாடமாகவோ, சில சூழ்நிலைகளில் ஒரு கட்டாயப் பாடமாகவோ சகல மாணவர்கட்கும் கற்கக்கிடைப்பது நல்லது. நவீனத்துவத்துக்கு முகங் கொடுக்கும் ஆற்றலைச் சமூகத்துக்கும் தாய் மொழிக்கும் இயலுமாக்க இன்று இது தேவை.

ஆங்கிலம் இல்லாமல் இயலாது என்பதும், ஆங்கிலம் இருப்பது கூடாது என்பதும் ஒரே அளவு தவறானவை. இளம் பருவத்தில் அயல் மொழிகளைக் கற்பது இலகு. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட அயல் மொழிகளில் மாணவர்கள் தேர்ச்சி பெறுவதை நாம் ஊக்குவிக்க வேண்டும். அந்த மொழிகள் யாவை என்பது சமூக நலன் சார்ந்த ஒரு முடிவாகவே அமையக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று கவிதைகள்

# பிரியம் மறுத்தவளுக்கு

- தாரா. விஷ்ணு -



**— 1 —**

எங்கிருந்து ஆரம்பித்தாலும்
இறுதியில் என்னவோ
பூச்சியத்திலேயே வந்து முடிகிறது
எமது எல்லா வார்த்தைகளும்

நம்பிக்கை இழந்து போன பின்பும்
தூண்டில் போடும் சிறுவனாய்
காத்திருக்கிறேன் உனதருகில்
உன் ஒற்றை சிணுங்கலுக்காய்

ஆயிரம் ஊசி முனைகளாலான
வார்த்தைகளை என் மீது வீசி விட்டு
விலகிவிடுவாய் பல சந்தர்ப்பங்களில்

அடிக்கடி முரண்படும் வார்த்தைகளுடன்
தொடங்கும் எமது சந்திப்புக்களை
முன்பே தவிர்த்து விடுவதற்காய் முயன்று
தோற்றுப்போய் வீடு திரும்புகையில்
உன் வார்த்தைகள்
என் அறைச் சுவரில் தொங்கிய படி
உற்றுப் பார்க்கும் என்னை.

03.03.2004

**— 2 —**

உன் மீது எந்த வருத்தமும் இல்லை
வெறுமனே ஒரு வட்டத்துள்
சுற்றிக் கொண்டிருக்கிறேன்

என் அறையுள் சுற்றும்
வண்ணத்துப் பூச்சியின் இறக்கை மீது
என் நட்புள் நசிங்கிப் போவதாய்
நீ புலம்பும்
உனது பாடல்களை
ஏற்றி விட்டிருக்கிறேன்

நீ கேட்கும் உனது எதிர்காலம்
வண்ணத்துப் பூச்சியின் வெளிக்கிளம்புகையுடன்
மீளர்ச்சி கொள்ளும்

என் அறைவிட்டுப் போகும்
வண்ணத்துப் பூச்சி போலதான்
எனக்கு இனி நீ எப்போதும்.

17.03.2004

**— 3 —**

திண்மம் உருக்கும்
உன் வார்த்தைகளுக்கு நடுவே
அல்லாடிப் போகிறது மனசு

காதலின் மென்மை பற்றி
நீ பேசிய வார்த்தைகள்
நிறைந்து போன இருட்டறைக்குள்
மோதித் திரும்புகிறது
குருட்டு வெளவால்

உழுத்துப்போன முன்னைய நினைவுகள்
மிதிபடுகையில்
அருவருப்பு ஏறுகிறது

நான் எதனையும் நினைவுபடுத்துவதில்லை
முன்பு எப்போதோ செத்துப்போன பல்லியை
அப்புறப்படுத்துகிறேன்
என் அறையிலிருந்து.

15.04.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செப்பனிடல்

- ஜபார் -

வெள்ளம் கொண்டுபோன வீதியை
மீளவும் செப்பனிடுகிறார்கள்
பெருங்கற்களுடையே சிறுகற்கள் நிரவ
பரத்திச் செல்கிறது இரும்புருளை
புத்தூவலெனச் சிந்தும் தார்மீது
மண் வீசிச் செல்கிறது ஓர் உழவியந்திரம்
மூர்ச்சையுற்ற வீதி மெல்ல உயிர் கொள்ள
வழிப்போக்கனியொருத்தி சொல்லிச் செல்கிறாள்
'இம்முறை
இடைமழையுமில்லை அடைமழையுமில்லை
பெருமாரியும் பொய்க்கப் போவதில்லை'
கொதித்த தாரின் கடைசி வாளியை நிரப்பிய
நொண்டிச் சிறுவன் விஷமச் சிரிப்போடு
அடுத்த பீப்பாய்க்குக் கீழே
தீ மூட்டிக் கொண்டிருக்கிறான்.

## மூதாட்டியின் விழிகளுக்குள் ஒளிர்வுறும் கனவு

- யாத்திரீகன் -

காவு கொள்ளப்பட்ட
நகரத்தின் சாட்சியாய்
வாடிக்கிடந்தன பூக்கள்

முன்னைய நாட்களில்
பூக்கள் அழகாய்
இருந்ததாய்
பொக்கைை வாய்
திறந்து பாட்டி
சொற்களை விழுத்தினாள்
தனது சொந்த
ஊரிலேயே சாக
வேண்டும் என்ற ஆசை
நிறைவேறாமலே
விழிகளை மூடினாள்

இன்னும் பாட்டியின்
ஆத்மா அலைவதாகவே படுகிறது.


## ஏன்?

ஆங்கில மூலம்: சீதா குலதுங்க
தமிழில்: ந. சத்தியபாலன்

"ஏன்? அவனுக்கு என்ன குறை?"
"ஒன்றுமில்லை" என்றாள்
"பிறகு...? அழகானவன் பணக்காரன்
நடத்தையும் நல்லது
தலையும் வழுக்கையில்லை
வயதும் அதிகமில்லை"
அனுபவம் மிகுந்த தன்குரலில்
ஆதுரமாய்க் கூறினார்
ஜினதாஸ மாமா
"காரணத்தைச் சொல் மகளே
காரணத்தைச் சொல்"
தொண்டையைச் செருமி
சரி செய்தவாறே
அவள் சொன்னாள்
"அவன் தேனீரை
ஸோஸரில் ஊற்றிக்
குடிக்கிறான்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெரு நாயின் வீணீர் இழுபடும் மனித முகத்தின் சூனியம்

- சித்தாந்தன் -

சீழ் வடிந்த காயத்தின்
உலரா முகத்தோடு
வீரிட்ட குழந்தையின் அழுகை ஒலியில்
ஈக்கள் மொய்த்துக் கிடந்தன.

ஏழு கடல்களையும் புரட்டியெடுத்து
இமைகளுக்குள் பொத்தி
தாகம் தணியாத உவர்நீரை
உள்ளூத்துப் பொருமிய உதடுகளின் நெறிப்பில்
கண்களின் ஒளியுதிர்ந்து போனதெனக்கு.

நீண்ட கால்களையும்
அதனது பருத்த தொடைகளையும்
பிடுங்கி எறிந்திடக்கிடந்த பெண்ணின்
மார்பிடுக்கின் வழியே
தாய்மையின் குருதி வழிந்தோடியது.

நூற்றுக்கணக்கான
ஜீவ பிரசவிப்பின் பின்னான
இரவு ஒன்றில்
மூடக்கிழவியொருத்தி பிணமானாள்.

துயில் தேவதைகளின்
கரிய துகில்களினால் மறைப்புண்டு
ஒப்பாரிப்பாடல்களின் பீறிட்ட குரலில்
அவளது மரணம்
புழுக்கள் கெம்பி நெழிய நிகழ்ந்தேறியது.

குழந்தைகளினது
பாற்பற்களில் விஷமேற்றி
நடுநிசிகளில் அலையவிட்டு
தாலாட்டுப் பாடல்களைப் பாடிய
கொந்தளிக்கும் அலையில்
கடல் நடுங்கிச் செத்தது.

(நட்சத்திரங்களும் பூக்களும்
பிந்தித்தான் ஜனித்தன)
கருநீல நிறத்தை உருக்கி
வளையமாக்கி ஒளியூட்டி
விழிகளுக்குள் சொருகிய கடவுள்
இருட்டில் அதன் ஒளியை பறித்தெடுத்து
தன் கபாலங்களுக்குள் ஊற்றி வைத்தான்.

நிழல்களின் அசைவுகளில்
பச்சைக் குழந்தைகள் கோடுகள் வரையக்
கோடுகள் பாம்புகளாகி
நகர்ந்தன புவி வெளியில்.

நரகமோ
சொர்க்கமோ என்ற
புரியாச் சொற்களின் இடைவெளியிலே
ஆதிக் கிழவி அழுத
ஏராளம் வார்த்தைகளின் ஈரம்
குருதிப் பிசுபிசுப்போடிருந்தது.

கடவுளின் பெயரால்
சிதைவுகளிலிருந்து மீண்ட மனிதன்
சிதைவுகளின் வலியிலிருந்து மீளாதவனாய்
கடவுளைச் சபித்தான்.


சாபங்களின் கடவுளோ
வன தேவதைகளின்
இறுகிய மார்புக் குவடுகளுக்கிடையில்
கண்களை மெல்ல மூடிக்கிடந்தான்.

மனிதர்களின் குரல்
நிராதரவாய் காற்றுவெளியிடை
அலைகின்றது அர்த்தமற்றதாகி.

16.03.2003 இரவு 11:02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைதெறிக்க ஓடுதலாய வாழ்வு

- த. அஜந்தகுமார் -

வெள்ளம் ஓடும்
தெருவில்
உடுப்பெல்லாம் சேறடிக்க
நடந்து கொண்டிருந்தேன்

லண்டன் மாநகரில்
குண்டு வெடிக்க
பதைபதைத்து...
காரையும் விட்டு விட்டு
ஓடிக்கொண்டிருந்தேன்

விமானம் பறக்க
உயர்ந்த பயணத்தின்
குதுகுதுப்போடு
பறந்து கொண்டிருந்தேன்

கட்டுநாயக்காவில்
நான் வந்திறங்க
காத்திருந்த அம்மாவை அப்பாவை
தங்கச்சிகளை...
கனநாளாகக் காணாத
தீராப் பாசத்துடன் உச்சிமோர்ந்து
தழுவி... ஆயிரம் கதைபேசி...
ஹயஸ் வானில் ஏசியின் குதுகுதுப்பில்
பயணித்துக் கொண்டிருந்தேன்

தொடங்கிய இடத்துக்கே...
பிரிகை அடைந்து ஓடிய புள்ளிகள்
களைத்துத் திரும்பின.

வாகனம் ஒன்று
சேற்றினை வாரி இறைத்துவிட்டு
நிற்காது போயிற்று.

வெற்றிடத்தில் காற்றுப் புகுமென்று
யாரோ எதுக்காயோ
யாருக்கோ சொல்லிக் கொண்டிருந்தது
காற்றோடு வந்து
என் காதில் இறங்கியது.

திரும்பிய புள்ளிகள்
இருக்கப்படாது அந்தரமுற்று
திமிறித் துடித்து
கட்டறுத்து தலைதெறிக்க
ஓடத் தொடங்கின.

நான் இப்போ
பாரிஸ் நகரத்துப்
பனி விழும் தெருவில்
என் செல்ல மகளைக் கொஞ்சியபடி
காரில் போய்க் கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஹீரோ


மூன்று மணியளவில் தொடங்கலாமென்று சொன்னார்கள். இண்டைக்கு ரீச்சருடைய லன்ஞ். இரண்டரைக்கு முடிஞ்சிடும் மூண்டு மணியளவில் அவையள் வந்திடுவினம். சேர் போகாதையுங்கோ நில்லுங்கோ. நிருபன்தான் சொன்னான்.

அரை மனத்துடன் தலையசைத்தார். ஐந்தாறு வருடங்களின் பின்பு மீண்டும் கிரிக்கட் விளையாடும் சந்தர்ப்பம். ஐம்பது வயதாகியும் மனத்திலிருந்து ஆர்வம் குறையவில்லை. சபலம் நீங்கவில்லை. நினைக்கும் போதெல்லாம் கைகளில் சுழலும் பந்து; மெதுவாக ஓடி கையை உயர்த்தி வீசுகையில் நிலத்தில்பட்டு சற்றே வலது பக்கம் திரும்பி மட்டை பிடிப்பவரைத் திகைக்க வைக்கும் பந்து; ஏமாற்றும் பந்து; சட்டென்று சுதாகரித்து மட்டையைக் கொடுக்கையில், மட்டையில் பட்டெழுந்து 'கச்' சாகப் பரிணமிக்கும் பந்து; என்னை அடி என்னை அடி என்று ஆசை காட்டி எல்லைக் கோட்டருகே பிடியாகிப் போகும் பந்து எதிர்பாராது விக்கட் சரிய, நம்பமுடியாது திரும்பிப் பார்த்துப் பார்த்துப் போக வைக்கும் பந்து.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்னான போர்க்காலச் சூழலில் வீட்டை விட்டுப் புலம் பெயர்ந்து வேறோர் நகரத்தில் தங்கியிருந்த காலத்திலேயே ஒரு பிரகாசமான மாலையில் கடைசியாகக் கிரிக்கட் விளையாடினார். தங்கியிருந்த வீட்டின் அயலிலிருந்த சிறிய பூங்காவில், மாலை நேரத்தில் விளையாடும் விடலைகள் 'அங்கிள், அங்கிள்' என்று கூப்பிட்டு அவரையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டார்கள். அவர் தங்கியிருந்த வீட்டின் புதல்வனும் ஒருவனான படியால், அவனது தொல்லை தாங்காது அவரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

அவரைப் போல வேறும் ஒரு வயதானவர். இரண்டு கன்னையாய்ப் பிரிந்து விளையாடியதில் மற்ற வயதானவர் மட்டை பிடிக்கும் பக்கமும், இவர் பந்து தடுக்கும் பக்கமுமாய் '.. எல்லைக் கோட்டினருகே பந்து தடுப்பதில்' பீறிட்டுக் கிளம்பி வந்த பந்து இவரையும் மீறி எல்லைக் கோட்டைக் கடந்து நான்கு ஓட்டங்களில் முடிந்தது. ஒரு வித ஆற்றாமையுடன் இவர் நிமிர, வாகாய்ப் பறந்து வந்த அடுத்த பந்து இவர் கைகளில் பிடியாகிப் போனது. ஆரவாரமும் பாராட்டும் கை தட்டலும் கை குலுக்கலுமாய்.. என்றாலும் மற்றவர்களை

'பாஸ்ற் எண்டது அவை யவையின்ரை சக்தியைப் பொறுத்தது. வோல் பண்ணேக்கை துல்லியமும் நிதானமும்தான் முக்கியம்'



ஆட்டமிழக்கச் செய்ய முடிய வில்லை. நாலாபுறமும் பந்தை அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தார்கள். ஓட்டங்கள் பெருகிக் கொண்டிருந்தன.

அங்கிள் நீங்கள் வோல் பண்ணுவியளே அவநம்பிக்கையுடன் தான் ஒருவன் கேட்டான். போட்டுப் பார்ப்போம் என்றார் இவர்.

மிதமான வேகத்துடன் வீசிய பந்து, வாகாக மட்டையில் பட்டு நிலத்தில் படாமல் எல்லைக் கோட்டைக் கடந்து ஆறு ஓட்டங்கள் எதிர்ப்பக்கத்தினர் குதூகலித்தார்கள். இவர் பக்கத்தினர் ஏளனத்துடனும் அவநம்பிக்கையுடனும் ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

அடுத்த பந்து நிலத்தில் பட்டு சற்றே வலது பக்கம் திரும்பி எகிறி சற்றும் எதிர்பாராது, விக்கெற்றின் வலது பக்க ஸ்டம்பைத் தட்டிச் செல்ல, மட்டை பிடிப்பவன் நம்பமுடியாமல் திரும்பிப் பார்த்து மைதானத்தை விட்டுச் செல்ல.. ஒரே ஆரவாரம்.

அடுத்த பந்து எதுவுமே நடக்கவில்லை.

அடுத்த பந்து மட்டையில் பட்டு மெல்ல உயர்ந்து பந்தை வீசியவரின் கைகளில் அடைக்கலம் புக. ஆரவாரமும் பாராட்டுக்களும் கட்டிப் பிடிப்புக்களும் கை உயர்த்தல்களுமாய்.

- குப்பிழான் ஐ. சண்முகன் -

அடுத்து எங்கள் பக்கம் மட்டை பிடிக்க வேண்டும் அதற்கான ஆயத்தங்கள் நடக்கையில் எங்கள் வீட்டின் புதல்வன் சொன்னான், விக்கெற்றுகள் கிடைத்தது தானெண்டாலும் நீங்கள் கொஞ்சம் பாஸ்ராய் வோல் பண்ண வேணும் அங்கிள்

'பாஸ்ற் எண்டது அவையவையின்ரை சக்தியைப் பொறுத்தது. வோல் பண்ணேக்கை துல்லியமும் நிதானமும்தான் முக்கியம்'

வீட்டின் புதல்வன் உட்பட எல்லா இளசுகளும் அவர் கருத்தை அசட்டை செய்வதாய், அலட்சியமாகவே பார்த்தார்கள்.

வேகம் வேகம். எங்கும் எதிலும் எப்போதும் வேகம் வேகம் .எங்கை எதிலை போய் முடியப்போகிறதோ.

ரீச்சரின் லன்ஞ் முடிந்து, சம்பிரதாய உரைகளும் முடிந்து மரியாதையான விடைபெறல்களும் முடிந்து'' நேரமும் மூன்றைத் தாண்டிவிட்டது. அவர்கள் இன்னும் வரவில்லை.

சர்வதேச ஆசிரியர் தினத்தை ஒட்டி இரண்டு கல்லூரி ஆசிரியர் குழுக்களுக்கிடையேயான கிரிக்கட் போட்டி மூன்றரை மணியளவில் அவர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினார்கள். எல்லோரும் இளைஞர்கள். இருபதிற்கும் முப்பதிற்கும் இடைப்பட்டவர்கள். பந்து விளையாடிப் பயிற்றப்பட்டவர்கள் போல் மைதானத்தில் ஓடியாடிப் பயிற்சி செய்தார்கள்..

எங்கள் அணியில் அரைக்கிழங்களே அநேகர். இரண்டு, மூன்று இளைஞர்களைத் தவிர மற்றவர்கள் இரண்டு, மூன்று நாட்களே பந்தைத் தொட்டுப் பயிற்சி செய்தவர்கள்.

ஒரு வழியாக நான்கு மணியளவில் ஆட்டம் தொடங்கிற்று. இருபது ஓவர்கள் மட்டுப் படுத்தப்பட்ட போட்டி. எங்கள் அணியினரே முதலில் மட்டை பிடித்தார்கள்.

அவர் மனது சஞ்சலப்பட்டது. அவர் ஒருவரே ஐம்பது வயதினர். வெறும் பார்வையாளனாக இருந்து நழுவி விடலாமோ என்று எண்ணினார். அவரையும் சேர்த்தால் தான் எங்கள் அணியில் பதினொருபேர் தேறுவார்கள். பாடசாலை வளாகத்தில் பிரதான மண்டபத்தில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் எங்கள் ஆசிரியர்கள் வந்தால் அவர் நழுவலாம்தான்.

நழுவலாமா? மனதில் மீண்டுமொரு முறை பந்து வீசிப் பார்க்கலாம் என்ற ஆசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் அவர் இங்கு இடமாற்றலாகி வந்த புதிதில், இதே மைதானத்தில் நிகழ்ந்த ஒரு சினேகபூர்வமான ஆட்டத்தில் அவர் பந்து வீசிப் பெற்ற நான்கு விக்கற்றுகள், மூன்று ஓவர்கள் பந்துவீசி பன்னிரண்டு ஓட்டங்களைக் கொடுத்துக் கைப்பற்றிய நான்கு விக்கற்றுகள். வெற்றிப் பெருமிதம் பின்னர் நடந்த தேனீர் விருந்தும் பூரிப்பும்.

இப்போது பழைய நண்பர்கள் எவரும் இங்கில்லை அவரவரும் இளைப்பாறியும் இடமாற்றம் பெற்றும் சென்று விட்டார்கள். இருக்கும் இரண்டொருவரும் எதிலுமே ஈடுபாடு இல்லாதவர்கள். இவர் மட்டும் தனித்துப் போய் விட்டார். இவரும் இன்னும் நான்கைந்து வருடங்களில் இளைப்பாற வேண்டியவர்தானே!


அது பற்றியும் அவர் காது படவும்-படாமலும் கதைத்தார்கள். இந்த வயதில் இவருக்கென்ன விளையாட்டு அதற்கும் நிருபன்தான் பதில் சொன்னான். விளையாட்டுக்கு வயதில்லை மனதில் ஆர்வமும் உற்சாகமும்தான் முக்கியம் அவரை விளையாட வேண்டுமென்று உற்சாகப்படுத்திக்கொண்டேயிருந்தான்.

மைதானத்தில் பெரிய ஆரவாரம். எங்கள் அணியில் நான்கு விக்கற்றுகள் வீழ்ந்திருந்தன. இளைஞர்களான நிருபனும்-ரமேசும் ஆடிக் கொண்டிருந்தார்கள். பந்து நாலாபுறமும் பறந்து கொண்டிருந்தது. ஆறு, நான்கு. இரண்டென ஓட்டங்கள் மளமளவென்று குவிந்துகொண்டிருந்தன. பெரிய இரசிகர் கூட்டம் ஆரவாரத்துடன் இரசித்துக்கொண்டிருந்தது.

முன்னைய போட்டிக்கு இரண்டு மூன்று வருடங்கள் பின்னர் நடந்த இன்னோர் போட்டி. எதிரணியினர் மட்டை பிடித்து ஆடுகின்றனர். ஆட்டம் முடியும் நிலையை நெருங்கிய போதிலும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை அவுட்டாக்க முடியவில்லை. நிதானமாக நேர்த்தியாக ஓட்டங்களைக் குவிக்கும் அவர்கள். அவரும் தனது மூன்றாவது ஓவரை வீசிக்கொண்டிருக்கிறார். கடைசிப் பந்திற்கு முதல் பந்து இடது பக்க ஸ்டம்ப் பறக்க.. முதலாவது விக்கெட் சரிகின்றது. அவரது பாடசாலை மாணவர்களால் நிரம்பியிருந்த பார்வையாளர் இடத்திலிருந்து பெரிய ஆரவாரம்..... அந்த ஓவரின் கடைசிப்பந்து அடுத்த விக்கெட்டின் வலப்பக்க ஸடொம் பறக்க எல்லைக் கோட்டினருகே களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த அவர் நண்பர் ஓடி வந்து அவரைக் கட்டித் தழுவ. மற்றவர்கள் ஓடி வந்து கை கொடுத்துப் பாராட்ட.. அவரது மாணவர்கள் அவருக்கு கையாட்டி மகிழ்ச்சி தெரிவிக்க..

மகிழ்ச்சி, புளகாங்கிதம், பூரிப்பு.. நானூறு ஐநூறு பேருக்கு மத்தியில் ஒரு ஹீரோவாகத் தலை நிமிர்ந்து..

மைதானத்தில் மீண்டும் பெரிய ஆரவாரம். எங்கள் அணியின் ஓட்ட எண்ணிக்கை நூறைத் தாண்டி நிருபனின் ஓட்ட எண்ணிக்கை அறுபதையும் தாண்டிவிட்டிருந்தது.



எங்கள் அணியின் ஒன்பதாவது விக்கற் சரிய பத்தாவது ஆளாக அவர் நிருபனுடன் ஜோடி சேர்ந்தார்.

ஆடி இரண்டு ஓட்டங்களைப் பெற்றிருந்தார். நிருபன் பந்தை எதிர்கொள்ளச் சந்தர்ப்பம் அளிப்பதற்காக, அடுத்த முறை பந்தைத் தட்டிவிட்டு ஓடுகையில், துரதிஷ்டவசமாக 'ரன்அவுட்' முறையில் ஆட்டமிழந்தார்.

ஒருவர்பின் ஒருவராக மைதானத்தை விட்டு நடக்கையில் நிருபனே ஹீரோவாக.. பார்வையாளர்களின் கைதட்டல்.

அவனது தனிப்பட்ட ஓட்ட எண்ணிக்கை எழுபத்திரண்டு அணியின் ஓட்ட எண்ணிக்கை நூற்றிருபது.

எங்களுக்கே வெற்றி. எதிரணியினர் நூறு ஓட்டங்களைத் தாண்ட முடியாது. நிருபன் சொன்னான்.

எதிரணியினர் மட்டை பிடித்து ஆடத் தொடங்கினர். நிருபனும் ரமேசும் ஒருவர் மாறி ஒருவராகப் பந்து வீசினர். மூன்றா வது ஆளாகத்தான் அழைக்கப்படலாமென அவர் எதிர்பார்த்தார். அவர் அழைக்கப்படாது. இந்தப் போட்டிக்கெனவே இரண்டு - மூன்று நாட்கள் மட்டுமே பந்து வீசிப் பயிற்சி பெற்ற நண்பர் அழைக்கப்பட அவர் தனக்குள் நொறுங்கிப்போனார்.

என்றாலும் ஒரு நப்பாசை. அடுத்த பந்து வீச்சாளராகத் தான் அழைக்கப்படலாம். அவரே ஓரளவாவது அனுபவப்பட்ட பந்து வீச்சாளர். பதினைந்தாவது வயதில் ஒரு பிரபல்யமான கல்லூரியில் படிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே வீட்டில் போராடிப் போராடி கிராமத்தில் தன்னை ஒத்தவர்களுடன் விளையாடி விளையாடி வளர்த்த நிறைவேறாத இளமைக் கனவு.....

நான்காவது ஐந்தாவது பந்து வீச்சாளராகவும் அவர் அழைக்கப்படவேயில்லை.

இன்னும் ஒரு ஓவர் பந்து வீச்சுக்கள் எஞ்சியிருக்கையில் எதிரணி மூன்று விக்கற்றுகளினால் வெற்றி பெற்றது.

'நான் ஏன் அழைக்கப்படவில்லை! நுட்பங்கள் தெரிந்த, இங்கிதமான, உத்வேகம் நிறைந்த கப்டன் நிருபன் ஏன் என்னை அழைக்கவில்லை?

**வேகம் வேகம். எங்கும் எதிலும் எப்போதும் வேகம் வேகம். எங்கை எதிலை போய் முடியப்போகிறதோ.**

திடீரென அவருக்கு ஏதோ ஞாபகம் வந்தது போல இருந்தது. இந்தப் போட்டிக்காக எங்கள் அணி ஆசிரியர்கள் பயிற்சி செய்த இடத்திற்கு தற்செயலாக இவர் சென்றபோது நிருபன் சொன்னான்

'சேர் நீங்களும் ஒருக்கா வோல் பண்ணிப் பாருங்கோவன் நீண்ட நெடுங்காலத்தின் பின் பந்து வீசிப் பார்த்தார். கச்சிதமாக அளவாக விழுந்து எகிறும் பந்து. நான்கு முறை மட்டுமே வீசினார்.

'எங்களுக்கே வெற்றி' தன்னை மறந்த நிலையில் சொன்னார்.

மைதானத்தில் பலத்த ஆரவாரம். திரும்பிப் பார்த்தபோது எதிரணியில் கூடிய ஓட்டங்கள் எடுத்து. அவர்களது வெற்றிக்குக் காரணமான ஆசிரியரை, அக்கல்லூரியைச் சார்ந்தவர்கள் தூக்கித் தோளில சுமந்தன...... வெற்றிக் கோசம் எழுப்பினர்.

'இன்று அவர் தான் ஹீரோ'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• சிறுகதை

# அருஞ்சின்னக் காப்பறையின் கடைசித் தடயம்

- ஜபார் -



திசைகளை எள்ளிநகையாடி விரியும் வெளி. தொடுவானமாய்க் கவியும் ஆகாயம். இடைவிடாது எதையோ பேசியபடி கடல். எல்லாவற்றையும் மௌனமாய் வேடிக்கை பார்த்தபடி மலைகள்; பாறைகள்; மரங்கள். ஒற்றைப்பாதையுடன் பீடபூமியென நிமிர்ந்து நிற்கும் வேட்டைக்காரர்களின் கோட்டை. பெருவாசல் கடந்து பெருத்த, சடைத்த அரச மரம். அதன் கீழ் அலங்காரப்பீடம். பீடத்தில் கண்களை மூடி கடைவாய் வழிந்தோடும் மிகமிக மெல்லிய புன்னகையுடன் அமர்ந்திருக்கும் கௌதமன். அவன் பின்னே சுழலுமாப் போல் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தும் இளமஞ்சள் நிற ஒளிவட்டம். மேலே நிழற்குடை.

தனிமையில் இருந்து என்னுடன் நானே நிகழ்த்திக் கொள்ளும் உரையாடல் அந்தக் கணமும் தொடர்ந்தது.

வெளி தெரிகிறதா?
'இல்லை'
கடல் தெரிகிறதா?
'இல்லை'
மலைகள் தெரிகிறதா?
'இல்லை'
பாறைகள் தெரிகிறதா?
'இல்லை'
மரங்கள் தெரிகிறதா?
'இல்லை'
ஒற்றைப்பாதை தெரிகிறதா?
'இல்லை'
கோட்டை தெரிகிறதா?
'இல்லை'
பெருவாசல் தெரிகிறதா?
'இல்லை'
அரசமரம் தெரிகிறதா?
'இல்லை'
அலங்கார பீடம் தெரிகிறதா?
'இல்லை'
நிழற் குடை தெரிகிறதா?
'இல்லை'
ஒளி வட்டம் தெரிகிறதா?
'இல்லை'
கௌதமன்
'ஆம்'

எனது கவனம் முழுவதும் இலக்கின் மீதே மையங்கொண்டிருந்தது. மையத்தினின்றும் கவனம் விலகாதிருக்க வியாபாரியாக, செம்படவனாக, சுழியோடியாக, பிச்சைக்காரனாக, விளையாட்டு வீரனாக, பைத்தியமாக, குடிகாரனாக வேஷம் புனைந்து வேஷம் கலைத்து........

இடி மின்னலுடன் பலத்த மழை வருவதை யாரும் தடுக்க முடியாது என்று ஜேம்ஸ் கிழவன் சொன்னான், வானம் அடர்ந்த கருப்பு வண்ணத்திலிருந்தது. இடைவிடாத பலத்த மழையுடன் நீளக்கூடிய ஒரு கரிய இரவைப் பலவருடங்களாக எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். அதன்பொருட்டுத் தன்னந்தனியனாக்கப்பட்டேன். உறவுகளை இழந்தேன். உடைமைகளை இழந்தேன். கிராமங்களையும் பட்டினங்களையும் காவுகொடுத்தேன். குழந்தைகளைப் பறிகொடுத்தேன். பசி கொண்டேன். தூக்கமிழந்தேன். தோள்பையிலுள்ள பொருட்களை மீண்டும் சரிபார்த்துக் கொள்ள மனதுக்குள் பட்டி யலிட்டுக் கொண்டேன்.

வெட்டும் பொறி
துருவகற்றும் திரவம்
ஆணி கழற்றும் கருவி
கட்டுப் போடும் துணி
பிளாஸ்டர்
கருப்புப் போர்வை
ஏழுவர்ண ஒளிஉமிழும் கைத்துப்பாக்கி

கைகளும் கால்களும் மிக இலாவகமாக அசையத்தக்க விதத்தில் ஆடை அணிந்து கொண்டேன்.

மீன் பிடிக்கும் படகுகள் ஒவ்வொன்றாகக் கடலுக்குள் நுழையத் தொடங்கின. கைகளில் ஒட்டியிருந்த மணலைத் தட்டித் துடைத்தேன். ஜேம்ஸ் கிழவனுடன் சேர்ந்து படகைக் கடலுக்குள் தள்ளிவிட்டுக் கிழவனுடன் நானும் ஏறிக்கொண்டேன். கடலுக்குள் நுழைந்த படகு இருளின் அடர்ந்த இருப்பிடமொன்றைத் தேடி மெல்ல மெல்ல நகரத் தொடங்கியது.

ஜேம்ஸ் கிழவன் மௌனத்தைக் கலைத்தான்.

'சாப்பிட்டாயா.'?
நான் பேசாதிருந்தேன்.
'துணைக்கு நானும் வரக்கூடாதா.'?
நான் பேசாதிருந்தேன்.
'மலையையும் கடலையும் தவிர நம்மை யார் தேடுவார்கள்.'?
நான் பேசாதிருந்தேன்.
'மலைக்கும் கடலுக்கும் பிறந்தவர்கள் தானே நாம்.'!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பேசாதிருந்தேன்.
'மலைதான் அப்பா. கடல்தான் அம்மா.'

நான் பேசாதிருந்தேன். என் கவனம் முழுவதும் இலக்கின் மீதுதான் மையங் கொண்டிருந்தது. 'கௌதமன்' என்று மீண் டும் மீண்டும் மனது உச்சரித்துக் கொண் டது.

வேட்டைக்காரர்களின் கோட்டையிலி ருந்து ஒளி உமிழும் விளக்குகள் கடலின் ஒரு ஓரத்தில் நிமிர்ந்து நிற்கும் பாறைத் தொடரின்மீது வெளிச்சத்தைப் பாய்ச்சின. பாறையின் நிழலில் படகு நிறுத்தப்பட்டது.

நீண்ட நேர அமைதிக்குப்பின் பலத்த மழைபெய்யத் தொடங்கியது. தொடர்ச்சி யான இடிமின்னலுக்குக் காத்திருந்த நான் மனதுக்குள் கணக்குப்போடத் தொடங்கி னேன். இடிமின்னலில் மின்சாரம் நின்று போகும். கோட்டை முன்னரணில் காவலி லிருக்கும் வேட்டைக் காரர்கள் உள்ளே போய்விடுவார்கள். குளிரில் நாய்கள் சுருண்டுவிடும். அதுவரை காத்திருந்து கழுத்தளவு நீரில் இறங்கி நடந்து நுழைந்து விடவேண்டியதுதான். வேட்டைக்காரர்களின் பொறிகள், தடைகள், கண்ணிகள், முட் கம்பிச் சுருள்கள், மின்வேலிகள் என்ப வற்றைக் கடப்பதில் கொஞ்சம் பொறுமை யையும் நேரத்தையும் விரயம் செய்ய வேண்டி வரும் . அவ்வளவுதான்.

நூற்றாண்டுகால ஆணிகளை அகற்றும் போது கௌதமன் பலத்த குரலில் சத்த மிடக்கூடும் என்ற முன்னெச்சரிக்கையால் தடித்த பிளாஸ்டர்களை வாயில் ஒட்டி னேன். துரு அகற்றும் திரவத்தை ஓசைப் படாமல் திறந்து ஆணிகளின் பெருங் கொண்டைகள்மீது ஊற்றினேன். தூரிகை யின் முரட்டு மயிர்கள் துருவைப்பட படவென அகற்றத்தொடங்கியது. முதலில் ஒளிவட்டத்துடன் மார்பில் பொருத்தியிருந்த ஆணிகள் கழற்றப்பட்டன. பீடத்துடன் இறுக்கியிருந்த சற்றுப்பிரமாண்டமான ஆணிகள் இரண்டையும் கழற்றியபோது கௌதமனின் நூற்றாண்டுகாலத் தூக்கம் சற்றுக்கலைந்ததுபோல் மழை இருளில் தெரிந்தது. கட்டுத்துணிகள் போதாததால் எனது காற்சட்டையையும் மேல்சட்டையை யும் இரத்தம் கசிந்த இடத்தைச்சுற்றிக் கட்டப்பயன்படுத்தினேன். சலவைக்கல் மேனியின் பளபளப்பை மறைக்கத் தோள்பை யில் கொண்டுவந்த கருப்புத் துணியால் கௌதமனைப் போர்த்தினேன். மழை ஓயமுன்னம் மின்சாரம் மீண்டும் வரமுன்னம் இந்த இடத்திலிருந்து கௌதமனுடன் தப்பிச்சென்றுவிடவேண்டும். நூற்றாண்டு காலக் குளிரிலும் மழையிலும் விறைத்துப் போன உடலை முடிந்தவரை வளைத்துத் தோளில் கிடத்திக்கொண்டு படகு நிற்கும் இடத்தை நோக்கி நகரத்தொடங்கினேன்.

படகில் ஜேம்ஸ்கிழவன் கண்களை மூடிச் சாய்ந்திருந்தான். கிழவனை அவசர அவசரமாக செயற்படவைத்தேன். கௌத மனைப் படகிற்குள் கிடத்திவிட்டு கரையை நோக்கித் துடுப்புக்களை வலிக்கத் தொடங் கினோம். இயந்திரம் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டது. கரையை நெருங்குவ தற்கு சற்று முன்னரேயே இடுப்பளவு தண்ணீரில் இறங்கினேன். கௌதமனை மீண்டும் தோளில் சுமந்து கொண்டு மிக வேகமாகக் கரையேறி நடந்தேன். கடல் தாண்டி உள்நுழைந்த குதிரைகளின் குளம் புத்தடங்கள், ஒலிவேராவின் படகு கட்டு மிடம், பிரட்ரிக்கின் பீரங்கி வண்டிகள் நிறுத்திய இடம், நோர்த்தின் கேட்பாரற்ற நடுகல், சீமைபுர வெள்ளரசியின் பிறந்த நாள் ஞாபகமாய் நட்டுப் பெரிதாய் வளர்ந்த நிழல் மரங்கள், நாயக்காக்கள் அமர்ந்து காற்றுவாங்கிய கல் இருக்கைகள் அனைத் தையும் கடந்து காப்பறை நெருங்கியபோது நின்றுபோன மின்சாரம் வந்திருந்தது.

காப்பறைக்குள் நுழைந்துதோள் சுமை நீக்கிக் கதவைத் தாளிட்டுவிட்டு வெளி யேறும்போது அடுத்தடுத்து விழுந்து வெடிக் கும் எறிகணைகளின் பலத்த ஓசை கேட் டது. அவசர அவசரமாகக் கடற்கரையை நோக்கி ஓடினேன். இருள் மெல்ல விலகத் தொடங்கியது. கடற்கரையில் சனக்கூட்டம் பெருகிவிட்டது. விலக்கிக்கொண்டு நுழைந்தபோது இதயம் பக்கென்றது. ஜேம்ஸ் கிழவன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். தலை துண்டிக்கப்பட்டிருந்தது. படகு சிதறிக் கிடந்தது. ஆயிரமாயிரம் இரகசியங்களை எந்த மண்ணின் நிமித்தம் தன்னுள் புதைத்துக் கொண்டானோ அந்த மகாபுருஷன் ஜேம்ஸ் கிழவன் அந்த மண்மீது காவியமாகியிருந்தான். கடலுக் குள் இருந்து தலைநீட்டும் சூரியனையும் சிதறிக்கிடந்த குருதித்திட்டையும் அர்த்தத் துடன் அவதானித்தேன்.

மலையும் கடலும் அழுதன.
'மலையையும் கடலையும்தவிர நம்மை யார் தேடப்போகிறார்கள்.'
'மலைக்கும் கடலுக்கும் பிறந்தவர் கள்தானே நாம்'
'மலைதான் அப்பா, கடல்தான் அம்மா'
புறப்படும்போது ஜேம்ஸ் கிழவனின் கடைசி வார்த்தைகள் காதில் ஒலித்தன. கிழவனின் தலையை மட்டும் கைகளில் ஏந்திக்கொண்டு காப்பறைக்குள் நுழைந் தேன். குருதிக்கறைகளைச் சுத்தம்செய்து பதனப்பெட்டியில் வைத்து மூடினேன்.

கௌதமனின் விறைப்பு நீங்க களிம்பு தடவி காயங்களுக்கும் மருந்து கட்டத் தொடங்கினேன். நூற்றாண்டுகால விறைப்பு விரைவில் நீங்கிவிடும் என்று எனக்குத் தோன்றவில்லை. நூற்றாண்டுகாலமாக உறைந்துகிடந்த குருதியின் கசிவும் நின்று விடுவதாயில்லை. ஆயினும் அன்று முழுவ தும முயன்று கொண்டிருந்தேன். நூற்றாண்டு காலத் தூக்கத்திலிருந்த கௌதமன் விழிப்பதும் மீண்டும் உறங்குவதும் மறுபடி யும் விழிப்பதுமாய் இருந்தான். ஏதோ பேசு வதற்கு எத்தனிப்பவன்போல் தென்பட்டா லும் சத்தமிட்டு அலறிவிடுவானோ என அஞ்சினேன். இருப்பினும் ஞானஸ்தன் - சகிக் கும் தன்மையை மறந்திருக்க மாட்டான் என்ற நம்பிக்கையில் வாயில் ஒட்டியிருந்த பிளாஸ்டர்களை ஒவ்வொன்றாக உரித்துக் கழற்றத் தொடங்கினேன்.

கௌதமன் மெல்லமெல்ல உதடு களை அசைத்தான். அவனது இதழ் தேக்கி வைத்திருந்த புன்னகை ஒரு சொட்டும் வடிந்து போகாது அப்படியே இருந்தது. கண்கள் பேரொளியால் நிரம்பத் தொட ங்கியது. அவன் பேசத் தொடங்கினான். ஆனால் எந்தவொரு வார்த்தையும் வெளியே வரவில்லை. உதடுகள் மட்டும் அசைந்த படியிருந்தன. அந்த அசைவுகளையே நான் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டி ருந்தேன். ஒவ்வொரு அசைவுகளுக்கும் ஒவ்வொரு சொல்லைப் பொருத்திப் பார்த்து அர்த்தம் தேடுவதாக இருந்தாலும் அவன் பேசுவது என்னபாஷை என்பது தெரிய வேண்டும். அவன் கடைசியாக என்ன பாஷை பேசியிருக்கக் கூடும். நினைவுக ளைப் புரட்டிப் புரட்டி அடுக்கத் தொடங்கி னேன்.

ஏறக்குறைய எண்பது வருடங்களாக ஒருவனைக் கண்காணிக்கத் தொடங்கி னேன். கடைசி இருபத்தைந்து வருடக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருந்தேன். அப்போதுதான் அவனுடைய நகர்வுகள், செயற்பாடுகள், எங்கு போய்க்கொண்டிருக் கின்றன என்பது என்னைச் சுற்றியுள்ளோர் களுக்கும் புலப்படத் தொடங்கின. அவன் தன் தோற்றத்திலும் செயலிலும் மிகமிக நுட்பமாக ஏமாற்றும் வித்தைக்காரனாக இருந்துவருவது வெளிச்சத்துக்கு வந்தது.

வட்டவடிவமான முகமும் வழுக்கைத் தலையும் புன்னகையுடன் புதைந்த கண களும் நீண்ட மூக்கும் இனம்புரியாத வசீகரத்தை அவனுக்குத் தந்திருந்த போதும் அந்த வழுக்கைத் தலைக்குள் ஒளிந்திருந்த மூளையின் வினோதத்தை ஆராயத்தலைப்பட்டபோதுதான் அவனது பழைய தோற்றங்களும் அதன் தந்திரச் செயற்பாடுகளும் வந்துபோயின. உயர்ந்த ஆஜானுபாகுவான தோற்றத்தில் கனவான் உடையுடனும் கையில் சுக்கானுடனும் தடித்த மீசை வைத்து ஆரம்பகாலங்களில் நடமாடினான் சூரியன் அஸ்தமனமாகும் கடல்முகத் திடலில் அவனுக்குப் பிரம் மாண்டமான சிலைவைக்கப்பட்டது. அதன் பின்னர் அதே வடிவம் அளவு குறைக்கப் பட்டுப் பிரதியெடுத்தாற்போல் மாற்றமடைய மீசையை மழித்துக் கொண்டான். ஆயினும் கையில் சுக்கான் வைத்திருந்தான். குணங் களும் மாறவேயில்லை. பின்னாட்களில் கனவான் உடைமாற உருவத்தில் ஒல்லி யாகி வேட்டியும் சால்வையும் அணிந்து நடமாடினான். மழித்த தலையுடனான காவி அணிந்த பூதபகணமொன்று சப்புக்கொட் டிய சத்தத்தில் தனது உருவத்தைப் புன்னகை பூத்த பெண்ணினதாக மாற்றிக் கொண்டான். அப்போதுதான் ஏராளமான கண்கட்டு வித்தைகளுக்கு ஆளாவதை நான் அதிகமதிகம் உணரத்தலைப்பட் டேன். வழுக்கைத் தலைக்குள் ஒளிந்தி ருந்த மூளையின் வினோதம் மவுசு குறைந்து போனபோது மழித்த முகத்துடன் கோண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புன்னகையில் அவன் நடமாடத் தொடங்கினான். இடையிடையே பிருஷ்டம் பருத்த பெண்ணாகி சுரங்கத்து வீட்டு மொட்டைமாடியில் உலாக்கொள்வதும் வயோதிப மாதாகி சக்கர நாற்காலியில் நடமாடுவதுமாக இருந்தான்.

கடைசியாக அவன் குட்டை உருவத்துடனும் அகன்ற மழித்த முகத்துடனும் சுருக்கங்கள் விழுந்த பரந்த நெற்றியும் மூடிய வாயில் ஒரு வஞ்சகப் புன்னகையுடனும் கையில் ஒரு கைத்தடியுடன் ஒரு காலை அழுத்தியும் இன்னொருகாலை உயர்த்தியும் நடமாடத் தொடங்கியபோது தான் அவனது சூட்சுமங்கள் நிறைந்த இருப்பிடங்கள் ஒவ்வொன்றையும் கண்டு பிடிக்கத் தொடங்கினேன்.

மனைவியின் வாயால் அடிக்கடி குருட்டுப்பிணம் குருட்டுப்பிணமெனத் திட்டுவாங்கிய யாழ் ஏந்திய இசைவாணனுக்குரிய மண்ணின் கண்ணிறை செந்நிறத்தையும் அதில் கமழ்ந்த புகையிலை நெடியையும் வலிந்து கசக்கிப் பிழிந்தெடுத்த பனம்பழஞ் சாற்றையும் அவனது குழந்தைகளின் குருதியோடு கலந்து அவர்களின் எலும்புகளிலும் மண்டையோட்டிலும் செய்த நீள்பட்டயக் காப்புக்குழாயில் இட்டு சுரங்கத்து வீட்டு மொட்டைமாடியில் உலாக்கொண்ட அரசியிடம் கையளித்தான். அன்று நடந்த விழாவில் ஏற்பட்ட களைப்பில் இராட்சத முட்கம்பி வேலிகளால் எல்லையற்றுச் சூழப்பட்ட நியோன் விளக்கு நகரத்தின் ஆடம்பர விடுதியொன்றில் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிப்போனான். அன்றுதான் அவன எப்போதும் தன்னுடனேயே வைத்திருக்கும் அவனது கைப்பையைக் கைப்பற்றமுடிந்தது. மின்னல் வேகத்தில் காரியத்தை முடித்துக்கொண்டு காப்பறை திரும்பினேன். கைப்பற்றப்பட்ட கைப்பையைத்திறந்தேன். பல மடிப்புகளாகச் சுருக்கப்பட்ட ஒரே யொரு செப்பேடுமட்டுமே கிட்டியது.

செப்பேட்டின் குறிப்புகளை வைத்துக் கொண்டுதான் மாங்கனித் தீவின் இரகசியங்கள் அடங்கிய சிறிய பெட்டி மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தின் சாவிக் கொத்ததைக் கண்டுபிடித்தேன். பாசக் கயிறுகளால் தடைவேலியிடப்பட்டு பெரும் கொம்பேந்திய எருமைகளால் காவல் காக்கப்பட்டு எமதர்மர்களும் சித்திரகுப்தர்களும் கொக்கரித்துத் திரிந்த உப்புமலைத் தொடரின் கீளுள்ள குகையொன்றில் அதனைக் கண்டெடுத்தேன். செயற்கைப் பறவைகள் தரையிறங்கிச் செல்லும் பெருவெளியின் முடிவில் உள்ள பொத்தான்கள் நிறைந்த அறையொன்றில்தான் அந்தச் சிறிய பெட்டி இருந்தது. ஆயிரம் கதவுகளைச் சாவி கொண்டு திறந்து ஆதார ஆளி முடுக்கப்படும் அறையின் நிலக்கதவைத்திறந்து அதை நான் கைப்பற்றினேன். அன்றுதான் மாங்கனித்தீவின் நூற்றாண்டுகால இரகசியங்களை ஒரு விசாக பௌர்ணமியிரவன்று படிக்கத் தொடங்கினேன்.

வடநாடுடையோரதும் தென்னாடுடையோரதும் பரிகளோடிய பாட்டைகளையும் வெண்தோற் கொள்ளையர்களின் பீரங்கி வண்டிகள் தாங்கிய தரைகளையும் கடந்து முப்புறம் சூழ ஆழ்திரை நடுவண் அடர் கருங்கல் அரண்கள் நிறைந்த கோட்டை அவ்விடம் வானளாவிச் சலசலக்கும் அரச விருட்சத்தின் கீழ் ஒளி வட்டம் பின் சூழ நிழற்குடை தரித்து பீடமேற்றப்பட்டுள்ளான் மெய்க்கௌதமன். மாங்கனித் தீவின் நாற்புறமும் தரிசனம் தரும் கௌதமர்கள் இரவோடிரவாய் விதைக்கப்பட்ட நகல்கள். தம்மங்களடங்கிய பதவேடு யாழ் ஏந்திய இசைவாணனின் பட்டினத்தேயுள்ள சிரசு சாலையில் தொண்ணூறாயிரம் உலர்த்திக் காத்த மூளைகள் தாங்கும் அடுக்குகளிடையே மறைக்கப்பட்டிருந்தது. அது மனுசப்பார்வைக்குப் படாது செய்யுங்கால் களவாடப் பெற்று உலர்த்திக் காத்த மூளைகளுடன் சிரசுசாலை எரிக்கப்பட்டது. களவாடப்பட்ட பதவேடு சித்தார்த்த கிரீடை நடந்த பேர்பெற்ற ஆற்றின் தீரத்தருகே ஆயிரம் வெள்ளரசு சூழ் அரண்மிகு மடாலயத்தின் இரகசிய வைப்பிடமொன்றில் ஒளித்து வைக்கப்பட்டது. ஒளித்து வைத்தவன் காலத்துக்குள் காணாமல் போயினான். கௌதமனின் ஞானதரிசனமொன்றிலேயே வைப்பிடம் வெளிப்படும். ஆயினும் பன்னூறு மழித்த தலையுடன் காவிதரித்த பூதகணங்கள் அரசுசூழ் அரண்மிகு மடாலயத்தைக் காவல் காத்து வருகின்றனர்.

குறிப்புகளைப் படித்த நாளிலிருந்து கௌதமனை மீட்பதற்கான எனது பிரயத்தனங்கள் நிறைந்த பவணம் ஆரம்பமாயிற்று.

கௌதமனின் ஒலியற்ற உதடுகள் பேசும் மொழியைக் குறிகளாக்கி கொஞ்சம் கொஞ்சமாகக் கிரகிக்கத் தொடங்கினேன். நூற்றாண்டுகால நிகழ்வை ஒரு சிறுகனவு போல கௌதமன் விளக்கியிருந்தான். இதற்கிடையில் வேட்டைக்காரர்கள் கௌதமனைத் தேடி நகரமெங்கும் வலைவிரித்திருந்தனர். பத்திரிகைகள் கௌதமன் பற்றிய செய்திகளைக் கொட்டெழுத்தில் வெளியிட்டன. நிலைமைகளைக் கௌதமனுக்கு விளக்கினேன். பத்திரிகைச் செய்திகளைப் படித்துக் காண்பித்தேன். மாங்கனித்தீவின் ஆட்சிபீடம் எந்த நேரத்திலும் தம்பதம் மீட்கப்படலாம் என்ற அச்சத்திலும் மக்களுக்குத் தர்மம் என்றால் என்னவென்று விளங்கிப்போகும் என்ற தவிப்பிலும் கதிகலங்கிப் போயிருப்பதையும் ஆயிரம் வெள்ளரசு சூழ் அரண்மிகு மடாலயம் வேட்டைக்காரர்களால் குவிக்கப்பட்டிருப்பதையும் விபரித்தேன். கௌதமனின் சிரசு முத்தமிட்ட மண்ணும் அவன் பாதம் பட்ட தேசங்களும் அவன் பெயரறிந்த ஊர்களும் ஆட்சி பீடத்திற்கு உதவ முன்வந்துள்ளதாக வெளியான செய்தியைக் கேட்டதும் கௌதமனின் விறைத்த காயங்களும் கைகளும் அதனின் றும் மீண்டன. கௌதமன் ஒரு ஞானப்புன்னகையை உதிர்த்தான்.

அன்று முழுவதும் காப்பறையின் சின்னங்கள் ஒவ்வொன்றையும் கௌதமன் பார்வையிட்டு விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தான். வேட்டைக்காரர்களின் முரட்டுத்தனமான குருட்டு இலக்குகளுக்கும் குருட்டுத்தனமான முரட்டு இலக்குகளுக்கும் இரையாகிப்போன அத்தனை நிகழ்வுகளினதும் இடங்களினதும் தரவுகள், வரைபடங்கள், மாதிரிகள், சாம்பல் மற்றும் பதனப்படுத்தப்பட்ட கண்கள், நாக்குகள், காதுகள், மூக்குகள், பிஞ்சுக்கரங்கள், பிஞ்சுக் கால்கள், பொட்டிட்ட நெற்றிகள், உள்ளாடைகள், துண்டாடப்பட்ட கொலுசுகள், வளையல்கள், உருகிய தாலிகள், அனைத்தையும் பார்வையிட்டு விளக்கங்கள் பெற்றான். வேட்டையில் சிக்கி நோயுற்றவர்களினதும் அங்கங்களைப் பறிகொடுத்தவர்களினதும் தனிமையுற்றுத் துன்புறும் முதியவர்களினதும் வயது, பால் வேறுபாடின்றித் தூர் மரணங்களை ஏற்றவர்களினதும் படங்களும் ஓவியங்களும் கௌதமனின் உணர்வுகளை அதிகம் கிளறின. தனக்குத்தானே மொழியற்ற ஒலியில் ஏதோ உச்சரித்துக் கொண்டான். அதன் குறிகளை எனக்குள் நான் வாசித்துக் கொண்டேன். மூப்பு, பிணி, சாக்காடு.

கடைசியாக கைத்தடிக்காரக் குள்ளனின் சாவிகள் பற்றிய குறிப்பையும் அச்சாவிகளின் கண்டு பிடிப்பு பற்றியும் அவற்றைக் கொண்டு மாங்கனித் தீவின் இரகசியங்களடங்கிய பெட்டி கைப்பற்றப்பட்டதையும் கௌதமனுக்கு விளக்கினேன். கைப்பற்றப்பட்ட பெட்டியைக் கௌதமனிடம் ஒப்படைத்தேன். மாங்கனித்தீவின் இரகசியங்களைப் படித்தவன் தம்மபதம் பற்றிய குறிப்புக்களைத் தன் ஞானத் தாளில் பதிவு செய்து கொண்டான். என்னிடமிருந்த கைத்துப்பாக்கி அவனின் கவனத்தை அதிகம் ஈர்த்தது. அது பற்றி அவனுக்கு விளக்கினேன்.

ஏழு நிற ஒளி உமிழும் ஒலியற்ற துப்பாக்கி. காயத்தையோ மரணத்தையோ விளைவிக்காது. ஊதா விறைக்கச் செய்யும். கருநீலம் தூங்கவைக்கும். நீலம் குருடாக்கும். பச்சை மௌனமாக்கும். செம்மஞ்சள் ஊமையாக்கும். மஞ்சள் செவிடாக்கும். சிவப்பு மயங்க வைக்கும். கௌதமன் கைத்துப்பாக்கியைத் தடவிப்பார்த்தான்.

பல்லாண்டு விழிப்பு அன்று என்னை ஆழமாகத்தூங்கச் செய்தது. நான் தூங்கத்தயாரானபோது நூற்றாண்டுகாலத் தூக்கத்திலிருந்த கௌதமன் விழித்திருந்தான் நான் காலையில் விழித்தெழுந்தபோது கௌதமன் காணாமல் போயிருந்தான். கைத் துப்பாக்கியிருந்த இடத்தில் ஒரு கடிதமும் கௌதமன் காதுகள் தாங்கியிருந்த பாம்படங்களும்.

'இன்று எனது இரண்டாவது பரிநிர்வாணம், தம்மபதம் மீட்கப்படும். மாங்கனித்தீவு மனிதத்தீவாகும். அன்றைய தினம் என் மூன்றாவது பரிநிர்வாணம் நிகழும், கைத்துப்பாக்கியை எடுத்துச் செல்கிறேன். அருஞ்சின்னக்காப்பறையின் கடைசித் தடையங்களாக என் பாம்படங்கள் இருக்கக்கட்டும்.'

சுருக்கமான நம்பிக்கை தரும் வாசகங்கள் புதிய தொடக்கமொன்றின் விளக்கமாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாத்திரீகனின்
**உயிரோடிருத்தல்**
கவிதைகள்
வெளியீடு:
மீளுகை 2
இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி
விலை: 80.00ரூபா

புதிதாய்க் கவிதையுலகிற்குள் நுழைபவர்களை உச்சமானவர்கள் என நம்மால் அறியப்பட்டவர்களாக எதிர்பார்ப்பது அபத்தமானது. (எலியட், வோல்ட் விட்மன், மாயா கோவ்ஸ்கி, உமர் கையாம், பாரதியார்) புதியவர்களை நாம் வரவேற்பவர்களாகவும் நமக்கு அறிமுகமானவர்களை அறிமுகமானவைகளை அவர்களுக்கும் அறிமுகப் படுத்தி நெறிப்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். அதற்காக அவர்களை ஆகா ஓகோவென்று புகழ்ந்தும் சடுதியாகத் தூக்கி யெறிந்தும் அவர்களுள் விஸ்வரூபம் எடுக்கக் காத்திருக்கும் படைப்பாளியைக் கொன்று விடாமல் அவர்களின் தொகுப்புக்குள் கவிதைகளுக்குள் கவிதையைத் தேடுபவர்களாகவும் அவர்களைத் தேடுபவர்களாகவுமே நாம் இருக்க முனையவேண்டும். அதுவே அவர்களை அவர்களே அடுத்து ஒரு கட்டம் நோக்கி எடுத்துச் செல்லும் பக்குவத்தை வழங்கும். ஆரம்பகாலம் அனைவருக்கும் ஒருவித பயில்நிலைக் காலம்தானே. அந்த வகையில் யாத்ரீகன் இருபத்திரண்டு கவிதைகள் அடங்கிய ஒரு தொகுப்புடன் நம்முன் பிரசன்னமாகியுள்ளார். அந்தவகையில் நமது கவிதைகளின் பட்டியலில் மேலும் இருபத்திரண்டு கவிதைகள் சேர்ந்து கொள்கின்றன.நமது கவிஞர்களின் பட்டியலில் மேலும ஒரு கவிஞன் சேர்ந்து கொள்கின்றான். நமது கவிதை நூல்களுடன் மேலும் ஒரு நூல் சேர்ந்து கொள்கிறது. மகிழ்ச்சிப்படுவோம்.

நிறைவான கவிதைகளை எதிர்காலத்தில் தரக்கூடிய நம்பிக்கைக்குக் கட்டியம் கூறவல்ல வரிகளை யாத்ரீகனின் கவிதைகளுக்குள் நாம் காணக்கிடைக்கிறது.

மீளவும் மீளவும்
முற்றுப்பெறாத இடங்களிலிருந்து
கவிதைகள்
எழுதப்படுகின்றன.

---

நீள்மூச்சொன்று
ஆழக்கிடங்கிலிருந்து
வெளிக்கிளர்ந்தது.

---

குறுகுறுக்கும்
விழிகளுக்குள் குழந்தையாய்
மாறியிருப்பாள்.

---

காவுகொள்ளப்பட்ட
நகரத்தின் சாட்சியாய்
வாடிக்கிடந்தன பூக்கள்.

---

காலம் அவர்களை
கழுவி விட்டிருந்தது
வாழ்க்கையிலிருந்து.

---

என்வழி நீளவும்
தனிமை
சூழப்படலாயிற்று.

---

எனது அண்மையில் எடுக்கப்பட்ட
படமொன்றை
என்னதில்லை என்றார்கள்.

---

இராட்சத காலங்களின்
தடங்கள்

---

சோதனைச் சாவடிகளில்
நடுக்கமுறும் மனிதர்களாய்
எனக்குள் தினம் தினம் அவஸ்தைகள்.

---

பச்சை மனிதர்களின்
இரும்புக்குழல்களுக்குள்
அஞ்சி ஒழுங்குதலில்
சர்வமும் அடங்கிப் போய்விடுகிறது.

---

சாவொன்றுதான்
எவருக்கும் பாரபட்சம்
காட்டுவதில்லை
எண்ண அலைகளுக்குள்
படிமானமற்ற அதிசயமிது.

அந்தப் பக்குவம் கைவர யாத்ரீகன் செய்ய வேண்டியவை சில. பரந்த வாசிப்பு, பழந்தமிழிலக்கியங்களுடனான பரிச்சயம், பரஸ்பர பகிர்வு, வடமொழிச் சொற்களைத் தவிர்த்தல் என்பன.

உயிரோடிருத்தல் தொகுதியிலுள்ள ஒரு கவிதையையேனும் எதிர்கொள்ளாது முன்னுரையாக எழுதப்பட்ட கவிதை பற்றிய சு. வில்வரெத்தினத்தின் நல்ல கட்டுரையும் தொகுதியிலுள்ள கவிதையொன்றும் இவ்விதழில் பிரசுரமாகின்றன.

சு.வில்வரத்தினம்

# கவிதை என்றோர் யாத்ரீகம்

யாத்திரீகன் இன்றைய ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகில் ஓர் இளம் பயணி. இவனது கவிதைகளின் ஊடாக நானும் பயணிக்கையில், இவனது கவிதைப் புலத்தின் வழியாக இன்னும் ஒன்றைப்பற்றிப் பேசத் தலைப்படுகிறேன். அது இவனது கவிதைகள் பற்றிப் பேசாது இன்றைய இளம் தலைமுறையினரின் கவிதைகள் எட்ட வேண்டிய எல்லைகள் பற்றிப் பேசுவதாகும். எட்ட எட்டப் புதிய எல்லைகள் விரியும். எல்லைகள் விரிய விரிய புதிய புதிய கட்டவிழ்தல்கள் நேரும். அந்த எல்லைகள் நோக்கி விரிவதற்கான உந்துதலை யாத்திரீகனுக்கும்,• இவன் போன்ற இளைய கவிஞர்களுக்கும் எட்ட வைப்பதே இதன் நோக்கம்.

"யாத்திரீகன் என்னுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார். உண்மைகளே எப்பொழுதும் கவிதைகள் ஆக முடியும்" இப்படிச் சொல்லும் பொழுது என்றைக்குமான நிரந்தரமான உண்மை பற்றிப் பேசுகிறாரா? அல்லது சமகாலத்தின் உண்மை நடப்புகளைக் கருதுகிறாரா? எனும் கேள்வி எழுகிறது. யாத்திரீகனின் கவிதைகளுக்குள் ஊடாகப் பார்த்தால் ஒன்றிரண்டு நீங்கலாக ஏனையவை சமகால நடப்புகளின் பதிவுகள்தான்: அவை குறித்த கேள்விகள்தான் அல்லது அழுத்தங்கள்தான். அவரது கவிதை மொழியிலேயே சொல்வதாயின் "இராட்சத காலங்களின் தடங்கள்". இந்தத் தடங்களைத்தான் இக்காலக் கவிஞர்களின் கவிதைகள் பலவற்றிலும் காண்கிறோம். ஆளுக்காள் தடங்களின் பதிவிற்கான மொழி மாறுபடும். சிலர் காயங்களின் மொழியிலேயே பேசுவார்கள். அறுவைச் சிகிச்சை மருத்துவனின் கத்தியால் வெட்டிப் பிளந்த புண்ணின் மொழியாகவும் அது இருக்கும் (அஸ்வகோஸ்): விழுப்புண்ணின் மொழியாகவும் இருக்கும். சிலரது மொழி புண்ணுக்குப் புனுகு தடவிப் பேசும். சிலரது மொழி பூத்தூவும். ஆயினும் இராட்சத காலங்களின் தடங்கள் ஆங்காங்கு புலப்படும். தடங்கள் பதிப்பதனோடு கவிதைகளின் தேவை தீர்ந்து விடுமா? காலத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதுதான் கவிதைச் செயற்பாடா? காலத்தின் தேவைகளையும் தாண்டிய தேடல் கவிதைக்கு இல்லையா? தேவைகள் தீர்ந்த பின்னால் கவிதையின் தேடற்புலன் புதிய திசை நோக்கி நீளாதா?

சில்லறைகள் குலுங்குகிற பொட்டலம் என்பதை மீறி கவிதை ஒரு சிந்தனா தரிசனத்தின் வாசலைத் தீவிரமாய் தட்டித் திறக்காதா? இப்படிச் சில கேள்விகள் எழுகின்றன. இப்படிக் கேள்விகள் கேட்காமல் ஒரு கவிஞன் உண்மை யாத்திரீகனாதல் முடியாது. ஏனெனில் கவிதை என்பதே ஒரு தேடல்தான்.

"கவிதை என்றதும் எனது மனக் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணில் எப்போதுமே இரண்டு இறக்கைகள் தோன்றுகின்றன" என்கிறார் சுந்தரராமசாமி.

'எனக்கென்னவோ பயணித்துக்கொண் டேயிருக்கவேண்டும் போலிருக்கிறது' என்கிறார் ஜபார்.

'போக்காளர் நாளாந்தம் போனவழிக் கோடு ஊடறுத்தே ஓடும் உணர்ச்சிப் பொறி போல' என்கிறார் மு.பொ.

'ஓ ஓ என்னருமை வண்டிக்காரா ஓட்டு வண்டியை ஓட்டு' என்கிறார் நீலாவணன்.

'நிலவே நீ நிறைந்துள்ளாய்! நானோ ஓர் கிக்கிலிக்கொட்டை' எனப் பாடுகிறார் சண்முகம் சிவலிங்கம்.

'நிலவும் வழிப்போக்கனும்' எனும் கவிதையில், நிலவை நோக்கிச் சப்தமிடும் குரல்தான், தேடல்தான் கிக்கிலிக் கொட்டையின் குலுங்கல்.

இப்படியாகப் பார்த்தால் எல்லாக் கவிஞர்களுமே வழிப்போக்கர்கள்தான். யாத்திரைகளின் இலக்குகள் வேறுபட்டாலும் யாத்திரை இல்லாதவர்கள் கவிஞர்களாதல் முடியாது. உலகின் பல்வேறு யாத்திரைகளை நிகழ்த்தும் கவிஞர்களை தமிழிற்கு கொண்டு வந்து விடவேண்டும் என முயலும் சிவசேகரம், சோ.ப போன்றவர்களெல்லாம் உலக யாத்திரைக்காரர்களே தான். 'யாத்திரீகன்' எனப் பெயர் தரித்த இந்த இளங்கவிஞன் தேடல் நிகழ்த்த மனங்கொண்ட யாத்திரைக்காரன்தான். தேடல் உடைய கவிஞர் யாவர்க்கும் 'யாத்திரீகன்' எனும் பெயர் பொருந்தி வரவே செய்யும்.

தேடல் என்பது ஒரு பயணம். நீள நடக்கத் தெரியாதவன் கவிஞன் அல்லன். மண்ணில் நடப்பது மட்டுமல்ல கண்ணுக் குப் புலனாகாத ககன வழிப்பயணமும் கவிஞனுடையது. அதனால்த்தான் கவிஞர் நீலாவணன் 'ககனத்தெழுவில் முடிவில் கூட' பரிதிக் குஞ்சின் ஒளிர்வைக் காட்டுகிறார். முடிவற்ற பயணத்தின் இடைவிடாத ஒளிர்வைக் கைவசம் பேணுபவனே கவிஞனாவான். அனுபவச் சூட்டின் தகிப்பின் ஒளிர்வு கவிதையில் சுயம்பெற வேண்டும். கவிதை என்பது சுயத்தின் ஒளிர்வலம்.

என்றைக்கோ ஊற்றுக்கண் உடைத்துத் திறந்த ஆறு இன்று வரை கடலை நோக்கிப் பயணித்தபடியே இருக்கிறது. ஆறு என்பதற்கு வழி என்றும் பொருள். ஊடறுத்து வழிகிழித்துப் பாயும் ஓட்டம் அது. 'காவிரியின் வழி நடையை நீ நடந்தாய் வாழி காவேரி' என வாழ்த் திசைத்துப் பாடுகிறான் இளங்கோ. "தண்ணென்றொழுக்கமும் தழுவிச்சான்றோர் கவியெனக்கிடந்தது கோதாவரி" எனக் காட்டுகிறான் கம்பன். சான்றோர் கவிதையின் ஆற்றின் தண்ணென்ற ஓட்டமும், ஆற்றின் ஓட்டத்தில் ஒளியுறத் தெளிந்த கவிதா அமைதியின் கிடக்கையும் ஒன்றையொன்று தழுவிய கவிதா இயக்கம் கம்பன் காட்டுவது. ஓட்டம் அல்லது ஒழுக்கம் கவிதா இயக்கம். கிடந்தமை என்பது கவிதையின் உள்ளுறை அமைதி. இது ஒரு கவிஞனின் கவிதையில் ஒருங்கே தழுவிக் கிடப்பது கவிஞனின் தெளிவான தரிசனத்தைப் பொறுத்தது.

*தரிசனம் என்பது தேடலின் பெறுபேறு.*

*தேடல் என்பது ஒரு தீவிர நிலை*

*தீராத இயங்கு நிலை.*

*கடல் தாண்டிக் காற்றுவெளிப் பயணம் செய்த*

*அநுமன் திரும்பி வரும் போதில் அவனது*

*உள்ளங்கை விரிப்பில் சஞ்சீவி மலையே குடியிருந்தது.*

*இறந்தாரை எழுப்பும் சஞ்சீவி மலையை அவன்*

*காவி வருகையில் அதன் காற்றுப் பட்டதுமே*

*இயக்கமற்றுக்கிடந்த ஒரு கூட்டமே தமது*

*இறந்து பட்ட கண்களைத் திறந்து கொண்டது.*

*ஒரு சொல்லின் தீவிர நம்பிக்கை ஒளியில்*

*ஊன்றியெழுந்த உள்முகத் தீயின் தீவிரத்தோடேதான்*

*அநுமனின் திசைவெளிப்பயணம் தொடங்கியது.*

*தேடலில் தொடங்கிய தீவிரத்தின் தீஅவியாத*

*தொடர்ச்சியான காவுகைதான் தூவெளித் தரிசனமாகிறது.*

*அகமுகத் தரிசனம்: உள் - வெளித் தரிசனம்*

*இந்தத் தரிசனம்தான் ஒரு சமூகத்தின் விழிப்பு நிலையைத்*

*தூண்டி நிற்பது: தத்துவ நிலையாகத்*

*தாண்டிச் செல்லவும் துணை நிற்பது.*

இன்றைய கவிஞர்களிடத்தில் இந்தத் தரிசனம் நோக்கிய தேடலோ அதற்குரிய அறிவு நிலைத்தூண்டலோ துலங்குமாயிருந்தால் இயக்கமற்றுக்கிடப்போரை எழுப்புவிக்கும் சஞ்சீவி மலையின் வேர்க ளைக் கண்டடைவார்கள். வேர்களை நோக் கிய பயணம் ஒரு சமூகத்தின் தேசிய எழுச்சியின் போது தீவிரம் அடைகிறது. பலஸ்தீன எழுச்சியின் போது பல கவி ஞர்கள் தமது வேர்களின் விரியத்தைக் கண்டு கொண்டார்கள். அப்போது 'யுகங் களிற்கு அப்பால் பாய்கிறது எனது வேர்' என்று பாடினான் ஒரு பலஸ்தீனக் கவிஞன். வரண்ட வேர்களின் முறுக்காயிருந்தன பலஸ்தீனக் கவிதைகள்.

வேர்களைத் தேடுதல் என்பது போர் யுகத்தின் புகழ் பாடுதல் என்றாகாது. நிலங்கள் தழுவிய ஒழுகலாறில் சுட்டி ஒருவர் பெயர் கூறாக் காதலின் அகம் பொதுமையில் 'தாம் கலந்து' நிற்பதுவும் வேருக்குச் சொந்தமானதுதான். அறநெறிக் காலத்தில் நிலந் தழுவிய வாழ்வொழுக்கம் பிடுங்கப்பட்டது. பின்னால் பக்தி இலக்கிய காலத்தில் நிலம் சார் ஒழுக்கத்தை இன்னொரு தளத்தில் நடுகை செய்ய 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என உறுதிபடச் சொல்லியதும் எமது வேருக்குச் சொந்தமானதுதான். "எந்தை புகலாற் பாடுமின் புலவீர்கள்" என்று வாழ்வழிந்த ஊர்களை புதுப்பிக்க கோரிக்கை விடுத்து ஊரின் மக்களை எல்லாம் ஆற்றுப்படுத்தியவர்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுமை பாடிகளின் வாரிசுகள் தான். இது ஒரு நெடியவேரோட்டம். இந்த வேரோட்டத்தின் ஊடே ஆதிப்பொதுமையின் பிரக்ஞையின் தம்முள் கறந்தெடுத்தவராய் சஞ்சீவிச் செடியின் சாறு கலந்து இன்றைய நமது நோய்கட்கு மருந்திட வல்ல கவிஞர்கள் எத்தனை பேர் உள்ளார்கள்?

இன்றைய இளைய கவிஞர்கள் தமக்குள் எழுப்ப வேண்டிய முக்கியமான கேள்வி இது: கேள்வி என்பது தீவிரமான சுய விசாரணையின் தேடலாக வேண்டும்.

வேர்களை நோக்கிய தேடல் வெறுமனே ஒரு குறியீட்டுச் செயற்பாடான நிகழ்வல்ல: ஆதிக்குழு மனப்பாங்குள் அடிகோலிக்கிடப்பதுமல்ல, ஒரு வேட்டை யுகத்தின் விலங்குத்தனத்தை மீண்டும் அரங்கேற்றுதற்கான ஒத்திகையுமல்ல. எம்முடைய இரத்தவோட்டத்திற்குள்ளும், சிந்தனை ஓட்டத்திற்குள்ளும், இழந்து போய் விட்ட வீரியத்தை மீளக் கொள்வனவு செய்து இன்றைய யுகத்தின் பயணப் பாட்டுக்கு பாய்ச்சுதல் ஓர் இயக்கம். நாகரீகத்தின் முதற்காலடியின் நடைப் பயணத்தில் இருந்த ஆதிப் பிரக்ஞையின் துடிப்பை இன்றைய பயணத்திற்குரியதாய் இசைவிக்கும் ஒரு பண்பாட்டு அசைவியக்கம். இன்றைய உலகக் கவிதா இயக்கத்திற்கு வலுச் சேர்ப்பதாக ஆபிரிக்க கவிஞர்கள் வழங்கிய FLUTE POETRY, DRUM POETRY போன்றனவெல்லாம் அவர்களது ஆதிவேரோட்டங்களில் இருந்து உறிஞ்சி அளித்த ஊட்டங்கள்தான். பிக்காசோ போன்ற ஓவியக்காரர்கள் நிகழ்த்திய அற்புதங்களுக்குரிய மூலவுருக்களில் இருந்து பெற்றவைதான் நவீனத்துவம் என்பதைக் கூட நாம் நமது தொல்மரபுகளிலிருந்தும் மீட்டியும் முழங்கியும் மீளப்பெறலாம். ஆனால் நாம் அவ்விதம் தேடுவதில்லை. மண்ணுள் தோன்றியவராக அவதாரமாகவும், விண்ணில் படரும் கருதியை மீட்டும் கருடராயும் இருக்க நாம் சம்மதிப் பதில்லை.இளைய யாத்திரீகர்களே!தேடலின் திசைவிரித்த உலகம் உங்களது தேடிச் செல்லுங்கள். இளைய பறவைகளே திசைகள் திறந்த படியேயுள்ளன. அறிவும் உயர்வும் இருகை இறக்கைகளாக முன் நீட்டும் அலகே குறியாக ஒளிர, எரிமலை களின் மேலாக பறந்தபடியே இருங்கள்; உமது அடுத்த இறக்கம் மண்ணில் ஒரு பெரும் வருகையாக, புதிய எல்லைகளில் குடியமர்ந்து இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கமும் சிறுவர் அரங்கும்

~ வாசுதேவன் ~

உலகமயவாக்கம் எனும் பூதம் தனது கரங்களை உலகு தழுவி மிக உறுதியாக விரித்து வருகிறது. உலகைத் தனக்கு வசதியான ஒழுங்குக்குள் கொண்டு வருவதன் மூலம், உலக வளங்கள் அனைத்தையும் உறிஞ்சி, அவ்வளங்கள் மீது கட்டுப்பாட்டைப் பேணுவதன் ஊடாக உலகின் மீதான தனது அதிகாரப் பிடியை இறுக்குவதே இதன் நோக்கம் என்பது வெளிப்படை. இந்த உலகு ஆயிரக்கணக்கான தனித்துவங்களின் சேர்க்கையில் முழுமை கொள்வது. எந்தத் தனித்துவமும் இன்னொரு தனித்துவத்திற்கு எதிரானதோ, குறைந்ததோ அல்ல. நம்மூர் கவிஞர் குறிப்பிட்டதைப் போல எச்சிறு புல்லும் ஒரு முழுமை. இடுகாட்டுக் களனியும் ஒரு அருமை. ஒரு தனித்துவம் உலக முழுமையின் பகுதியாகவும் அதே சமயம் தானே ஒரு தனி முழுமையாகவும் உள்ளது. உலகமயவாக்கம் இந்த உண்மைக்கு விரோதமானது.அது உலகைத்தான் விரும்பும் ஒரு வடிவத்தில் மட்டுமே பார்க்க விரும்புகிறது. அந்த வடிவம் யாதெனில், உலக சனத்திரளை மந்தைகளாகக் காணுவதேயாகும். மந்தைகளோடு மந்தைகளாக கேள்விகள் அற்று, தருவதை உண்டு, குடித்து உடுத்து,ஒன்றையே சிந்தித்து, ஒன்றையே செய்து, காட்டும் திசையில் செலவோர் நீதியினதும் மனித நாகரிகத்தினதும் காவலர்களாகவும், தன் சொந்தப் புத்திக்கு மந்தைக் கூட்டத்தில் சேர மறுப்போர் அல்லது விலகிச் செல்வோர் உலக நீதி, சமாதானம் என்பவற்றின் எதிரிகளாகவும் இனங்காணப்படுவதோடு தண்டிக்கவும்படுகின்றனர். சுருங்கக் கூறுவதாயின் நாம் நாமாக இருப்பது இன்று குற்றமாகி விடுகிறது. இக்குற்றத்திலிருந்து தப்புவதற்கு நாம் யாருக்காகவோ பாரைப் போலவோ வாழ்ந்து தீர்க்கவேண்டும் என்பது நியதியாகி விடுகின்றது.இந்த நியதியை நாம் ஏற்றுக்கொள்ளப் போகிறோமா?

உலக மயவாக்கம் நமது வாழ்வின் சகல தளங்களிலும் இன்று தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அது எதனையுமே விட்டுவைக்கவில்லை. எமது இயல்பான சுயமான உணர்வும், அறிவும் எமது அன்றாட அனுபவங்கள் அனைத்தினூடும் இன்று ஒரு அந்நியத் தன்மையை உணரவே செய்கிறது. எமது சாப்பாட்டு மேசையிலிருந்து பச்சை இலைகள், காய்கறிகள், உயிர் மாமிசங்கள் மாயமாய் மறைந்து, மாதக்கணக்கில் சேமிக்கப்பட்ட பொதி செய்யப்பட்ட உணவுகள் இடம் பிடித்துள்ளன. எமது உள்ளூர் நாட்டு வைத்தியத்தின் மீதான எமது பாரம்பரிய நம்பிக்கை படிப்படியாக சிதறடிக்கப்பட்டு ஆங்கில மருத்துவத்தில் சரணடைய வைக்கப்பட்டுள்ளோம். சிகிச்சை வெற்றியளிப்பதில் நோயாளியின் நம்பிக்கை வகிக்கும் முக்கியத்துவத்தை முன்னிறுத்திப் பார்க்கும் போது நாம் எவ்வளவு அரிய தேட்டத்தை இழந்து வருகின்றோம் என்பது துயரையே மூட்டுகிறது. மண் சட்டியில் உப்பும் கொறுக்காயும் இட்டு மீனைப் பதப்படுத்தத் தெரிந்த நாம் இன்று குளிர்சாதனப் பெட்டி இல்லாமல் அதைச் செய்ய இயலாதவராகி விட்டோம். உங்கள் தொழில்நுட்பங்கள் எங்கள் ஏளனத்துக்கே உரியனவாகி விடுகிறது. எங்கள் கல்வி. கலை, கலாசாரம், பழக்கவழக்கம் அனைத்துமே எங்களுக்கு இரண்டாம் பட்சமாகிவிடுகிறது. ஆனால், எமக்குச் சம்மந்தம் இல்லாத, எமக்கு ஒத்துவராத எதை எதையோவெல்லாம் நாம் இன்று தலையில் தூக்கி வைத்துள்ளோம். இவற்றால் கிடைக்கும் தற்காலிக சுகங்கள் நமது உயிரோட்டமுள்ள வாழ்வைக் கபளீகரம் செய்வதைக் காணத் தவறுகிறோம்.

ஒரு தனித்துவமான சமூகம் தனது இருப்பின் அடையாளமாகத் தனித்துவமான கலைகளைக் கொண்டிருக்கும். இது வெறும் அடையாளம் சம்மந்தப்பட்ட ஒரு விடயமல்ல. ஒரு தனித்துவமான சமூகத்தின் கலை என்பது அச்சமூகத்தின் கால நிலை, பௌதிக வளங்கள். தொழில்கள், தொழில்நுட்பம், இவை அனைத்தும் சேர்ந்து திரண்டெழும் மனப்போக்கு அனைத்தின் கூட்டுக் கலவையில் விளைவதாகும். சுருங்கக் கூறின் வாழ்வியக்கத்தின் சாரத்திலிருந்து கலைகள் முளை கொள்கின்றன. வாழ்வனுபவமே கலைகளின் விளை நிலமாகும். ஒரு தனித்துவமான சமூகத்தின் கலை வெளிப்பாடுகள் அச்சமூக வாழ்விலிருந்து தோன்றி அவ்வாழ்வை விளக்கி. அதற்கொரு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அதன் மூலம் வாழ்வை அது மேலும் செழுமைப்படுத்துகிறது. இச் செழுமைப்படுத்தல் மூலமே ஒரு தனித்துவ சமூகம் தன்னைப் புதுப்பித்துப் புதுப்பித்து நிலை நிறுத்திக் கொள்ளமுடியும். இவ்வகையில் தனித்துவ சமூகம் ஒன்றின் இருப்புக்கு உயிர்நாடியாக அதன் கலைகள் இருப்பதை நாம் காணலாம். தனித்துவங்களை அழிப்பதே உலக மயவாக்கத்தின் நோக்கம் என்பதால் அது நமது கலைகளைக் குறிவைத்துள்ளது. நமது கலைகளை நமது வாழ்வனுபவத்தை நமது பாணிகளில் வெளிப்படுத்தும்போதுதான் அது நமது வாழ்வைப் பேசுவதாகவும் நமது வாழ்வுக்கு உந்து சக்தியாகவும் இருக்க முடியும். இதனால் நமது கலைகளை நமது வாழ்வனுபவத்திலிருந்து பிரித்து விடுவதற்காகப் பலபல பெயர்களில் பலபல கலை இலக்கியக் கோட்பாடுகள் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன. இவை மிக நூதனமான முறையில் நமது கலைகளை நம்மிடம் இருந்து பிரிக்க முயல்கின்றன. இவை குறித்த ஒரு தீவிரமான விமர்சனச் சூழல் எம்மிடம் இல்லாதிருத்தல் ஒரு பெருங்குறையாகவே காணப்படுகின்றது. நமது கலை வடிவங்களில் ஒன்று அரங்கு. அரங்கு எனும் சொல் இன்று மிகப் பரந்தவொரு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உயிர்த்துடிப்ப மிக்க ஒரு கலை வடிவம் எனும் வகையில் உலக மயவாக்கப் பின்னணியில் அரங்கு இன்று எமக்குரிய அதி முக்கிய கலை வடிவமாக இனங்காணப் படுகிறது.

முன்பு எமது வாழ்வு வேசங்களும் நடிப்பு -மற்று உண்மையாக இருந்தபோது நாம் அரங்குகளில்தான் வேசம் தரித்தோம். இன்று எமது வாழ்வே வேசங்கள் தரித்த நடிப்பு என்றானபின், அரங்கை வேசங்கள் கலைக்கும் இடமாக மாற்றியுள்ளோம். நமது அன்றாட வாழ்க்கைக் களம் வேசம் தரித்து நடிக்கும் அரங்காயிற்று. அரங்கோ நமது மெய்யான வாழ்வைத் தரிசிக்கும் வாழ்க்கைக் களமாயிற்று. ஆம் வாழ்க்கை சிறைக்கூடமாகச் சுருங்க, அரங்கு சுதந்திர வெளியாக விரிகிறது. முன்பு நாடகம் முடிந்த பிறகுதான் நடிகன் ஆசுவாசப் பெருமூச்சு விடுவான். வேசத்தைக் கலைத்த திருப்தியில். இன்று நாடகம் தொடங்கும் போதுதான் அவனுக்கு அந்த ஆசுவாசம் ஏற்படுகிறது. தண்ணீருக்குள் அகப்பட்ட காற்றுக் குமிழ் போல, ஒரு ஆசுவாச வெற்றிடமாக வாழ்க்கைக் களத்தினுள் அரங்கு ஆயிற்று. அதுவும் இன்றைய உலக மயவாக்கத் தாக்கத்தின் காரணமாக எல்லாவற்றிலும் எமது சுயத்தை இழந்து வாழ்வை முற்றாகவே நடிக்க ஆரம்பித்து விட்டபின், மெய்யான வாழ்வனுபவத்தின் குறியீடாக அரங்கு உயர்ந்துவிட்டது எனலாம்.. இன்றைய நமது சிறுவர்கள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்கள். அவர்களது எதிர்காலத்தைக் கற்பனை செய்தால் மிகுந்த கலக்கம் ஏற்படுகிறது. இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகளைப்போல அவர்கள் வளர்க்கப்பட்டு வருவதைக் கண்கூடாகக் காணுகிறோம். பாடசாலையிலும் பிரத்தியேக வகுப்புக்களிலுமாக பகல் முழுவதும் கழிகிறது. இரவில் படிப்பு அல்லது தொலைக்காட்சி அல்லது உறக்கம், இதைத் தவிர இன்றைய சிறுவர்களின் நேர அட்டவணையில் வேறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வழுத்தங்கள் காரணமாக சொந்த வாழ்வில் ஒரு சமநிலையைப் பேண முடியாமல் அப்படியே மறுதலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







குத் தாவி முற்றிலும் பிறழ்வான அதீதமான செயல்களில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இறைச்சிக் கோழி இறைச்சிக்காகவே வளர்க்கப்படுவதைப் போல இவர்களும் வேறு யாரோ சிலருடைய ஏதொ நோக்கத்துக்காகத் தயார் படுத்தப்படுகிறார்கள். ஆரம்பத்திலேயே இவர்கள் மண்ணில் வேர்கொண்டு வளர்ந்து விடுவதற்கு முன், முன் யோசனையாக பூச்சட்டியில் பதியம் போடப்படுகிறார்கள். பூச்சட்டியில் வைத்துவிட்டால் செடிக்கும் மண்ணுக்கும் தொடர்பற்றுப் போகும். செடியும் தன் இஷ்டத்துக்கு தன் ஆளுமை முழுவதும் விகசிக்க வளர்த்துச் செல்லமுடியாது. மேலும், பூச்சாடியை தேவையான இடத்துக்குத் தூக்கி தூக்கி மாற்றி வைக்கலாம். எங்களுடைய மண்ணில் ஆற்றல் உள்ளவரை வேர் பாய்ந்து உழைப்பு உள்ளவரை கிளையெறிந்து வளர்வதைத் தடுத்து எங்கள் கன்றுகளைப் பூச்சட்டியில் பதியம் போடும் தோட்டக்காரன் யார், அவன் தனது தோட்டத்தை அமைக்கும் ஒழுங்கு யாது. அந்த ஒழுங்கில் எங்கெங்கு எமது பூச்சட்டிகள் வைக்கப்படுகின்றன? ஒவ்வொரு பூச்சாடியும் எவ்வளவு அழகாக எம்மை ஏமாற்றிக் காவுகொள்கின்றன?

இந்தக் கேள்விகளை இன்று நாம் எழுப்புதல் வேண்டும். காவுகொள்ளப்படும் எமது சிறுவர்களை நாம் எவ்வாறு மீட்டெடுக்கமுடியும்? சிறுவர் அரங்கு அதில் கணிசமான பங்கை வகிக்கமுடியும். முற்றிலும் அந்நிய வாழ்வொன்றினுள் பிரவேசிக்கும் சிறுவர்களுக்கு அரங்கின் மூலம் எமது அசல் வாழ்வின் முகங்களைக் காட்டவேண்டும். அவர்கள் முழு இருளின் உள்ளேயே பிறக்கிறார்கள். ஆதலால் ஒளியை இன்னதென்று தெரியாதுள்ளனர். ஒளியைக் கண்டே அறியாதவர்க்கு இருள் பொருட்டல்ல. எனவே எமது அசல் வாழ்வின் சுவையைத் தேடி அவர்களாக ஒரு போதும் இனி வரப்போவதில்லை. நாம் தான் அந்தச் சுவையை அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். அதன் மூலம் அவர்கள் தங்களைத் தாங்களே கண்டடையவும் தமது சுயத்தின் மீது சரிக்கப்படும் குப்பைகளை இனங்கண்டு விலக்கவும் தமது வாழ்வைத் தாமே எழுதும் திராணியைப் பெறவும் வழிசெய்தல்வேண்டும். இதனைச் சிறுவர் அரங்கின் மூலம் நாம் சாதிக்க முனைய வேண்டும். சிறுவர் அரங்கு,? தவறவிடப்பட்ட வாழ்வை மீட்கும் பயிற்சிக்களமாக செயற்படமுடியும்.



## ஓர் ஆவணக் காப்பாளன்

திரைப்படம் (தென்றலும் புயலும்), நாடகம், சிறுகதை, கவிதை. பதிப்புத்துறை என நமக்குப் பரிச்சயப்பட்ட ஒரு பெயர் சித்தி அமரசிங்கம். அண்மையில் முதுகலைஞர் விருதையும் பெற்றுக் கொண்ட இவர் தனது வீட்டில் ஆவணக்காப்பகமொன்றைப் பராமரித்து வருகிறார். பழைய, மிகப் பழைய சுவடிகளும், தகவல்களும் இக்காப்பகத்தில் பராமரிக்கப்படுகின்றன. கலை, இலக்கியம் இதழியல் தொடர்பான பல அரிய தகவல்களைப் பெற இவரை அணுக முடியும். பல பல்கலைக்கழகப் பட்ட, பட்டப்பின் படிப்புக்கான ஆய்வாளர்களும் பிற ஆய்வாளர்களும் இவரின் ஆவணக் காப்பகத்தினால் பயன்பெற்றுள்ளனர். உங்களின் படைப்புகளும் உங்களிடமுள்ள அரிய சுவடிகளும் பாதுகாக்கப்பட வேண்டுமா? அவருடன் நீங்களும் ஒரு தடவை தொடர்பு கொள்ளுங்களேன்.

கலாபூஷணம் த. சித்தி அமரசிங்கம்,
21, அவ்வையார் தெரு,
திருகோணமலை,
இலங்கை.

## ஓர் இளைய ஆளுமை



ஜேர்மனியிலிருந்து நண்பர்கள் தவராஜா தமிழ்ச்செல்வி தம்பதிகள் நான்கு மணி நேரம் ஓடக்கூடிய ஒளிப்பதிவு நாடா ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர். அது அவர்களின் புதல்வி செல்வி நான்ஷியின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வினுடையது.

திருமதி தனுஷா ஜெயக்குமார், சஞ்சியா ராமராஸ், யசோதா தவிராஜ், ஸ்ரீமதி சாவித்திரி இமானுவேல் ஆகியோரிடம் முறைப்படி பயின்று 23.10.2004 அன்று மாலை 15.00 மணிக்கு தனது குரு நாட்டிய கலாரத்னா ஸ்ரீமதி சாவித்திரி இமானுவேல் அவர்களின் ஆசியுடனும் நட்டுவாங்கத்துடனும் அரங்கேறினார் செல்வி நான்ஷி. பாட்டு சீ.கண்ணன் மிருதங்கம் ச.பிரணவநாதன், வயலின் ஆ.ராதாகிருஷ்ணன் தபேலா ச.தேவகுருபரன்.

அங்க சுத்தமும் ஆடல்நேர்த்தியும் நான்ஷியை ஆடற்கலையில் முதிர்ச்சி பெற்ற மூத்த கலைஞர்களுடன் ஒப்பிடவைக்கிறது. துல்லியமாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட ஒளிநாடாவைப் பார்க்கும்போது நிகழ்வை நேரடியாகக்கண்டு ரசிக்க முடியவில்லையே என்கின்ற வருத்தம் இலேசாக இருக்கத்தான் செய்கிறது. நான்ஷி, தன்னுடைய ஆளுமையை நம் சமூகமும் உலகமும் பயன்பெற அர்ப்பணிக்க வேண்டுமென 'ஆகவே' வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.பிரபாகர்



# கலை இயக்கம் காலமும் இடமும்

நவீன சினிமாவில் கலை இயக்குநர்களின் (Set Designer) பங்கு பெரிதும் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகிவிட்டது.

'பாய்ஸ்' படத்தில்

பாட்டில்கள், கம்பிகள், தட்டுமுட்டுச் சாமான்களாலான ஒரு அரங்கம்.

'லேசா லேசா' படத்தில்

மரத்தாலான வீடு, வேலி, வைக்கோல் போர் என்று வரும் ஒரு பாடற் களம்.

'நாயகன்' படத்தில்

மும்பையின் சேரியாக வரும் தாராவிப் பகுதி.

'தேவர் மகனில்'

கண்மாய் உடைந்து வெள்ளம் சூழ்ந்துகிடக்கும் அழிவுக் காட்சிகள்.

'அன்பே சிவம்' படத்தில்

ரயில் விபத்தும் அதன் சூழலும்

'ஹேராமில்'

சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவைப் பிரதிபலிக்கும் வீடுகள், வீதிகள், வாகனங்கள், பொருட்கள்.

இவை அனைத்துமே கலை இயக்குநர்களின் சாதனைகள்தான்.

பொதுவாக, கலை இயக்கம் என்பது சினிமாவில் இரண்டு அடிப்படையான வேலை களைச் செய்வதாகக் கொள்ளலாம்.
ஒரு கதைக் களத்தின் காலத்தையும், இடத்தையும் உருவாக்குவது. இதன் மூலம் பார்வையாளனின் நம்பகத் தன்மையை யதார்த்தத்திற்கு முடிந்த அளவு அருகாமைக்குச் செல்ல முனைவது.

திரைப்படமாக்கலில் நடைமுறையில் இருக்கும் பௌதிகத் தடைகளைக் களைந்து படமெடுக்க வசதியான சூழலை உருவாக்குவது. ஒரு கழிப்பறைக்குள்ளேயிருந்து கைதி ஒருவன் துளையிட்டுத் தப்புவதாகக் காட்சியிருந்தால் வழக்கமான நம் கழிப் பறைகள் 4 அடிக்கு 4 அடியாக இருக்கும்பட்சத்தில் கேமராவை எங்கு வைப்பது, விளக்குகளை எங்கு வைப்பது? தொழில் நுட்பக் கலைஞர்கள் எங்கு நிற்பது? என்ற கேள்விகள் எழும்.

இதைத் தீர்ப்பதற்கு ஒரு கழிப்பறை அரங்கமாகப் போடப்பட வேண்டும். ஒரு பெரிய ஹாலின் ஓரத்தில் கழிப்பறை போடப்பட்டு முழுவதும் திறந்திருக்கும்படியாக இருந்தால்தான் படமெடுப்பது சாத்தியமாகும். மேற்கூறிய விஷயங்கள் கலை இயக்கத்தில் எளிமையானவைகள்தான். எல்லாக் கலை இயக்குநர்களும் எளிதாய்ச் சாதித்துவிடக் கூடியவைதான்.

நம் சூழலில் பெரும்பாலான தொழில் நுட்பக் கலைகள் கூடுதல் கவர்ச்சிக்காகவே என்று நம்பப்படுவது போன்று கலை இயக்கமும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இங்கு கலை இயக்குநர்கள் பாடல் காட்சிகளுக்கே உரித்தானவர்களாகப் பார்க்கப்படுகின்றனர்.
புராணக் கதைகளைப் படமாக்கத் தொடங்கியபோது நம் இயக்குநர்கள் தேவலோகம் என்பது மேலே இருப்பதால் பஞ்சுப் பொதிகள் போன்ற மேகக்கூட்டங்கள் நடுவில் சிவனும், பார்வதியுமாய் இருப்பதான அவர்களின் எளிய நம்பிக்கையின் நீட்சி யாகவே இன்னும் பல அரங்க அமைப்புகள் அமைக்கப்படுகின்றன.

புகைப்படக்கலை தொடர்பான நூல்கள், உலக ஓவியர்களின் படைப்புகள், டிஜிட்டல் போட்டோகிராபி, பாப் வீடியோ ஆல்பங்களின் வரவு, இன்டர்நெட் போன்றவை நம் கலை இயக்குநர்களின் அழகியல் உணர்வுகளைப் பெருமளவு மாற்றியிருப்பது கடந்த பத்தாண்டுகளில் வெளிவந்துள்ள பாடல்களில் தெரியும்.

திரைப்படப் பாடல் காட்சிகள் பொதுவாக மிகு புனைதளத்தில் (Fantasy) இயங்குவதால் கலை இயக்குநர்களின் கற்பனை எல்லையற்று விரிவதற்கான வாய்ப்பு உள்ளது. இருந்தும் நம் கலாச்சார, பூகோள, அழகியல் உணர்வுகளைப் போலி செய்யாமல் புதிய கற்பனை வெளிகளுக்குள் சஞ்சரிப்பவர்கள் சொற்பம்தான்.
'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தில் மணிரத்னத்தின் அழகியல் உணர்வுமிக்க கலை இயக்குநர் சாபுசிரிலின் கைவண்ணத்தில் அழகிய பாடலாக உருவாகியிருந்தது ஒரு தெய்வம் தந்த பூவே பாடல்... ஒரு இளம் தாய், அவளின் மகள் சிறுமி, நீண்ட கடற்கரை, மணல்வெளி, அதில் மூன்று பொருட்களை பயன்படுத்தியிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உடைந்த நிலையில் மணலுக் குள் பதிந்திருக்கும் பெரிய தோணி. பிடுங்கப்பட்ட வேர்களுடன் சாய்ந்து கிடக்கும் மரம் ஒன்று... சற்று அசாதாரணமான நிலையில் நின்று கொண்டிருக்கும் மரமொன்று. இம்மூன்று பொருட்களையும் மணல்வெளியில் வைத்துக் கவிதையாக அப்பாடல் காட்சி உருவாக்கப்பட்டிருக்கும். ஆனால் அந்தப் படகு தவிர பிடுங்கப்பட்ட மரமும், நிற்கும் மரமும் அந்த பூகோளவெளிக்கு அந்நியமானவை. மூன்று பொருட்களுமே செய்யப்பட்டவையாக இருந்தும் தோணி இந்த இடத்தில் பொருந்துவதுபோல் மற்ற இரண்டு பொருட்களுமே அங்கு பொருந்துவதில்லை. ஆனால் இயக்குநர் காட்சியின் அழகியலை மட்டுமே பொருட்படுத்தியுள்ளார்.

ஆகவே பாடல்களாகவே இருந்தாலும் அதன் கால இடப்பொருத்தப்பாடுகளையும் கவனத்தில் கொள்வது அவசியமாகிறது.

பல நேரங்களில் கலை இயக்கம் என்பது உள் அலங்காரம் (Interior Decreation) என்பதாகப் புரிந்துகொள்ளப்படுகின்றதோ என்ற ஐயம் ஏற்படுகின்றது. பொதுவான சமகாலப் படங்களில் காமிராவின் இடைவெளிகளை நிரப்புபவர்களாக கலை இயக்கநர்கள் உள்ளனர்.

ஃப்ரேமில் இடைவெளிகளை நிரப்புவதுதான் கலை இயக்குநர் பணி. குரோட்டன்ஸ் செடிகள், அலங்கார விளக்குகள், ஓவியங்கள், மலர்ச்சாடி ஆகியவற்றையே இவர்கள் நம்புவதாகத் தெரிகிறது.

கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்து படித்துக்கொண்டிருக்கும் ஏழை இளைஞனின் அறையில் தொங்கும் விளக்குகளும், பொருட்களும் வெறும் ஃப்ரேமுக்குள் அழகுணர்ச்சியை மட்டும் சொல்வதாகப் பொருள் கொள்ள முடியாது.

ஒரு கட்டுப்பாடான ஆச்சார அனுஷ்டானமான அதிகாரியின் வீட்டு அறை எனும்போது அவ்வறையின் பொருட்களும் இருக்கும் முறையிலும் ஒரு ஒழுங்கு இருப்பதாக வேண்டும். சுவரில் ஒரு நவீன ஓவியம் அங்கு இடம்பெற முடியாது.

### *காலங்களை இடமாற்றும் கலை இயக்கம்*

எப்போதோ மூழ்கிப் போன 'டைட்டானிக்' கப்பல்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ரோமானிய விளையாட்டு அரங்கங்களைக் காட்டும் 'கிளாடியேட்டர்'.

எதிர்காலப் புனைவாக வெளிப்படும் 'மேட்ரிக்ஸ்', 'டெர்மினேட்டர்' போன்ற புதிய உலகங்கள் எல்லாவற்றையும் கலை இயக்கமே சாத்தியமாக்குகிறது. இறந்த காலத்தைப் பற்றிய வடிவமைப்புகளுக்கு நம் கதைக் களம் பற்றிய வரலாற்று ரீதியான ஆய்வுகள் அவசியமாகும். அது எந்தக் காலம் என்பதைப் பொறுத்து நூல்கள், செய்தித் தாள்கள், குறிப்புகள் என்பனவற்றை நம் தேவைக்கேற்பச் சலித்தெடுக்கவேண்டும்.

எதிர்காலம் பற்றிய இயக்கத்திற்கு நிகழ்காலத்தில் காலூன்றி எதிர்கால சந்ததிகளை உத்தேசிக்க மிகுந்த கற்பனை வேண்டியிருக்கும்.

தமிழில் வரலாற்று காலத்தைச் சித்தரிக்கும் வீரபாண்டிய கட்டபொம்மன், ராஜராஜசோழன் போன்ற படங்களின் அரண்மனை கட்டிட அமைப்புகள், தூண்கள், கிரீடங்கள், அணிகலன்கள் போன்றவை அந்தந்த வரலாற்றுக் காலங்களைச் சரியாகச் சித்தரிப்பனவல்ல.

### *தேவதை - ஹேராம் - நாயகன்*

தமிழில் முதன் முதலாக வரலாற்றுக் கால தமிழ் மன்னர் என்பதை 'தேவதை' படத்தில் பொருத்தமாகச் சித்தரித்த கலை இயக்குநர் டிராட்ஸ்கி மருது. 'தேவதை' படத்தில் முன்பகுதியில் இடம்பெறும் இப்பகுதி சுருக்கமானதாக இருந்தாலும் தமிழ் மன்னருக்கான திராவிட முக அமைப்பு, அரண்மனையின் உட்தோற்றம், அணிகலன்கள் போன்றவை பொருத்தமான வரலாற்றுணர்வுடன் சித்தரிக்கப்பட்டிருந்தன.

இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சித்தரித்த 'ஹேராம்' தமிழ் சினிமா வரலாற்றில் கலை இயக்கத்தின் உச்சகட்ட சாதனை எனலாம். படத்தின் மொத்தமும் ஒரு குறிப்பிட்ட தெள்ளத் தெளிவான பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக் காலத்தைச் சித்தரிக்கும் நிர்ப்பந்தமிருந்தும் தெருக்கள், வாகனங்கள், பொருட்கள் (கடிகாரம், விளக்குகள், துப்பாக்கிகள்) என்று மிகுந்த கவனமும் ஆய்வும் செய்யப்பட்ட இப்படம் சாபுசிரிலின் கலை இயக்கத்தில் உருவானது. இதில் இயக்குநர் கமலின் ஆளுமை குறிப்பிடத்தக்கது.

கலை இயக்கத்தை சரியான தளத்தில் தமிழில் ஆரம்பித்து வைத்த படமாக 1980களில் வெளி வந்த 'நாயகன்' படத்தையே குறிப்பிட வேண்டும். வெளி வந்த காலத்திற்கு முப்பதாண்டுகள் முன்புள்ள காலத்தையும், மும்பை என்ற இடத்தையும் உள்ளடக்கிய இப்படம் 80 விழுக்காடு சென்னையில் படமாக்கப்பட்டதாகும்.

அக்காலத்தைச் சித்தரித்தல், நடைமுறை வசதி கருதி மும்பை பகுதிகளை சென்னையிலேயே அரங்குகளாக நிர்மாணித்தல் எனும் இரண்டு அம்சங்களிலும் குறிப்பிடத்தக்கத் துவக்கத்தை நிகழ்த்தியவர் கலை இயக்குநர் தோட்டாதரணி.

### *உறைந்து நிற்கும் வினாடிகளும் தாவிப் பாயும் வருடங்களும்*

கலைகளில் பயன்படும் காலமும் நடைமுறை வாழ்க்கையில் காலத்தின் இயக்கமும் வேறு வேறானவை. சினிமாவில் அதற்கே உரித்தான தர்க்க நியாயங்களோடு காலமும், இடமும் நிலை கொள்கின்றன.

ஒரு இயக்குநரே தன் கதைக்கான, காட்சிக்கான காலத்தை வரையறுக்கிறார். சினிமாவில் ஒரு காட்சி (Scene) சராசரியாக 3 நிமிடங்களே இடம்பெறத்தக்கது. நடைமுறை வாழ்வில் நம் வாழ்வின் தருணங்களில் சிறுநீர் கழித்து வருவதற்குக்கூட அதிக நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கும்.

பார்வையாளனின் தர்க்க நியாயத்திற்கு அப்பாற்பட்டு இயங்கும் 'காலம்' சினிமாவில் இயக்குநர்களால் கவித்துவத்தோடு கையாளத்தக்க அம்சமாகும். மிக விலாவாரியாகக் காட்டப்பட வேண்டிய ஒரு நீதிமன்ற விசாரணை சில வினாடிகளிலும், சில வினாடிகளுக்குள் நிகழ்ந்துவிடக் கூடிய ஒரு சம்பவம் பல நிமிஷங்களுக்கும் நீடிக்கப்படலாம்.

'BRAVE HEART' என்ற திரைப்படத்தில் கதாநாயகன் சிறுவனாக இருந்து வாலிபனாக மாறும் நிகழ்வு நொடியில் கரைகிறது. ஆனால் இறுதிக் காட்சியில் கதாநாயகன் வீரனாகப் போராடி இங்கிலாந்து படைகளால் பிடிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படுகிறான். கட்டப்பட்டு மேடையில் கிடத்தப்படுகிறான். கொலையாளி கோடாரியை மேலே உயர்த்துகிறான். ஒரு கோடாரி மேலெழும்பிக் கழுத்தில் விழுவதற்கு ஆகும் நேரம் சில வினாடிகள்தான். ஆனால் ஒரு வீர புருஷனின் மரணத்தை அவ்வளவு எளிமையான தாய் மாற்ற விரும்பாத இயக்குநர் கோடாரியை உயர்த்துவதை ஸ்லோமோஷனில் ஆரம்பிக்கிறார்..

கோடாரி உயர்கிறது...
வீரனின் முகம் Cut
கூட்டத்தினர் Cut
வீரனின் முகம் Cut
கூட்டத்தில் அவனது இறந்த
காதலி வருகிறாள் Cut
வீரனின் முகம்
உயரும் கோடாரி
மீண்டும் வீரன் Cut
கூட்டம் Cut
சிரிக்கும் குழந்தை ஒன்றின்
முகம் Cut
வீரனின் முகம் Cut
இறங்கும் கோடாரி
மீண்டும் வீரன் Cut
காதலி Cut
கூட்டத்தில் முகம் Cut

தன் இனத்திற்காகப் போராடிய வீரனின் அவல முடிவைச் சரித்திரமாக்குவதில் சினிமா மொழி உயிர் பெற்ற தருணங்களில் இதுவும் ஒன்று! ஒரு இலக்கியம் இதைச் சாதிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரும் சினிமாவும்


- அடூர் கோபாலகிருஷ்ணன் -
தமிழில் : மீரா கதிரவன்

நிச்சலனம் திரைப்படக் கலைக்கு எதிரானது ஆகும். அமைதியை வெறுக்கவும், முரண்பாடுகளுடன் அடர்த்தியான காதல் உறவு வைத்துக் கொள்வதுமே அதனுடைய நிரந்தர இயல்பு.

கினிமா-அதாவது 'சினிமா'-அடிப்படையில் 'கினெட்டிக்ஸோடு', அதாவது சலனவியலோடு தொடர்பு கொண்டதாகும். அதிசயம் என்றுதான் சொல்லவேண்டும். மனிதன் கண்டுபிடித்த மிகப் பயங்கரமானதும், கொடூரமானதுமான 'யுத்தம்' என்ற இம்சைச் செயல், சலனத்திற்கும் செயல்பாட்டிற்கும் எல்லையற்ற சந்தர்ப்பங்களை உருவாக்கித் தருகிறது. இதன்விளைவாக, இந்த நூற்றாண்டின் மிகவும் நிகரற்ற கலாச்சார வடிவான கலை என்று போற்றப்படக்கூடிய திரைப்படம் யுத்தத்தினால் மிக மகிழ்ச்சி கொண்டதாக பரிணமித்திருக்கிறது.

திரைப்படக்கலையின் தொடக்க கால அறிஞர்களில் ஒருவரான டி.டபிள்யூ. கிரிஃபித் சுமார் முக்கால் நூற்றாண்டுகளுக்கு முன்னமே பின்வருமாறு தெரிவித்தார்: 'அனைத்துக்கும் மேலாக உங்களைப் பார்க்கத் தூண்டுவதே என்னுடைய முயற்சி' திரைப்படத்தின் சொரூபத்தில் காட்சிப் பிரமாண்டத்தின் (Spectacle) தவிர்க்க முடியாத ஸ்தானம் - ஆரம்ப காலந்தொட்டே திரைப்படக் கலைஞனின் கற்பனையை கவர்ந்திருக்கிறது. இதனால்தான் மௌனப் படங்களின் காலம் முதல் திரைப்படங்களின் பிரியமான விசயமாக யுத்தம் இடம் வகித்திருக்கிறது. பழைய க்ளாஸிக் திரைப்படங்களான 'பெர்த் ஆப் எ நேஷன், 'இண்டோலரன்ஸ்' முதலியவை குறித்து இவ்வேளையில் இயல்பாகவே நினைவு கொள்கிறேன்.

இருள் அடர்ந்த திரையரங்கினுள் பார்வையாளர்களில் ஒருவனாக அமர்ந்து கொண்டு டிங்...டிங்... என்று உரசி மோதுகிற வாளினையும், ஆங்காரத்தோடு முழங்கிப் பாய்கிற குண்டுகளைச் செலுத்தும் துப்பாக்கிகளையும், பற்றியெரிகிற ராணுவ முகாம்களையும் கண்டு குதூகலமடைவதற்கு யார்தான் விரும்பமாட்டார்கள்? போரினைப் போல் வேறு எந்தவொரு நிகழ்வுக்கு வீரத்தின், கோழைத்தனத்தின், உதாரணங்களை உங்களுக்கு முன்னால் இவ்வளவு தாராளமாகப் பகிர்ந்து தரமுடியும்? தேசப்பற்றின், வஞ்சகத்தின், அன்பின், பகையின், கௌரவத்தின், அற்பத்தனத்தின், பிரமிப்பின், நம்பிக்கையின் என்பதோடு மட்டுமல்லாமல் தெரிந்ததும் பரஸ்பர முரண்பாடு கொண்டதுமான எத்தனை எத்தனையோ உணர்வுகளின் விளைநிலம் அது.



மற்ற எந்தவொரு கலைகள்போலவும் திரைப்படத்திற்கும் இவ்வகையான முரண்பாடுகள்தான் ஆத்மா. கருத்துக்களின், கதைப்பாத்திரங்களின், உள்ளடக்கக் கூறுகளின், வண்ணங்களின் வடிவ ரீதிகளின், சொல்லாடல்களின், ஏற்றத் தாழ்வுகளின், தாளத்தின் என்று அனைத்துக்கும், இந்த மோதல்களின் அம்சங்களுக்கு மிகவும் அதிகமாக பகிரங்க வெளிப்பாட்டுச் சௌகரியங்களை ஏற்படுத்தித் தருகிற ஒன்றுதான் யுத்தம் என்கிற நிகழ்வு. ஆதலால் யுத்தமும் சினிமாவும் பரஸ்பரம் காதலில் ஒன்றிணைந்தது, தற்செயலாக விளைந்த பார்வைகளின் ஈர்ப்புகளினால் அல்ல.

எனினும், இந்த உண்மையிலும் ஒரு முரண்பாடு உண்டு. இரண்டுக்குமிடையிலும் ஒற்றுமை உண்டென்றாலும் எந்தவொரு திரைப்படமும் யுத்தத்தின் திரைப் படங்களும் சமாதானத்தின் தூதினை பார்வையாளர்களின் மனதில் கோலோச்சுவதற்கு முயன்று கொண்டிருப்பவையே ஆகும். திட்டவட்டமாகவும், உறுதியோடும் அதை நடைமுறைப்படுத்துவதையே யுத்தம் செய்துவருகிறது. அதுமட்டுமல்லாது இன்னொன்றும் உண்டல்லவா? யுத்தம் முழுவதும் நிரந்தர அமைதிக்காகத்தானே நடத்தப்பட்டிருக்கின்றன?

ஆயிரக்கணக்கான உயிர்களை வேதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும், கொடுமையான துயரங்களிலும், ஒரேயடியாகத் தள்ளி விடுகிற அரக்க சக்தி கொண்ட போர் பயங்கரமானதும், அருவருக்கத்தக்கதும் ஆகும். ஆனால் அதனுடைய இந்த இயல்புதான் நாடுகளை அதிர்வுக்குள்ளாக்கவும், தங்களைச் சுற்றிலுமுள்ள உண்மைகளின் பக்கம் மனிதர்களின் பார்வைகளைத் திருப்பவும் செய்கின்றன. இங்கு, காலாவதியாகிப் போன துருப்பிடித்த சம்பிரதாயங்கள் தூக்கியெறியப்படுகின்றன. தவிர்க்கமுடியாத வேறொன்று அந்த இடத்தைப் பிடிக்கிறது. புதுமை மற்றும் விழிப்பினுடைய பகல் வெளிச்சத்தில், பாரம்பரியத்தில் வேரூன்றியுள்ள நெறிமுறைகள் நிராகரிக்கப்படுகின்றன. மரபு முறைகளில் திடமாக உயர்த்தி வைக்கப்பட்டுள்ள போற்றும் சிலைகளின் கௌரவங்களுக்குப் பேரிழப்பு ஏற்படுகிறது. மதிப்பீடுகளின் அளவு கோல்கள் முற்றிலுமாக மாற்றம் கொள்கின்றன. அனைத்துமே விரிவான தேடல்களுக்கும், பரிசோதனைகளுக்கும் உட்படுபவைகளாகி விடுகின்றன.

ஒரு மாபெரும் யுத்தத்தின் மத்தியிலோ, அதற்குப் பின்னரோ நாடுகளை அதிர்ச்சிகளுக்குள்ளாக்கும் மாற்றங்கள் அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்ற தளங்களில் மட்டுமே நிகழ்வது இல்லை. கலாச்சாரம், பண்பாட்டு மற்றும் கலைத்துறைகளிலும்கூட அது நிகழும். கற்பிக்கப்பட்ட தீண்டாமையின் மறைவில் அதனால் விலகிநிற்க முடியாது. உலகளவில் ஏற்படுகிற அனைத்து சமூக அதிர்வுகளும் - முக்கியமாக பெரும் யுத்தங்கள் - கலைஞர்களின் படைப்பாற்றல்களில் மறக்க முடியாத அடையாளங்களைத் தோற்றுவித்திருக்கிறது. வரலாறு அதற்கு சாட்சியமாக இருக்கிறது. இலக்கியம், ஓவியம், சிற்பக்கலை, இசை - போன்றவை மட்டுமில்லாமல் அனைத்து நிகழ்கலைகளுமே இந்த உண்மைக்குச் சாட்சியங்களாகும். வரம்புகளற்ற கால விஸ்தாரச் சுதந்திர முண்டு என்கிற ஆசியைப் பெற்ற திரைப்படக்கலை - சமகாலப் பிரச்சினைகளின் உள்ளடக்கத்தைப் பார்வையாளர்களுக்கு நேரிடையாக வழங்கும் வலிமை கொண்டதும், பார்த்துக் கொண்டிருப்பவனை நிகழ்வுகளோடு எளிதில் லயிக்கச் செய்யக் கூடியதுமான இக்கலை, தனக்குரிய ஒரு செழிப்பான மேய்ச்சல் நிலத்தை யுத்தக் களங்களில் கண்டுபிடித்தது. ஆரவாரம் மிகுந்ததும், கொந்தளிப்பு கொண்டதுமான யுத்த முனைப்புள்ளிகளிலும், அதற்குப் பிறகான பேரழிவுகளின் இழப்புகளிலும்.

1895ல் தோன்றியதைத் தொடர்ந்து திரைப்படம், யுத்த முனைகளில் தேங்கி நிற்கவே விரும்பியது. முதலாம், இரண்டாம் உலகப் போராக இருந்தாலும், வியட்நாம் மற்றும் அல்ஜீரியாவின் யுத்தமுனைகளாக இருந்தாலும் அந்த அபாயகரமான விளையாட்டின் காட்சியையும், ஒலியையும், கொடூரங்களையும் மீண்டும் மீண்டும் பதிவு செய்வதில் அது ஒருபோதும் சலிப்படையவேயில்லை. மாறாக, யுத்த சூழ்ச்சி திரைப்பட ஊடகத்தின் சுய தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

முதலாம் உலகப்போர் வேளைகளில் எதிரணிகள் உருவாக்கிய தங்களுக்கெதிரான திரைப்படங்கள் சர்வதேச அளவில் செல்வாக்கைப் பெறுகின்றன என்கிற உணர்வு ஜெர்மனை அதிரச் செய்தது. இந்த ஊடகத்தில் உள்ளடங்கிய மாபெரும சக்திகளைப் பற்றி ஜெர்மானியர்கள் ஏற்கனவே அறிந்திருக்கவில்லை. அபாயகரமான இந்த உண்மையை உணர்ந்த ஜெர்மனிய அரசு அதிகாரிகள், திரைப்படத் தயாரிப்புகளில் நேரிடையாகக் களமிறங்கினார்கள். யுத்தத்தின் உடனடித் தேவைகளின் அழுத்தங்களினால் போர் நிபுணர்களின் வாதங்களை நியாயப்படுத்துவதற்கே அனைத்து திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டன. பொதுமக்களின் கருத்துக்களை தாங்கள் விரும்புவதைப் போன்று வார்த்தெடுக்க முடியுமென்று ஜெர்மன் அதிகாரிகள் கண்மூடித்தனமாக நம்பினார்கள். அவ்வாறு தான் ஒரு புதிய திரைப்படப் பிரிவு ஒன்று அங்கு தோன்றியது - 'பிரச்சார சினிமா!'

உண்மையில் முதலாம் உலகப் போருக்குப் பின்னரே ஜெர்மானிய சினிமா தோன்றியது. அதற்கு முந்தைய அதனுடைய நிலையானது வெறும் ஒரு கற்காலத்தைப் போன்றுதானிருந்தது. குறிப்பிட்டுச் சொல்லும்படியான சிறப்பு எதுவும் அமைந்திருக்கவில்லை. முதலாம் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனியில் எங்கெங்கும் வீறிட்டு முளைத்தெழுந்த அறிவுப் பூர்வமான எழுச்சி, அரசு நிர்ணயித்த கடும் விதிமுறைகளுக்கெல்லாம் நிகரானதாக இருந்தது. இப்புதிய எழுச்சியின் உத்வேகத்தால் திரைப்படத்துக்கு எதிராக நிலைத்திருந்த சார்புகள் கரைந்து போயின. அதைவிட முக்கியமானது, திரைப்படக்கலை படைப்பாளுமை மிகுந்த திறமைசாலிகளை ஈர்த்தது என்பதுதான். அக்கால கட்டத்தின் அனைத்து எதிர்பார்ப்பு களுக்கும் பீதிகளுக்கும் இணையான படைப்புகளை உருவாக்கும் வாய்ப்பிற்காகக் காத்துக் கிடந்தவர்களாக அவர்கள் இருந்தனர். போர்க்களங்களிலிருந்து திரும்பிய இளைஞர்களான எழுத்தாளர்களும், ஓவியர்களும் மக்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கான ஒரு வடிகாலாகத் திரைப்படக்கலையைத் தேர்வு செய்து கொண்டார்கள். அவர்களை பொருத்தமட்டில் அது ஒரு வெறும் ஊடகம் மட்டுமில்லை. கண்டறியாமல் கிடக்கிற எத்தனை எத்தனையோ சாதகங்களின் புதையல் பாத்திரமாக இருந்தது. பொது மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கத் தகுந்த ஒரு அசாதாரணமான வடிகால். யுத்தத்திற்குப் பிறகான இந்த எழுச்சி ஜெர்மனிய திரைப்படங்கள் சுயமான ஒரு மொழியைக் கண்டறிந்து கொண்டு வளர்ச்சியடைவதற்கு உதவியது. இவ்வாறுதான் ஜெர்மன் நாட்டில் 'எக்ஸ்பிரஷனிஸ்ட் சினிமா' தோற்றம் கொண்டது.

யுத்தம் ஒன்று எரிந்து தணிகிற வேளைகளில் பட்டினியும், பணவீக்கமும், அழிவும், வேலையின்மையும் பெருக்கெடுத்து ஓடி வரும். சுற்றிலும் உள்ள கடினமான உண்மைகளிலிருந்து தப்பியோடுவதற்காக, உணவர்வற்றதென்றாலும் சமூகம் அதன் பிறகு தீவிர முயற்சிகளைத்தான் மேற்கொள்கிறது. அதை இலக்காக வைத்துக் கொண்டு புரிந்து கொள்ள முடியாத சமூகத்தின் மனதொடு கருத்துப் பரிமாறிக் கொள்ளவே இங்குத் திரைப்படம் முயற்சி செய்தது. ஜனரஞ்சகமான திரைப்படங்கள் அக்காரணத்தினால்தான் நடைமுறையிலுள்ள பொதுவான கலாச்சாரத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கு முயல்கின்றன. வர்த்தகச் சினிமாவின் 'மெக்கா' என்றறியப்படுகிற ஹாலிவுட்டின் தோற்றமும் இதைத்தான் நிரூபிக்கிறது. அமெரிக்க வணிகச் சினிமாவில் முதலாம் உலகப் போருக்குப் பிறகு பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டன.

1914க்குப் பிறகு போரில் ஈடுபட்டிருந்த நாடுகள் தங்களின் திரைப்படத் தயாரிப்புக்களை பெருமளவில் சுருக்கிக் கொண்டன. காரணம், படம் பிடிப்பதற்கான கச்சாப் படச்சுருள்களுக்கும், போருக்குத் தேவையான வெடி குண்டுகளின் தயாரிப்புக்கும் ஒரே வேதிப்பொருள்தான் தேவையாக இருந்தது. அமைதியை இழந்து விட்டிருந்த இக்காலத்தில் உலகம் முழுவதும் திரைப்படங்களுக்காக எதிர்பார்த்தது போரில் உலகம் முழுவதும் திரைப்படங்களுக்காக எதிர்பார்த்தது போரில் நேரடித் தொடர்பில்லாத அமெரிக்கா நாட்டைத்தான். சார்லி சாப்ளினுடைய நகைச்சுவைப் படங்களை, வில்லியம் ஹார்டின் பகட்டுத்தனமான 'வைல்ட் வெஸ்ட்' திரைப்படங்களை, ரொமாண்டிக் காதல் திரைப்படங்களை, வீர தீர சாகசங்கள் நிரம்பிய வரலாற்றுப் படங்களையேதான். அமெரிக்கா ஸ்டுடியோக்களிலிருந்து வெளியே பிரவாகித்த மெலோ டிராமாக்கள் உலகெங்கும் ஏற்றுக். கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, ஹாலிவுட் என்கிற திரைப்படத் தயாரிப்பு மையம் தயாரிப்பு முறைகளில் மட்டுமில்லாது திரைப்படம் குறித்த வடிவமைப்புகளின் கற்பிதங்களில் கூட மிகப் பெரும் பாதிப்பை நிகழ்த்தியது.

இக்கால அளவில்தான், சோவியத் ரஷ்யாவில் நிலவிய படச்சுருளுக்கான கடும் பற்றாக்குறை ஒரு சில திரைப்படச் சித்தாந்தவாதிகளை அந்த ஊடகத்தில் பரிசோதனைகளை செய்து பார்க்கத் தூண்டியது. அதன் விளைவோ மதிப்பிடி முடியாததாக இருந்தது. திரைப்படக் கலையில் வெகு நீளமான எதிர்வினை களையும், பிரதிபலிப்புகளையும் உருவாக்க கக் கூடியதாகவும் அமைந்தது. முதன் முதலில், திரைப்படக் கலையின் அடிப்படை அம்சங்களை மிக நுண்மையாகப் பரிசோதிக்கவும், பகுத்தாராயவும், செய்தார்கள். அனைத்து துறைகளிலும் கட்டாயப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்ட ஒரு செயல்திட்டம் தவிர்க்க முடியாததாகிப் போயிற்று. காரணம், இனியும் விரயமாக்குவதற்கு படச்சுருள்கள் கையிருப்பில்லை. 'மாண்டேஜ்'க்கு திரைப்படக் கலையில் உரியதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஓரிடம் கிடைத்தது. 'மதர்', 'ஸ்டிரைக்', 'பேட்டில் ஷிப் பொட்டம்கின்' முலிய புரட்சியைப் பறைசாற்றுகிற, உள் சச்சரவுகளைச் சித்தரிக்கிற திரைப்படங்கள் அனைத்துமே எதிர்கால திரைப்படத்துறையினருக்கு மறுக்க முடியாத முன் மாதிரிகளாக விளங்கின.

1929ஆம் வருடத்தில் திரைப்படம் ஒலி மற்றும் உரையாடலின் கலை பயின்றது. இரண்டாவது உலகப்போர் அதன் பின்னணியில் ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தது. அவ்வாறு யுத்த பிரச்சாரப் படங்களின் பொற்காலம் துவங்கியது. மீண்டும் நாஜிகளின் ஆதிக்கத்தில் வந்த ஜெர்மன் நாட்டில் தங்களுடைய பிரச்சாரக் கருத்துக்களை திரைப்படத்தின் மூலமாகப் பிரதிபலிப்பதற்காக உபயோககரமான திட்டங்கள் தீட்டப்பட்டன. ஜெர்மனிலுள்ள அனைத்து திரையரங்குகளிலும் அரசால் தயாரிக்கப்படுகிற செய்திப் படங்களும், ஆவணப் படங்களும் கட்டாயத்தின் பேரில் திரையிடப்பட்டன. (நம்முடைய பிலிம் டிவிசன் பின்பற்றிக் கொண்ட முன்னுதாரணம்). இதைப் போன்று விஷமத்தனத்துடன் இயககப் பட்ட பிரச்சாரங்களின் வழியாகத்தான், திரிக்கப்பட்ட உண்மைகளை நாஜிகளுக்கு வழங்கிக்கொண்டு கோயபல்ஸ் ஜெர்மானியர்களின் மூளையையும், மனதையும் கைபற்றினர். 1939ஆம் வருடத்தை நெருங்கிய போது அவர் தயாரித்த செய்திப் படங்களுக்கு நாற்பது நிமிடங்கள் வரை காலவரையளவு உண்டாகியிருந்தது. ஆனால், இவை அனைத்துக்கும் மணிமகுடமாக விளங்கியது நாஜிகளின் ஆவணப்பிரிவுதான். அந்த ஆவணப் படங்களில் உணர முடிந்த தொழில் நுட்ப வல்லமையும், மிக புத்திசாலித்தனமான கையாளலும் இன்றளவும் உள்ள பல கலைஞர்களுக்கு கைவசப்படவில்லை என்பதுதான் நிஜம். 'படங்கள் பொய் சொல்வதில்லை' என்று ஜெர்மனிய மக்களுக்கு போர்க்காலங்கள் முழுவதும் கற்பிக்கப்பட்டுக் கொண்டேயிருந்தது. தொடர்ச்சியாக அவர்களுக்கு முன்னால் செய்திப்படங்களும், ஆவணப் படங்களும் திரையிடப்பட்டன. அவை, இறுதியில் வெற்றி நமக்கே என்று நினைவூட்டிக் கொண்டேயிருந்தன. ஆனால், இத்திரைப் படங்களின் பின்னால் பெரிய தொழில்நுட்ப வல்லுநர்களின் கூட்டம் ஒன்று நிரந்தரமாக இயங்கிக் கொண்டிருந்தது என்ற உண்மை பரவலாக அறியப்படவில்லை. உண்மையை அரசின் வியாக்கியானங்களுக்கேற்ப திரிக்கவும், பூசவும், புரட்டவும் அவர்கள் களைப் பறியாமல் இயங்கிக் கொண்டிருந்தார்கள். காட்சி இணைப்பு, சொல்லாடல், ஒலியின் திறன் மிக்கப் பிரயோகம் போன்றவை மூலமாக திரைப்பட ஊடகத்தை நாஜிகளுக்கு பூரணமாகவும், தாராளமாகவும் திரித்து மாற்ற முடிந்தது. மனித ஆத்மாக்களின் மேல் விளைவித்த அதே அளவு கோலுடன்.

இத்தாலி நாட்டில் உண்டாகியிருந்த பாசிஸ்ட் அரசுக்கு தொடக்கத்தில் திரைப் படங்களின் மீதெல்லாம் ஈடுபாடு கிடையாது. பாசிஸ்ட் கட்சியின் தோற்றம் மற்றும் அது தொடர்பான வரலாற்று ரீதியிலான திரைப்படங்களுக்கு அரசு சார்பில் தொடர்ந்து ஊக்குவிப்பு கிடைத்திருந்தும்கூட, 'கரிபால்டி' போன்ற மக்கள் செல்வாக்குப் படைத்த தலைவர்கள் பற்றிய படங்களுக்கும் மேற்கூறிய ஆதரவு கிடைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அரசு வெளியிட்டுக்கொண்டிருந்த பிரச்சார ரீதியிலான குறும்படங்கள், பாசிஸ்ட்டுகளின் இவ்விசயத்தின் மீதான ஆர்வத்தை திருப்திப்படுத்தவும்செய்து கொண்டிருந்தன. இத்தாலி நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகளிலும் கட்டாயமாக இப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 1933ஆம் வருடத்திற்கும் 40ஆம் வருடத்திற்கும் இடையில் இச்சம்பிரதாயங்களில் ஒரு மாற்றம் உண்டானது. இக்கால அளவில்தான் இத்தாலியில் பாசிஸ்ட் அரசு திரைப் படங்கள் மீதான முதல் நெருக்கடிகளை செயலபடுத்துகிறது. அங்கீகரிக்கப்பட்ட ஸ்டூடியோக்களின் நம்பிக்கையின் ரூபத்திலேயே தான் அதைத் தொடங்கிவைத்தது. திரைப் படத் தயாரிப்புச் செலவில் அறுபது விழுக்காடு முதலீட்டை தயாரிப்பாளர்கள் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆதரவு அளிக்கப்பட்டது. தயாரிக்கப்படுகிற படங்கள் வெகுஜன ரீதியாகவோ, கலை வடிவ ரீதியாகவோ, பிரச்சாரத் தன்மை கொண்டதாகவோ முக்கியத்துவம் பெற்றிருப்பதாக நிரூபிக்கப்பட்டால் கடனில் ஒரு சிறு விழுக்காட்டை திரும்பச் செலுத்தினால் போதும். இதனுடைய நோக்கம், தனியொருவராகத் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபடுபவரின் மீது நெருக்கடிகள் ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இத்துறையின் மீது அரசாங்கம் ஒரு வலுவான கோரப்பிடியை இறுக்குவதற்குமாகவும் இருந்தது. வேற்று மொழிப்படங்கள் எதுவாக. இருந்தாலும் இத்தாலியில் மொழி மாற்றம் செய்தே திரையிடப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தது. பாசிஸ்ட் கொள்கைக்கு இணங்காத, வேற்று மொழிப் படங்களில் தோன்றக் கூடிய எந்தவொரு அம்சத்தையும் கத்தரித்துக் கொள்கிற உரிமையை இச்சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது. உண்மையில் ஒரு முழுமையான தணிக்கைச் சட்டமாகத் தான் அது இருந்தது.

சுயமாகவே சீரழிந்து விட்டிருந்த, ரசனைகளை அழுகிப்போகச் செய்வதுமான இத்தாலிய ஸ்டூடியோக்களுக்கு 'ஒரு மாஸ்டர் பீஸை' உருவாக்க இயலவில்லையென்றாலும், திறன்மிக்கவர்கள் பலரும் தொழில் தொடர்பான ஆற்றலைப் பெறுவதற்கு இச்சூழல் உதவிகரமாக அமைந்தது. வெகு நாட்களாகத் தங்களின் படைப் பாற்றல்களுக்குத் தேவையான சுனை களை கண்டறியப் பெறாமலிருந்த இத் திறமை சாலிகளால் மட்டுமேதான் ஐரோப்பாவில் போருக்குப் பிறகு தோற்றம் கொண்ட 'நியோ ரியலிஸ்டிக்' இயக்கத்திற்கு உயிரூட்ட முடிந்தது என்பதே உண்மை.

அவர்களில் பெரும்பாலானோர், அரசின் கீழ் இயங்கிக் கொண்டிருந்த அரசுத் திரைப்பட நிறுவனமான 'சென்ட்ரோ ஸ்பெரிமெண்ட்டல்' என்ற நிறுவனத்தில் பயிற்சி பெற்றிருந்தவர்களாக இருந்தனர். மேலும் பலரும் பாசிஸத்தின் அந்திமக் கட்டத்தில் ஆதரவற்ற ஒரு சூழலில் பணிபுரிந்தவர்களும் ஆவார்கள்.

1944ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ரோமிலிருந்து ஜெர்மானிய ராணுவத்தின் பின்வாங்கல் பூர்த்தியடைவதற்கு முன்னமே, ரோபார்ட் ரோசிலினி தன்னுடைய 'ஓப்பன் சிட்டி' என்ற திரைப்படத்தின் வேலைகளைத் துவங்கியிருந்தார். இத்தாலியில் 'நியோ ரியலிஸ்டிக்' இயக்கத்திற்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய படமாக இருந்தது அது. நாஜியின் ஆக்கிரமிப்பு காலத்தில் ரோமில் சாமான்ய மனிதர்களுக்கு நேர்ந்த உளவியல் சிக்கல்களையும், அவையின் இறுக்கங்களையும், கொடூர நெருக்கடிகளையும், அதனெதிராக அம்மக்கள் கையாண்ட வீரம் செறிந்த தற்காப்புப் போராட்டங்களையும் கூடுமான வரையில் நேர்மையுடன் மறுவடிவம் செய்யவே அவர் முயன்றிருந்தார். அதன் நடிகர்களில் அபூர்வமான சிலரே நடிப்பைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்களாக இருந்தனர். பெரும்பாலானோர் சாதாரண குடிமக்களாகவோ, நாஜி ராணுவத்தில் பணி புரிந்தவர்களாகவோ இருந்தார்கள். வீட்டின் கூரைகளிலும், சாலையோரங்களில் நிறுத்தப்பட்டிருந்த கார்களிலும் வைக்கப்பட்டிருந்த கேமிராக்கள் வழியாக மக்களுடைய நடத்தை முறைகளை அவர் பதிவு செய்தார். அப்படத்தில் மிகச் சொற்பமான பகுதிகளே ஸ்டுடியோவுக்குள் வைத்துப் படமாக்கப்பட்டன. ஒரு சில பொருளாதார நெருக்கடிகளும் இதற்குப் பின்னால் உண்டாகியிருந்தது. ஆனால் அனைத்துக்கும் மேலாக ஆவணப்படங்களின் யதார்த்தத் தன்மையை கொண்டிருந்ததை அதன் சிறப்பாகச் சொல்லலாம். இதுவேதான் அவருடைய நம்பிக்கையாகவும் இலக்காகவும் கூட இருந்தது. துயரமான அக்கால கட்டத்தின் நாகரீகமற்றதும், நேர்மையானதுமான வாழ்க்கை நிலையும் அதே விதத்தில்தான் அமைந்திருந்தது. அவ்வாறு 'நியோரியலிஸ்டிக்' இயக்கத்தின் வழிகாட்டியாக அப்படம் நிலை நிற்கிறது. அதனைத் தொடர்ந்து, டிசிகாவின் 'ஷுசைன்', 'பைசைக்கிள் தீவ்ஸ்' போன்ற படங்கள் வெளியாகவும் செய்தன.

பிரச்சாரத் திரைப்பட மரபானது, இததாலியினருக்கோ, ஜெர்மானியருக்கோ மட்டுமே உரியதல்ல. யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அனைத்து நாடுகளும் தங்களின் திரைப்பட வியாபாரத்தை நேரிடையாக யுத்தப் பிரச்சாரங்களுக்கு பயன்படுத்தின. ஜப்பான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளிலெல்லாம் திரைக்காட்சியின் கோணத்தை விகசிப்பதற்கு யுத்தம் உதவியாக இருந்து வந்திருக்கிறது. அதற்கு முந்தையச் செய்திப் படங்கள், சலிப்பூட்டக் கூடிய நிகழ்வுகளைக் கொண்ட மோசமான படங்களாகத்தானிருந்தன. அவை காட்சிகளின் தொடர்ச்சியை மட்டுமே கணக்கில் வைத்து பசை கொண்டு ஒட்டிய படத் துண்டுகளாகவே இருந்தன. விரிவுரையாளனின் குரல் ஒன்றுதான் அவையனைத்தையும ஒன்றிணைத்திருந்தது. ஆனால், யுத்தத்திற்கு மத்தியிலுள்ள முக்கியமான நிகழ்வுகளை ஒன்று சேர்க்கிற, தானாகவே பேசிக்கொள்கிற காட்சிப் படிமங்களாக இப்புதிய செய்திப் படங்கள் மாறின. சம்பங்களின் நேர்மைகளில் கவனம் செலுத்தி எடுக்கப்படுகிற பெரும்பாலான படங்கள் 1940ல் உருவான இவ்வகை யுத்தத் திரைப்படங்களுக்கு கடன்பட்டிருக்கிறது. திரைப்படைப்புகளின் பக்கம் மானுடத்தை அழைத்து வருவதற்கு மனிதாபிமானத்தையே புறக்கணித்த ஒரு பேரழிவு தேவையாக இருந்திருக்கிறது என்பது முரண்பாடாகத் தோன்றக்கூடும். ஸ்டுடியோக்களுக்குள் உருவாக்கப்படுகிற கதைப்படங்களில் அமைந்துள்ளதைக் காட்டிலும் மிகவும் யதார்த்தத் தன்மை கொண்ட, ஆவணப்படங்களுக்குச் சமமான சொல்லாடல் யுத்தப் பிரச்சினைகளை உள்ளடக்கிய திரைப்படங்களுக்கும் வேண்டுமென்று பார்வையாளர்கள் நிர்ப்பந்திக்கத் தொடங் கினார்கள். யுத்தம் பற்றி நேரடி அனுபவங்கள் அவர்களுக்குத் தாராளமாக உண்டாகியிருந்தன என்பதும் அதற்குக் காரணமாக இருக்கலாம். இந்த யதார்த்த தன்மை பிற்பாடு யுத்தத் திரைப்படங்களிலிருந்து வேறு பல பிரச்சினைகளையும் ஆதாரமாக்கி எடுக்கப்பட்ட படங்களை நோக்கியும் கடந்து வந்தது.

போருக்குப் பிந்தைய வருடங்களில் ஆவணப் படங்களுக்கு ரொம்பவும் அதிகமான வரவேற்பு உண்டானது. அவை பற்றிய நம்பகங்களின் மீதிருந்த தயக்கங்கள் முழுவதையும் யுத்தம் முற்றிலுமாகத் துடைத்துவிட்டிருந்தது. பொதுமக்களின் கருத்துக்களை வடிவமைப்பதில் அவைகளுக்கு உண்டாகியிருந்த சக்தியும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ராணுவப் பயிற்சிகள் பற்றி, ஒழுக்கங்கள் பற்றிய பல்வேறு பிரிவுகளை விளக்குகிற ஆவணப் படங்களைத் திரையிடுவதற்காக அமெரிக்காவில் மட்டும் நான்கு லட்சத்திற்கு மேலான 16 mm புரொஜக்டர்கள் உபயோகப்படுத்தப்பட்டன. நாடகத்தனமான கதை நடையைக் கொண்டதும், திரையரங்குகளில் திரையிடக் கூடியதுமான படங்களிலிருந்தும் மாறுபட்ட திரைப்படங்களுக்கு இப் பின்னணி ஒரு வர்த்தகச் சூழலை சாத்தியப்படுத்திக் கொடுத்தது.

யுத்தத்திற்குப் பிறகு, பரிசோதனை விரும்பிகளான பலரும் ஆவணப் படத் தயாரிப்புகளுக்கு முன் வந்தார்கள். அவர்களின் பெரும்பாலானோர் 16 அஅ படைப்பாக்கத்தை நோக்கியே தங்களின் கவனத்தைத் திருப்பினார்கள். புதிய ரகத் திரைப்படம் புதிய பார்வையாளர் உலகத்தையும் படைத்தது. ராணுவ வீரர்களின் பார்வையாளர் சமூகத்தை எடுத்துக்கொண்டால், அவர்கள் பகல் நேரங்களில் பயிற்சி சம்பந்தமான 16mm படங்களையும், பார்த்தார்கள். போர்க்காலத்தின் பிரசித்தமான ஆவணப் படங்க்ள 16 mm வடிவத்திலேயேதான் பார்வையாளர்களுக்கு முன்னால் திரையிடப்பட்டன. இச்சூழலின் பின்னணியில்தான் ஒரு வகுப்பறைத் தேவைகளுக்கு மட்டுமேயான ஒரு ஊடகமல்ல என்று அதைக் கையாண்டவர்களும், நுகர்வோர்களும் உணரத் துவங்கினார்கள்.

16 mm திரைப்படங்கள் இவ்வாறு ஒரு முக்கியமான இடத்தையும், படைப்பாளுமை மிக்கவர்களின் கையாளு தலையும் அனுபவிக்கத் தொடங்கிற்று. ஒப்பீட்டளவில் செலவு குறைந்ததும், கையாள்வதற்கு இலகுவானதுமான 16 mm கேமிராவைப் பயன்படுத்தி சுய விருப்பங்களுக்கும் கற்பனைகளுக்கும் தகுந்தவாறு படங்களை உருவாக்கலாம் என்பதை திரைப்படச் சிற்பிகள் புரிந்துகொண்டார்கள்.

பீரங்கிகள் அமைதி கொள்வதினாலும், சமாதான உடன்படிக்கைகளில் கையெழுத்திடுவதினாலும் மட்டும் மனித உள்ளங்களிலிருந்து யுத்தத்தின் பிம்பங்கள் அழிந்து விடுவதில்லை. கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்தும், செக்கோஸ்லேவியாவும், ஹங்கேரியும் கொடூரமான போர்களினால் உண்டான கடும் பயங்கரங்களை இன்றளவும் முழுமையாக மறந்து விடவில்லை. யுத்தத்தை ஆதாரமாக்கிய அவர்களுடைய திரைப்படங்கள் - முன்னிலை வகிக்கிற எத்தனையோ படங்கள் அந்த பட்டியலில் உண்டு - வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிற திரைப்பட ஊடகத்திற்கு மதிப்பிட முடியாத கலைச் சொற்களையும், பாணிகளையும் வழங்கி இருக்கின்றன. நிழலையும், வெளிச்சத்தையும் பயன்படுத்தி அவையின் பல்வேறுபட்ட படுக்கைகளை வரிசைப்படுத்திக்கொண்டு, மிக்க கடினமும், பயங்கரமும், குரூரமுமான நினைவுகளுக்கு அவர்கள் மீண்டும் புத்துயிர் கொடுத்திருக்கிறார்கள். யுத்தம் என்கிற கொடுமையை அடிப்படையாக்கிக் கொண்டு இதுவரையிலும் எண்ணிக்கையற்ற கருக்களை அவர்கள் நெய்து எடுத்திருக்கிறார்கள். போரின் துர்சொப்பனங்கள் நிரம்பிய சம்பவங்களின் தொடர்ச்சிகளை உள்வாங்கிப் புரிந்துகொண்ட மனித இனத்திற்கு இனிமேலும் ஒரு போர்க் காலத் தூண்டுதல் தேவையற்றதாக மாறிவிட்டிருக்கிறது.

## தற்போது வெளிவந்துகொண்டிருக்கும் இதழ்கள் சிலவற்றின் முகவரிகள்

மல்லிகை:
201-1/4 சிறிகதிரேசன் வீதி,
கொழும்பு 13

சுத்தரங்கம்:
செயற்றிறன் அரங்க அமைப்பு,
திருநெல்வேலி

ஞானம்:
19/7, பேராதனை வீதி,
கண்டி

தெரிதல்:
1, ஓடக்கரை வீதி,
குருநகர்

கலைமுகம்:
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

தவிர:
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி

புதியதரிசனம்:
வதிரி,
கரவெட்டி

புலரி:
விதானை வளவு,
சித்தங்கேணி

வெளிச்சம்:
கலைபண்பாட்டுக் கழகம்,
பொற்பதி வீதி,
கோண்டாவில்

தாயகம்:
தேசியக் கலை இலக்கியப் பேரவை,
406, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

காளான் - இரா. மனோகரன்
28/4 ஏடிபி சாலை
சேந்தங்குடி
மயிலாடுதுறை 609001

போதி
பாண்டிச்சேரி ரவிக்குமார்,
28-வீரபத்திரசாமி கோவில் தெரு,
லாஸ்பேட்டை,
பாண்டிச்சேரி 605008

செவ்வகம்
விஸ்வாமித்திரன்,
134 ஏ/1 குருதேவி அடுக்ககம்,
3வது பிரதான சாலை,
சதாசிவம் நகர் மடிப்பாக்கம்,
சென்னை 600091.

நிழல் - ப.திருநாவுக்கரசு
31/48 இராணி அண்ணாநகர்
சென்னை 600078

திராநதி
தபால் பெட்டி எண் 2592
சென்னை - 600031

காலச்சுவடு - எஸ். ஆர். சுந்தரம்
669, கேபி சாலை,
நாகர் கோயில் 629001,
தமிழ்நாடு.

உயிர்மை -மனுஷ்யபுத்திரன்
11/29 சுப்ரமணியம் தெரு,
அபிராமபுரம், சென்னை 600018.

கணையாழி
பழைய எண் - 07,
புதிய எண் - 11, நானா தெரு,
தியாகராயநகர்,சென்னை - 600017.

உன்னதம்
கௌதம சித்தார்த்தன்
ஆலத்தூர் அஞ்சல்,
கவுந்தப்பாடி - 638455

படப்பெட்டி
சிவ. செந்தில்நாதன்
இந்தியன் வங்கி காலனி
வள்ளலார் தெரு
பத்மநாபநகர்
சூளைமேடு சென்னை 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பம்

## மற்றுமொரு காலடி

இலண்டனிலிருந்து நண்பர் சி. சாந்த குணம் வந்திருந்தார். இருபது தொடக்கம் முப்பது நிமிடங்கள் வரை ஓடக்கூடிய நம்மவர்களின் பதினான்கு குறுந்திரைப் படங்களுடன், 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 'விம்பம்' அமைப்பு உலகளாவிய ரீதியில் நடாத்திய குறுந்திரைப்படப் போட்டியில் பங்குகொண்டவை அவை. 2005 ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கத்திலும் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி மகாத்மா திரையரங்கிலும் காண்பிக்கப் பட்டன.

நிகழ்வின் ஆரம்பத்தின் போதும் எம்முடனான தனிப்பட்ட உரையாடலின் போதும் அவரால் கூறப்பட்ட கருத்துக்களிலிருந்து:

"விம்பம் ஒரு திறந்தவெளி அரங்கு. தேடலின் தாகம் கொண்ட சாமானியர்களின் கலைவெளி இது. சமகால கலை, இலக்கிய, ஓவிய, நாடக, திரைப்படத் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை புரிந்து கொள்ளவும், புரிந்தவற்றைப் பகிர்ந்து கொள்வதற்குமான களம் இது.

நாளும், கணமும் தோன்றும் மாற்றங்கள், நாம், இதுவரை அறிந்து வைத்திருப்பதைச் செல்லாக்காசாக்கி விட்டு நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தக் காலகதிக்கு இணைய நாம் எம்மைத் தயார்படுத்திக் கொள்ளும் பயிலரங்கு இது.

இக்குறும்படக்கண்காட்சி 'விம்பத்தின்' ஆரம்பம். விம்பத்தின் தேடலின் எல்லைகள் - தொடுவானம் வரை விரிகிறது.

நம் வாழ்வைப் பாதிக்கும் அனைத்துக் கலைமுயற்சிகளும் விம்பத்தின் வீச்சிற்குள வரவல்லன. கலை இலக்கியக் கோட்பாடுகள், விமர்சனங்கள், நூல்வெளியீடுகள், நவீன ஓவியக் கண்காட்சிகள், புகைப் படங்கள், நாடகங்கள், திரைப்படங்கள் என்று விம்பம் சகல கலை பண்பாட்டுச் செயற்பாடுகளிலும் கவனத்தைக் குவிக்க முனைகிறது. யன்னல்களைத் திறந்து விட்டு புதிய காற்று வீசுவதை அனுபவிக்க முனையும் ஆவல் இது. உலகப் பந்தெங்கும் சிதறுண்டு கிடக்கும் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிக் கொண்டிருக்கும் புதிய சிந்தனைப் போக்குகளை, கலைப் புத் தாக்கங்களை இனங்கண்டு அதனை ஊக்குவித்தலும் விம்பத்தின் கவன எல்லையில் உள்ளது.

புதிய சிந்தனைகள் காட்டாற்று வெள்ளமாய்ப் பிரவகிக்கும் சூழலில் பழக்கப் பட்டுப்போன பழைய கருத்தோட்டங்களை புதிய ஒளியில் பரிசீலனை செய்யும் பக்குவம் சித்தித்தால்தான் நாம் நவீன உலகை துணிவோடு தரிசிக்கமுடியும்.

விம்பத்தின் ஆரம்ப முயற்சிக்கு கிடைத்திருக்கும் பேராதரவு நமக்கு பெரும் நம்பிக்கையைத் தருகிறது. தேச எல்லைகள் கடந்து நமக்கு கிடைத்திருக்கும் இந்த ஆதரவு நமது பார்வையை விசாலப்படுத்தவும் துணை சேர்ந்திருக்கிறது.

மேலும், இக் குறும்படங்கள் போரினால் சிதைந்துபோன மக்கள் எல்லா மனரீதியக் கனவுகளுடனும் புலம்பெயர்ந்து, பின் கனவு கலைந்து, ஆசைகள் கருக, நம்பிக்கைகள் சிதற, ஏதிலிகளாய் எல்லா அவமானங்களையும், இழிவுகளையும், பொருமலுடன் தாங்கிக் கொண்டு, குடும்பச் சுமைக்காக மனித யந்திரமாக உழைத்து உழைத்து மடிகிறவர்கள் பற்றிய கதைகளைக் கொண்டவை.

இவையெல்லாம், ஈழத்திரைப்படங்கள். பல, தமிழக கனவுத் திரைப்படங்களிலிருந்து விலகி, திரைப்படத்துறைக்கான சரியான பாதையில் நம்மவர்கள் காலடிகளை எடுத்து வைக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதனையே வெளிப்படுத்துகின்றன."

விம்பத்தின் செயற்பாடுகள் தொடர 'ஆகவே' வாழ்த்துகிறது.


| படம் | இயக்கம் | நாடு |
|---|---|---|
| நிழல் யுத்தம் | அஜீவன் | சுவிஸ் |
| வாழ்வு எனும் வட்டம் | கே. எஸ் பாலச்சந்திரன் | கனடா |
| கோப்பை | வின்ஸ் சந்தியாப்பிள்ளை | கனடா |
| அழியாத கவிதை | அஜீவன் + பரிஸ்டர் ஜோசேப் | லண்டன் |
| உஷ் | சுமதி ரூபன் | கனடா |
| ஊருக்கு பயணம் | எஸ். ரி. செந்தில்நாதன் | கனடா |
| Blink of Eye | முல்லையூர் பாஸ்கரன் | கனடா |
| மனுசி | சுமதி ரூபன் | கனடா |
| விலாசம் | ஐ. வதனன் | பிரான்ஸ் |
| சைக்கிள் | கோபிநாத் | மட்டக்களப்பு |
| The addicted | சுதன் எம் | கனடா |
| அலைகள் | எஸ்.வி. ஜெயராஜ் | லண்டன் |
| மூக்குப்பேணி | ச. ராகவன் | யாழ்ப்பாணம் |
| பயணங்கள் | ஸ்ரீபன் | நோர்வே |

### விருதுகள்

சிறந்த படம் / நடிகர் / இயக்குனர்
சுதன் எம் (The addicted)

நடிகை
சுமதி ரூபன் (மனுசி)

படத்தொகுப்பு
ரூபன் (கோப்பை)



ஒளிப்பதிவு
எஸ். சுகந்தன்
எஸ். சுகிர்
ஏ. குணா

திரைக்கதை
(சைக்கிள்) கோபிநாத்

கதை
மூக்குப்பேணி ச. ராகவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாதலும் மார்க்சியமும்

கோவை ஞானி

மார்க்சிய நோக்கத்தில் உலகமயமாதல் எனும் சிக்கலைப் புரிந்து கொள்வதில் சில சிரமங்கள் உள்ளன. உலகமயமாதலை நேரிடையான ஏகாதிபததியம் என்றோ உச்ச அளவில் செயல்படும் முதலாளியம் என்றோ வரையறை செய்ய இயலுமா என்ற கேள்வியோடு தொடங்குவோம்.

முதலாளியம் என்ற ஒரு பொருளியல் அமைப்பை வரையறை செய்யும்பொழுது இயந்திரத்தோடு சேர்ந்து உழைக்கிற தொழிலாளி வர்க்கத்தின் உழைப்புத் திறனை முதலாளி சுரண்டுவதன் மூலம் உபரி மதிப்பு கிடைக்கிறது என்பது ஒரு பொதுவான வரையறை. தொழிலாளிகள் இருக்க வேண்டும்; அவர்களின் உழைப்புத் திறன் சுரண்டப்பட வேண்டும். இதற்காகத் தொடர்ந்து புதிய இயந்திரங்கள் புகுத்தப்படுகின்றன. இப்படித்தான் முதலாளிக்கு உபரி மதிப்பு சேர்கிறது. இந்த வரையறையோடு கூடிய முதலாளியத்தை செவ்வியல் முதலாளியம் எனக்கூறலாம்.

உலகமயமாதலோடு உள்ளடங்கியிருக்கிற, முதலாளியம் என்று சொல்லப்படுகின்ற கட்டமைப்பினுள் செவ்வியல் முதலாளிய வரையறைகள் என்று அநேகமாக எதுவும் இல்லை. தானியங்கி இயந்திரங்கள் தொடர்ந்து அதிக அளவில் புகுத்தப்படுகின்றன. ஒரு சில நிபுணர்கள் இங்கு இருந்தால் போதும்; நிரந்தரத் தொழிலாளிகளுக்கு வாய்ப்பு இல்லை.

தொழில்நுட்பத்திறன் குறைந்த கூலித் தொழிலாளிகள் போதும். இத்தகைய போக்கு தொடர்ந்து அதிகரிக்கிற நிலை. இந்த அடிப்படையில் சுரண்டல் பேரளவில் நடைபெறுகிறது. இதனை உபரி மதிப்பு என்று சொல்ல முடியாது. முதுலாளியத்திற்கு முற்பட்ட காலச் சூழலில் நடைபெற்ற கொள்ளைகளுக்கு நிகரான சுரண்டல் இங்கு நடைபெறுகிறது. இதை முதலாளியம் என்று பெருமைப்படுத்த முடியாது.

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் மூலம் இங்கிலாந்தில் முதலாளியம் ஆதிக்கம் பெற்றது. பிரெஞ்சு நாட்டில் முதலாளியப் புரட்சியாகிய பிரெஞ்சுப் புரட்சி சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்ற இலட்சியங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியது. மேற்குலகில் ஜனநாயகம் தொடர்ந்து வெற்றிகளை நிறுவியது.

ஆனால், இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் தொழிற் புரட்சியையோ ஜனநாயகத்தையோ இந்தியாவில் நிறுவவில்லை. இந்திய மக்களின் தொழில் நிறுவனங்களை அழிப்பது போன்ற எத்தனையோ செயற்பாடுகளைச் செய்து முடித்தனர். சுதேச மன்னர்களோடும் நிலப்பிரபுக்களோடும் கூட்டுச் சேர்ந்துகொண்டனர். செவ்வியல் முதலாளியம் மேற்குலகில் நிலப் பிரபுத்துவத்தைப் பெருமளவுக்கு அழித்ததுபோல இங்கு செய்யவில்லை. மதவாதிகளோடு இங்கு ஆங்கிலேயர் சமரசம் செய்து கொண்டனர். இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒத்தமுறையில் இந்தியாவில் ஒருவகையான முதலாளியத்தை அனுமதித்தனர். இதைத் தரகு முதலாளியம் எனச் சொல்வதில் தவறில்லை.

1947க்குப் பிறகு நிலமை பேரளவில் மாறுபடவும் இல்லை. சோசலிசம் என்ற பெயரால் நேரு காலத்தில் தொடங்கி இந்தியாவில் முதலாளிய வளர்ச்சியோடு ஒத்து இயங்கியது. உலகமயமாதல் என்ற இன்றைய சூழலில் பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் வசம் ஒப்படைக்கப்படுகின்றன. பன்னாட்டு நிறுவனங்களும் இங்கு ஏராளமாக இறக்குமதியாகின்றன. சிறு தொழில் நிறுவனங்கள் தொடர்ந்து அழிகின்றன. இயற்கை பெருமளவு நாசத்திற்குள்ளாகிறது. மக்களின் நலன்கள் முற்றாகக் கைவிடப்படுகின்றன. ஊழலுக்கு அளவில்லை.

ஐரோப்பாவில் முதலாளியத்தின் வளர்ச்சியை மார்க்ஸ் பாராட்டினார் என்பதில் அய்யமில்லை. முதலாளியம் தான் தோற்றம் பெறுகிறபொழுதே உலகளாவிய பொருளியல் கட்டமைப்பு என்ற முறையில் வளர்ச்சி பெறவும் செய்கிறது. வரலாற்றில் முதலாளியத்திற்கு இடம் கொடாமல் இருப்பதற்கில்லை.

முதலாளியத்தின் வளர்ச்சி முற்றுப் பெறும் முன்பே சோசலிசப் புரட்சியை நடத்துவதிலுள்ள சீரழிவுகளை நாமும் பார்த்திருக்கிறோம். சோசலிசக் கட்டமைப்பு என்பதனுள் உள்நுழைந்த முதலாளியம் சோசலிசத்தை வெற்றி கண்டதையும் வரலாற்றில் நாம் அனுபவித்திருக்கிறோம்.

சோசலிசத்தை வெற்றி கண்டதோடு முதலாளியம் நின்றுவிடவில்லை. முதலாளியத்தின் உச்சகட்ட வளர்ச்சி என ஏகாதிபத்தியத்தை லெனின் வர்ணித்தார். மூலதனத்தை வெளிநாடுகளில் குவிப்பதோடு ஏகாதிபத்தியம் நின்று விடுவதில்லை. நாடுகளின் சுதந்திரத்தைப் பறிக்கவும் செய்தது. தேசிய விடுதலைக்கான போராட்டங்கள் எழுந்தன. மேற்கத்தியரின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து இந்தியா முதலிய நாடுகள் ஓரளவுக்கு விடுதலை பெற்றன. ஏகாதிபத்தியம் திரும்பவும் நாடுகளைக் கைப்பற்றுவதற்காக வேறு வகையான தந்திரங்களைக் காடைப்பிடிக்கத் தொடங்கியது. இராணுவ ரீதியில் அல்லாமல் வர்த்தகம் என்ற பெயரில், அறிவுசார் சொத்துரிமை என்ற பெயரில் இந்தியா முதலிய நாடுகளை இப்பொழுது ஆக்கிரமிக்கிறது.

நாடுகளின் இறையாண்மை கேள்விக்குள்ளாகிறது. இந்தியா முதலிய நாடுகளின் பொருளியல் கட்டமைப்பு முதலியவை எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் தீர்மானிக்கும் சக்தி தனக்கு உண்டு என்கிறது. ஒரு தேசத்தின் கல்வி, மருத்துவம், பண்பாடு முதலியவையும் இவ்வாறுதான் அமையவேண்டும் என்றும் அது கூறுகிறது. தன் ஆதிக்கத்திற்குத் தேவையான தரகர்களை எல்லாத் துறைகளிலும் வளர்த்தெடுக்கவும் செய்கிறது.

உலகமயமாதல் என்னும் போக்கை இன்று செயல்படுத்துகிற பன்னாட்டு நிறுவனங்கள் தாமே அரசு என்ற முறையில் ஆதிக்கம் செய்ய விரும்புகின்றன. இறையாண்மையோடு கூடிய அரசு என்ற அமைப்பு பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு தன்னை விட்டுக்கொடுக்கிறது. முதலாளியத்திற்கு இப்படியொரு வளர்ச்சி இருக்கும் என்பதை மார்க்ஸ் கற்பனை செய்திருக்க முடியாது. இயந்திரங்களின் பெருக்கம் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் மார்க்சுக்குத் தெரியும். ஆனால், கணினி, தானியங்கி இயந்திரங்கள், உயர் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் பற்றியெல்லாம் மார்க்ஸ் நினைத்துப் பார்த்திருக்க முடியாது. முதலாளியம் மனித விடுதலையை ஊக்குவிக்கும் என்பது மார்க்சின் கருத்து. அன்றியும் மனிதர்களின் ஆற்றலை உச்ச அளவில் விடுவிக்கும் என்றும் மார்க்சு நம்பினார்.

ஆனால், இன்று என்ன நேர்ந்து வருகிறது. கணினி முதலிய தொழில் நுட்பங்கள் உலகத்தை ஒரு கிராமமாகச் சுருக்கி வருகிறது என்பது உண்மைதான். எத்தனை வகையான அற்புதங்களை மனித சமுதாயம் இனிக் காண முடியும் என்பதும் உண்மைதான். ஆனால், இவற்றோடு சேர்ந்து இயற்கை பெருமளவுக்கு நாசமாகிறது. மாபெரும் இயந்திரங்களுக்குத் தீனி போட்டு கட்டுபடி ஆகாது. காடுகள், கடல்கள் முதலியவற்றை முழு அளவில் இனிச் சுரண்டி அழிக்கவும் இயலும். நிலங்கள், நீர்நிலைகள், காற்று முதலியவை கடும் நாசத்திற்குள்ளாகின்றன. இயற்கையின் இயக்கம் பிசாசுத்தனமாக மாறி வருகின்றது. நிலங்கள அதிர்கின்றன. ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து பெருகுகின்றன. விநோதமான வகைவகையான நோய்கள் பெருகுகின்றன. மரபு அணுக்களை மாற்றுவதன் மூலம் மனிதனையும் பெருமளவில் மாற்றவும் முடியும்.

வாழ்க்கை வசதிகள் எல்லோருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம அளவில் பகிரப்படுவதில்லை. அதிகா ரக் கெடுபிடிகள் உச்ச அளவில் நடை பெறுகின்றன. மக்களில் பெரும்பான்மை யோருக்குப் பாதுகாப்பான எதிர்காலம் இல்லை. மனித நாகரிகம் கேள்விக்குள் ளாகி வருகிறது.

மனித வரலாறு இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது.

உற்பத்திச் சக்திகள் பெருமளவில் பெருகியுள்ளன என்பது உண்மைதான். ஆனால் இந்த உற்பத்திச் சக்திகள் ஆதிக் கவாதிகளின் கைவசமே உள்ளன என்பது மட்டும் அல்ல, இந்த மாபெரும் உற்பத்திச் சக்திகளுக்குள் ஆதிக்கங்கள் உள் நுழைந்து பத்திரமாகத் தங்கிவிட்டன என்ப தும் உண்மைதான். அதாவது இந்த உற் பத்திச் சக்திகளின் மூலம் ஆதிக்கம் இன்று மனிதர்களிடம் இல்லை. மனிதர்கள் உற்பத்திச் சக்திகளின் கட்டுப்பாட்டினுள் இருக்கின்றனர். தொன்மைக்காலத்து டைனோசர் போல இந்த உற்பத்திச் சக்திகள் எல்லாவற்றையும் தின்று தீர்க்கின்றன. இப்படியொரு முதலாளியத்தை மார்க்ஸ் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

உற்பத்திச் சக்திகளின் மேலாதிக்கம் சோசலிசத்திற்கு வழிவிடவில்லை. மனித விடுதலைக்கு உதவியாக இல்லை. மனிதனின் சுதந்திரத்திற்கு ஆக்கம் தர வில்லை. கட்சிகள், அரசியல்வாதிகள், நாகரிகங்கள், தேசங்கள் முதலிய அனைத் துமே இந்தப் பேராதிக்கத்திற்கு இடம் கொடுத்திருக்கின்றன. இவற்றுக்கும் இப் பொழுது சுதந்திரம் இல்லை. சொந்தக் கால்கள் இல்லை. இந்த நிலையில் இயற்கை இன்னும் எத்தனை காலத் திற்குத் தாக்குப்பிடிக்கும். தொகுத்துச் சொன்னால் இன்றைய உலகமயமாதல் என்பதில் மார்க்சு இலக்கணப்படுத்திய முதலாளியம் என்றோ, லெனின் வரை யறை கூறிய ஏகாதிபத்தியம் என்றோ சொல்வதற்கில்லை.

புதிய காலனியம் என்று இந்தப் போக் குக்குப் பெயர் கொடுத்துப் பார்க்கிறோம். இன்னும் சிலர் பின் முதலாளித்துவம் (Post Capitalism) எனப் பெயர் கொடுக் கின்றனர். பெயர் எதுவாக இருந்தபோதி லும் இன்றைய நிலவரங்கள் கொடுமை யாய், கோரமாய்த் தெரிகின்றன. தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. மார்க்சை யும் லெனினையும் இன்றும் நம்மால் கைவிட இயலாது. சோசலிசம் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை என்பதை இவர்கள் நமக்குள் உறுதிப்படுத்தியுள்ளனர். தனி உடைமை அரசதிகாரம் இல்லாத ஒரு சமூகம் பற்றி நமக்குள் பேராசைகளைப் பதித்துள்ளனர். இவற்றை எல்லாம் இன்று நம்மால் களைந்துகொள்ள இயலவில்லை.

புரட்சிக்கான வாய்ப்புகள் எந்தத்திசை யில் உள்ளன என்று நமக்குத் தெரிய வில்லை. எந்த வர்க்கம் புரட்சியை முன் னெடுத்துச் செல்லும் என்பதிலும் நம் பிக்கை இல்லை. எளிய வாழ்க்கை நமக் குப் போதும் என்கிறோம். உழைப்பும் பகிர் வுமே வாழ்வின் உன்னத இலட்சியங்கள் என நம்புகிறோம். பெரிய இராணுவத்தைப் போலவே பெரிய அணைகள், பெரிய தொழிற் சாலைகள், பெரும் நகரங்கள், பெரிய அதி காரக் கட்டமைப்பு முதலியவை வேண் டாம் என்கிறோம். இவை யெல்லாம் தமக் குள் அதிகாரத்தைக் குறைப்பதன் மூலம் நம்மை எல்லாவகையிலும் வலியவராக் கும் நம்புகிறோம். நல்ல காற்றும் தூய்மை யான நீரும் வளமான நிலமும் மனித வாழ்வுக்கு ஆதாரங்கள் என நம்புகிறோம். இவற்றையெல்லாம் உறுதிப்படுத்திக் கொள்ளப் போராட முடியும்.

குழந்தைகள், பெண்கள் ஆகியவர்க ளுக்கு மனித வாழ்வை நாம் உறுதிப் படுத்த வேண்டும். நம்மை இழந்தும் மனி தன் மற்றும் உயிரினங்களின் வாழ்வை உறுதிப்படுத்த முடியும். சாதியோ மதங் களோ வேறு பெருமைகளோ நமக்குத் தேவை இல்லை. இத்தகைய வாழ்வுக்கான உலகத்தை நாம் உருவாக்க வேண்டும். தேசங்களை என்ன செய்யப் போகிறோம்? இராணுவங்களை என்ன செய்யப் போகி றோம்? இவையெல்லாம் நம் வசத்தில் இல்லை. இவற்றுக்குள் செயல்படுபவை ஆதிக்கங்கள். நமக்கு இவை வேண்டாம். இவற்றின் மூலம் வளர்ச்சி பெறுபவர்கள் அசுரர்கள். இந்த அசுரர்கள் இங்கும் சூழ்ந் துள்ளனர். இவர்களிடம் இருந்து நம்மால் தப்ப இயலாது. மார்க்ஸ் நம்மை எப்படிக் காப்பாற்றுவார்? லெனின் என்ன வழி சொல்வார்? எனினும் இவர்களைத் தான் நம்பியிருக்கிறோம்.

**உலகமயமாக்கலும் மார்க்சியமும்**

உலகமயமாதலை மார்க்சியம் எவ் வாறு எதிர்கொள்கிறது அல்லது எதிர் கொள்ளவேண்டும் - என்பது குறித்து இது வரை பார்த்தவற்றை இன்னும் ஒருமுறை மறுபார்வைக்கு உட்படுத்துவதும் தேவை யாகிறது. உலகமயமாதல் என்னும் போக்கு மார்க்ஸ் கருதியபடி உலகில் முழு அளவில் மாற்ற முனைந்த முத லாளியப் போக்குதான் என வைத்துக் கொள்வோம். அப்படியானால் இந்தியா வைக் குறித்து மார்க்ஸ் கூறியது போல ஆங்கிலேயரின் பொருளியல் ஆதிக்கம் இந்தியாவை நெடுங்காலத் தூக்கத்தி லிருந்து வழிக்கச் செய்யும் என்று கூற்று எந்த அளவுக்கு மெய்யாகிறது என்பது குறித்து நாம் நம்பிக்கையோடு சிந்திக்க முடியாது.

அது இந்தியாவின் சுயவளர்ச்சியை இடைமறித்ததோடு இந்தியாவைப் பின்ன டைவுக்குத் தள்ளியது என்பதும் உண்மை தான். இப்பொழுது உலமயமாதல் என்ற போக்கும் இந்தியாவைப் பழங்கால இரு ளுக்குள் தள்ளுவதை நாம் அனுபவிக் கிறோம். மேற்குலகில் ஒளிபரவுகிறது என்றே வைத்துக் கொண்டாலும் கிழக்கு உலகில் நுழைவது இருள்தான் எனத் தோன்றுகிறது. மேற்குலக நாகரிகம்தான் மனிதனுக்கு உண்மையான நாகரிமாக இருக்க முடியுமென்று மார்க்ஸ் நம்பினார்.

மேற்குலகம் நாகரிகத்தில் வளர்ச்சி பெறுவதற்காகத் தெற்குலகை இருளில் அன்றும் தள்ளியது; இன்றும் தள்ளுகிறது. சோசலிசம் குறித்து சல் சாட்சன் கூறி யதை இங்கு மீண்டும் நினைவு கொள் வோம். சோவியத் ஒன்றியத்தில் 15 சத மக்களுக்கு சோசலிசத்தைக் கொண்டு வருவதற்காக 85 சத மக்களின் வாழ்வுக் குத் தேவையான காடுகள், கனி வளங்கள் முதலியவற்றை அழிக்க வேண்டியிருந்தது என்றார் அவர். இப்படிக் கொண்டு வருவது சோசலிசமும் ஆகாது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

உலகளவிலான இயற்கை வளங்கள் முலியவற்றை மேற்குலகில் வாழும் 20 சதம் மக்கள் கொள்ளையடிக்கிறார்கள். மீதி 80 சதம் வறுமை முதலிய பாதாளங் களில் தள்ளப்படுகிறார்கள். கொள்ளை அடித்தவன் கூடுதலாக நுகர்கிறான். கொள்ளை அடிக்கப்பட்டவர்களின் எதிர்ப்பு, கலகம் முதலியவற்றை ஒடுக்க தொடர்ந்து ஆயுதங்களை உற்பத்தி செய்கிறான். ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கு இடையில் மோதல்களை உருவாக்குகிறான். இப்படி எல்லாம் செய்வதன் மூலம் மனிதத் தளத் திலிருந்து அவனும் தாழ்கிறான்; மற்ற வர்களையும் தாழ்த்துகிறான். மனிதனின் தேவைகள் என்று தொடர்ந்து பெருக்கு வதன் மூலம் இயற்கை பேரளவில் நாச மாவதோடு மனித வாழ்வின் தரமும் தாழ்ச்சி அடைகிறது.

அனைத்து மக்களின் எளிய வாழ்வுக்கு இன்றைக்கு உள்ள இயற்கை வளங்கள் போதுமானவை என்பதில் அய்யமில்லை. அறிவுப் பூர்வமாக இவற்றைப் பயன்படுத் திக் கொள்வதற்கான அளவில் தேவை யான அறிவியல் சாதனங்களும் நமக்கு இருக்கின்றன.

பிரம்மாண்டங்களைப் பற்றித்தான் மார்க்ஸ் சிந்தித்தார் என்று கூறுவதில் தவறில்லை. பிரம்மாண்டங்கள் குறித்து இன்று நமக்கு மறுபார்வை தேவைப்படு கிறது. உற்பத்திப் பெருக்கம் வளமான வாழ்வுக்கு வழிவகுத்து விடாது. உற்பத் திச் சக்திகளின் பெருக்கம் என்பது மீண் டும் முதலாளியத்தையே நிலைநிறுத்தும் என்று மாவோ கூறிய எச்சரிக்கையை நாம் மறந்துவிட இயலாது. எல்லோருக்குமான நல்வாழ்வு என்பதுதான் மார்க்சின் கனவு. எல்லோருக்குமான நல்வாழ்வென்பது எளிமையான வாழ்வாகத்தான் இருக்க முடியும். இதை மார்க்சோ, லெனினோ மறுக்க மாட்டார்கள். சிறிய நிறுவனங்கள், சிறுதொழில்கள், கூட்டுறவுகள், உள் ளாட்சிக்குக் கூடுதலான அதிகாரங்கள், மக்களின் பங்கேற்போடு திட்டமிடல், தாய்மொழிக்கல்வி, எல்லோருக்குமான உடல்நல வசதிகள் என்று திட்டமிட முடி யும் நாடுகள்கூட தேசிய இனங்கள் என்கிற அடிப்படையில் சிறியனவாக இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நல்லது.

இப்படி எல்லோருக்குமான நல்வாழ்வு என்பதை இன்றைய முதலாளியப் போக்கை உள்ளடக்கிய உலகமயமாதல் நமக்கு உறுதிப்படுத்த முடியுமா என்று கேட்டுக் கொள்வோம். இப்படி உறுதிப்படுத்திய பிறகு முதலாளியம் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதும் சாத்தியமில்லை. இப்படி நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமானால் இராணுவம் முதலிய மாபெரும் கட்டமைப்புகளை முதலாளியம் கைவிடவேண்டிவரும். மேற்குலகின் உயர் வளர்ச்சி, உச்ச ளவிலான அநாகரிகம் பல நூற்றாண்டுகளாக கொள்ளையிட்ட செல்வங்களைத் திருப்பித் தரவேண்டும் அல்லது பகிர்ந்து கொள்ள வேண்டும். இப்படி முதலாளியம் செய்யாது என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக் காட்டை இங்கு கூறலாம்.

*ISO* 9000 என்ற முறையில் அனைத்து உலக அளவிலான உற்பத்தித் தரங்கள் முதலியவற்றை இப்பொழுது இந்திய நிறுவனங்களும் செயல்படுத்துகின்றன. தொழில நிறுவனங்கள் மட்டுமில்லாமல் மருத்துவ மனைகள் முதலியவையும் இந்தத் தரங்களைச் செயல்படுத்துகின்றன. நிர்வாகம் கறாரான விதிகளைக் கடைப்பிடிக்கிறது என்பது உண்மைதான். தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் இந்தத் தரங்களை முழு அளவில் அனுசரிக்க வேண்டுமெனக் கட்டாயப் படுத்தவும் செய்கிறார்கள். ஆனால், அதேசமயம் தொழிலாளர்கள் மற் றும் ஊழியர்களின் ஊதியம், உடல்நலம் குடும்பநலம் பற்றியெல்லாம் இவர்களுக்கு அறவே கவலை இல்லை.

உண்மையில் செவ்வியல் முதலாளியம் இப்படிச் சில நற்செயல்களை செய்தது என்பதை நாம் மறுப்பதற்கில்லை கோவையில் பஞ்சாலைத் தொழில் வளர்ச்சி பெற்ற காலத்தில் ஜி.கே. சுந்தரம் முதலியவர்கள் தொழிலாளர்கள் நலன் கருதி குடியிருப்புகள், மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் முதலியவற்றைச் செய்து கொடுத்தார்கள். இப்பொழுது நிலைமை அறவே மாறிவிட்டது.

மார்க்சியர் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் சிலர் இன்னொரு வகையில் விவாதிக்கிறார்கள். உலகமயமாதல் முதலாளியத்திற்கு எவ்வாறு மாபெரும் வாய்ப்புகளைத் திறந்து விட்டிருக்கிறதோ அதே போலப் புரட்சியாளர்களுக்கும் மாபெரும் வாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது என்று இவர்கள் நம்புகிறார்கள். இன்னோர் அகிலம் தேவை என்கிறார்கள். உலகளவில் புரட்சிகரச் சக்திகள் தமக்குள் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டு போராட வேண்டும் என்கிறார்கள். இப்படி ஓர் ஒருங்கிணைப்பு எப்படி, எப்பொழுது சாத்தியம் என்பது புரியவில்லை. புரட்சிகர இயக்கங்களை ஒடுக்குவதில் அரசுகள் தீவிரமாகச் செயல் படுகின்றன. வரலாற்றைப் பின்னுக்குத் தள்ள முடியாது என்பதும் இவர்கள் நம்பிக்கை. பல்வேறு நாடுகளில் புரட்சிகர இயக்கங்கள் செயல்படுகின்றன என்பதும் உண்மைதான். கலகங்களும், கலவரங்களும் அநேகமாக எல்லா நாடுகளிலும் நடைபெறவும் செய்கின்றன.

இவை குறித்தெல்லாம் விவரங்கள் தொகுத்து ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்பதும் உண்மைதான். இதற்கான சாத்தியங்கள் நம்மிடையே மிகக் குறைவாகவே இருக்கின்றன. பாட்டாளி வர்க்கம் மட்டுமே புரட்சிகரமான சக்தி என்ற மாயை நமக்கு இன்றும் இருக்கிறது. நாகரிகம் குறித்த நம் நம்பிக்கைகள் மேற்குலகம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. பழங்குடிகள், பெண்கள், தலித் மக்கள் பற்றியெல்லாம் நமக்கு மறுசிந்தனைகள் தேவை. சிறிய அளவில் கலகங்கள் எனத் தொடங்கித்தான் நாம் முன்செல்ல முடியும்.

இழப்புகள் குறித்து நாம் அச்சம் கொளவதோ கவலைப்படுவதோ இயலாது. உலகமயமாதல் எனும் மாபெரும் ஆதிக்கங்களை எத்தனைக் காலத்திற்குள் நாம் முறியடிக்க முடியும் என்பது பற்றியோ முறியடிக்க இயலுமா என்பது பற்றியோ சிந்திப்பதை ஒதுக்கி வைத்துவிட்டு உலகமயமாதல் சார்ந்த நிறுவனங்களோடு அமைப்புகளோடு உச்ச அளவில் போராடுவதை இன்றே நாம் தொடங்கி ஆக வேண்டும். மார்க்சும், லெனினும் நமக்கு இன்னும் வழிகாட்ட முடியும். போராடுவதுதான் நமக்கு வாழ்வு என்பதுதான் நம் நிலைபாடாக இருக்கமுடியும்.

---

# ஐரோப்பாவில் வாழும் தமிழ் பெண்களின் 24 ஆவது சந்திப்பு

புலம்பெயர்ந்து வாழும் பெண்கள் சந்தித்து தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளும் முகமாக ஐரோப்பாவில் வெவ்வேறு பாகங்களில் நடைபெற்று வரும் பெண்கள் சந்திப்பின் 24ஆவது தொடர் லண்டனில் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 15, 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

1990ஆம் ஆண்டு, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்ப் பெண்கள், பெண்களின் பிரச்சினைகளை தங்களுக்குள் கலந்துரையாட பெண்கள் சந்திப்பை உருவாக்கினார்கள். இச்சந்திப்பு கடந்த பதினைந்து வருடங்களாக பல நாடுகளிலும் தொடர்ச்சியாக நடந்து வந்தது மட்டுமல்லாமல் இந்தியா, இலங்கையைச் சேர்ந்த பெண் எழுத்தாளர்கள், சமூக நலவாதிகள், பெண்ணிய அமைப்புப் பெண்கள் என்று பலர் கலந்துரையாடல் களில் கலந்து கொண்டனர். அத்துடன் பெண் படைப்பாளிகளின் படைப்புக்களை பதிவாக்கி 8 பெண்கள் சந்திப்பு மலர்க ளும் வெளிவந்துள்ளன.

இச் சந்திப்பில் பெண்கள் கலந்து கொண்டு தத்தமது கருத்துக்களைத் தெரிவித்து இச் சந்திப்பினை சிறப்படையச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கலந்துரையாடப்படவிருக்கும் விடயங்களாக:-

பெண்களின் உடல், உளநலம் பற்றி கருத்தரங்கம்,

சுனாமியின் அனர்த்தங்களும் பெண்களின் நிலையும்

நேரில் கண்டவையும் சில அறிவிப்புகளும் தொடரும் வன்முறைகளும் வாழ்க்கைப் பிரச்சினைகளும்

வீடுகளில் தொடர்பவை

தொடரும் போரும் பெண்களும் குழந்தைகளும்

தற்கால இலக்கியம், சினிமா, ஊடகங்களில்

பெண்கள்
இலக்கியத்தில் பெண்கள்
சினிமாவும் பெண்களும்
ஊடகங்களும் பெண்களும்
பெண்கள் சந்திப்பு மலர் வெளியீடும் அதன் மீதான விமர்சனமும்
கலாசாரமும் பாலியல் பிரச்சனைகளும்
பெண்களின் படைப்புக்கள்
ஓவியக் கண்காட்சிகள்
குறும்படக் காட்சிகள்
நாடகங்கள்

மேற்கண்டவற்றை விட மேலதிக விடயங்களை கலந்துரையாடல்களில் சேர்க்க விரும்புவோர் உங்கள் கருத்துக்களை செப்ரெம்பர் மாதம் இறுதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற விரும்புவோர் தயவுசெய்து உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்வேண்டும்.

மேற்கண்ட விடயங்கள் பற்றியும், அல்லது பெண்கள் சம்பந்தப்பட்ட எந்த விடயமானாலும் உங்கள் கருத்துக்களை எழுதியனுப்பினால் சம்பந்தப்பட்ட கருத்துரையாடல்களில் வாசிக்கப்படுவதோடு அடுத்த பெண்கள் சந்திப்பு மலரிலும் வெளியிடப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

தொடர்புக்கு
Rajes Bala,
47, Norman Avenue,
Woodgreen,
London N 225ES.
Email: rajesbala@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள கூட்டாட்சி - 1

*- பி. ஏ. காதர் -*

விடுதலைப் புலிகள் முதற் தடவையாக உள்ளக சுயநிர்ணய உரிமைக்குட்பட்ட தீர்வு ஒன்றினைக் காணத் தயாராக இருப்பதாகவும் சமஷ்டி பற்றிப் பரிசீலனை செய்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் அறிவித்திருக்கின்றார்கள். இது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வல்லரசுகளின் முகாம் இரண்டாகப் பிளவுபட்டுப் பனிப்போர் நடைபெற்ற காலத்தில் இருந்த சர்வதேச சூழல் இப்போது வெகுவாக மாற்றமடைந்துள்ளது. உலகின் பெரும்பாலான நாடுகள் அமெரிக்கா தலைமையிலான வல்லரசுகளின் ஆதிக்கத்தை இன்று ஏற்றுக்கொண்டிருக்கின்றன. உலகமயமாக்கல் என்ற பெயரில் அவர்களின் பொருளாதாரச் சந்தை விரிவடைந்து செல்கின்றது.

குறிப்பாக 2001 செப்டெம்பர் 11 ஆந் திகதி உலக வர்த்தக மையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் அமெரிக்கா, சர்வதேச சூழலை தனக்கு சாதாகமான முறையிலே மாற்றியமைத்துக்கொண்டுள்ளது.

சோவியத் யூனியன் சிதைவடைய முன்னர் தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் கரம் இராணுவ ரீதியில் மேலோங்கவில்லை. அதுவரை இந்தியா, சோவியத் யூனியன் ஆதரவோடு தனிப் பெரும் பிராந்திய வல்லரசாக இங்கு திகழ்ந்து வந்தது.

ஆனால், தற்போது உருவாகியுள்ள சூழலைப் பயன்படுத்திக்கொண்டு இப் பிராந்தியத்தில் காலூன்ற அமெரிக்கா முயல்கின்றது. இப்பிராந்தியத்தில் புவியியல் ரீதியாகக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை மீது அதன் கவனம் மீண்டும் திரும்பியுள்ளது. அதற்கு இலங்கை மீது கால்பதிக்க ஒரு காரணம் தேவை. வழமை போல உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவது என்ற போர்வையில் அல்லது சர்வதேசப் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் அது இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் களத்தில் இறங்கத் தருணம் பார்த்துக்கொண்டிருக்கின்றது. விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்துவது எனக் கூறிக்கொண்டு ரணிலுக்கு ஆதரவளிப்பது அல்லது சமாதானத்தை ஏற்படுத்துவது எனக் கூறிக் கொண்டு இருதரப்பையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுதான் அதன் நோக்கம். இதில் எதையும் செய்ய அமெரிக்கா தயாராகவுள்ளது. ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் மற்றொரு நாடு தலையிடக் கூடாதென்ற ஐக்கிய நாடுகள் சபைக் கொள்கையெல்லாம் நாடுகளின் சுயநிர்ணய உரிமையெல்லாம் சொந்த நலன் என்று வரும்போது அதற்கு ஒரு பொருட்டே அல்ல. இந்த நிலைமையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. சந்திரிக்காவின் கரத்தைப் பலப்படுத்தி அதன் மூலம் தனது நிலையைக் காப்பாற்றிக் கொள்ள அது எத்தனிக்கின்றது. எனவே, இலங்கையின் அரசியல் இன்று வல்லரசுகளின் சதுரங்க ஆட்டத்துக்குள் முற்றாக இழுத்து வரப்பட்டுள்ளது.

இப்பின்னணியில் மாறியுள்ள சர்வதேச பிராந்திய சூழலுக்கேற்பத் தனது இராஜதந்திர வியூகத்தை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், விடுதலைப்புலிகள் சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையை விட்டு மெல்ல நழுவிச் செல்கின்றார்களா அல்லது நிலைமையைப் புரிந்துகொண்டு காயைச் சரியான திசையில் நகர்த்துகின்றார்களா? இதுதான் இன்றைய கேள்வியாகும்.

விடுதலைப்புலிகள் தற்போது உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறுவதன் சாராம்சம் பிரிந்து செல்லும் உரிமை எமக்குண்டு. அதனை நாம் பிரயோகிக்காமல் இருக்க சம்மதிக்க வேண்டுமானால் உள்ளகத்தில் அதாவது அரசின் எல்லைக்குள் திருப்திகரமான தனிநாட்டுக்கோரிக்கையை மாற்றீடு செய்யக்கூடிய தீர்வு ஒன்றை அரசு வழங்க வேண்டும். அது சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் என்பதாக இருந்தால் அதனை ஒரு சரியான இராஜதந்திரம் எனக்கொள்ளலாம்.

இதற்கு ஒருபடி மேலேபோய் சர்வதேச அழுத்தத்தை இலங்கை அரசின் மீது திசை திருப்பித் தேசிய ஒடுக்கு முறைப் பிரச்சினைக்குத் தீர்வாகப் புதிய வடிவிலான சமஷ்டி முறை ஒன்றை மாற்றீடாக அமைத்துக் கொள்வதில் விடுதலைப் புலிகள் வெற்றி பெறுவார்களேயானால் அதற்கான சாத்தியம் மிகக் குறைவாக இருந்த போதும் அது ஒரு வரலாற்றுச் சாதனையாகவே இருக்கும்.

தமிழ் மக்கள் கேட்கும் எதையும் மாவட்ட சபையைக் கூட சிங்கள பெருந்தேசியவாத அரசுகள் வழங்கத் தயாராக இருக்கவில்லை. சில சிங்களத் தலைவர்கள் சில நீதியான தீர்வுகளை வழங்க சிற்சில சூழல்களின் நிர்ப்பந்தம் காரணமாக முன்வந்தபோது எதிர்க் கட்சிகள் பெருந்தேசியவாத பேரியக்கங்களை நடத்தி அவற்றை முறியடித்த வரலாறு இலங்கைக்குண்டு. பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது ஜே.ஆர். தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி கண்டி தலதா மாளிகைக்கு கொழும்பிலிருந்து ஊர்வலமாகச் செல்ல முயன்றது. கம்பஹாவில் வைத்து இவ்வூர்வலம் அடித்துக் கலைக்கப்பட்டாலும் அவ்வொப்பந்தம் கைவிடப்பட்டது. பின்னர் டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானபோது விஹாரமாதேவி பூங்காவில் சிறிமா தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு அவ்வொப்பந்தமும் கைவிடப்பட்டது. இந்தியாவின் தலையீட்டால் மாகாணசபை முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது ஐக்கிய தேசியக்கட்சி அரசிலிருந்து கொண்டே அதன் பிரதமர் பிரேமதாச அதனை எதிர்த்தார். அதற்கு எதிராக ஜே.வி.பி.தெற்கில் தனது இரண்டாவது கிளர்ச்சியை நடத்தியது. சந்திரிக்கா தனது வேறு சில அரசியல் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தமிழ் மக்களுக்கு ஓரளவு நியாயம் வழங்கக்கூடிய அரசியல் யாப்புத் திருத்த மூலத்தைப் பாராளுமன்றத்திற்கொண்டு வந்த போது இதே ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பைக் காட்டியது.

எனவே, தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினையைத் தீர்க்க கூடிய உட் கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கிய புதிய வடிவிலான சமஷ்டிமுறை ஒன்று மாற்றீடாக அமைந்து இனிமேல் ஏற்படப் போகும் இழப்புக்களை தவிர்க்குமானால் அதனை மனிதாபிமானமுள்ள எவராலும் எதிர்க்க முடியாது. தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினைக்கு பிரிவினை ஒன்றுதான் தீர்வு" என்பதல்ல. ஆனால், இதுவரை கொடுக்கப்பட்ட விலையை ஈடுசெய்யக்கூடிய திருப்திகரமான வடிவத்தை அது கொண்டிருக்க வேண்டும்.

அதேசமயம், ஐக்கிய நாடுகள் சபையின் 1960 ஆம் ஆண்டுத் தீர்மானம் கூறுவதைப் போல ஒரு அரசுக்குள் வாழும் தேசியங்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமை. அதாவது, பிரிந்து செல்லும் உரிமை கிடையாது என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு, அல்லது அன்டனியோ கசாசி முன்வைத்த உள்ளக சுயநிர்ணய உரிமையை அதே ரீதியில் அங்கீகரித்துக் கொண்டு சிங்களப் பெருந்தேசியவாதத்தின் மேலாதிக்கத்திற்கு அடிபணிந்த ஒரு தீர்வை புலிகள் ஏற்றுக்கொள்வார்கள் என்றால் அது முற்று முழுதான சரணாகதி என்றே அர்த்தப்படும்.

இதுவரையிலான இராஜதந்திர சதுரங்க ஆட்டத்தில் விடுதலைப் புலிகள் சரியான முறையிற் காய்களை நகர்த்தியுள்ளார்கள் என்றே கூறவேண்டும். எதிர்காலத்தின் போக்குகள் எந்தத் திசையை நோக்கி நகரப்போகின்றன என்பதைப் பொறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்துதான் பார்க்கவேண்டும்.

சமஷ்டி முறையில் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள்:

இன்று சமஷ்டி முறை பற்றி முன்னெப் போதும் இல்லாதளவுக்குப் பரவலாகப் பேசப்படுகின்றது. உலகில் இதுவரை முன் வைக்கப்பட்ட எந்த சமஷ்டி முறையும் முழுமையான தீர்வைத் தேசியப் பிரச் சினையில் கொண்டு வராதபோதும் கூட இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய பொறி முறைகளில் சமஷ்டி முறையும் ஒன்று என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. இவ்வகையில் சர்வதேச அனுபவங்களைக் கருத்திற் கொண்டு புதுவகையான சமஷ்டி முறை ஒன்றைப் பற்றி ஆராயலாம். அதிற் கவனம் செலுத் தப்படவேண்டிய பிரதான விடயங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

பழைய கொலனித்துவமுறை வீழ்ச்சி யடைந்தபோது பல புதிய நாடுகள் உலக அரங்கில் உதயமாகின. இந் நாடுகளின் எல்லைகள் விஞ்ஞானரீதியாகவோ தேசி யங்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக் கும் விதத்திலோ சமூக பொருளாதார கலா சார அம்சங்களை கருத்தில் கொண்ட தாகவோ அமையவில்லை. அதன் எல்லை கள் அரசியல் நோக்கத்துடனும், கொல னித்துவவாதிகளின் நிர்வாக வசதிக்கேற் பவும் வரையப்பட்டவை. அநேக இடங்க ளில் அவை பிரித்தாளும் தந்திரத்தின் கருவிகளாக அமைந்தன. பின்னர் ஆட் சிக்கு வந்தவர்கள் தமது பெருந்தேசிய மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வ தற்கே நிர்வாக எல்லைகளைப் பயன்படுத் திக் கொண்டிருக்கின்றார்கள். மீள்வரைபு செய்திருக்கின்றார்கள். உதாரணமாக 1833 இல் கோல்புறூக் - கேமரான் சீர்திருத்தம் இலங்கையை முதன் முறையாக ஐந்து மாகாணங்களாகப் பிரித்தது. அப்போது அதன் நோக்கம் கண்டி இராச்சியத்தின் பலத்தைச் சீர்குலைப்பதாகும். அதன் பின்னர் 1886 ஆம் ஆண்டு அதே நோக் கத்திற்காக மத்திய மாகாணத்திலிருந்து பதுளைப் பிரதேசத்தைப் பிரித்து ஊவா மாகாணத்தை அமைத்தது. வடக்கு மாகா ணமும் வடமத்திய மாகாணமும் முன்னர் ஒரே மாகாணமாகவே இருந்தது. பிற்காலத் திலேயே அது பிரிக்கப்பட்டது. 1889 இல் தான் சப்ரகமுவ மாகாணம் உருவாக்கப் பட்டது. வன்னி மாவட்டத்தில் தமிழ் மக் களின் இனச் செறிவை மாற்றியமைக்கும் விதத்தில் சிங்களக் குடியேற்றங்களை அமைத்து நிர்வாக மாவட்ட எல்லைகளை எவ்வாறெல்லாம் மாற்றியமைத்தனர் என் பதை விளக்க வேண்டியதில்லை. மலை யகத் தமிழர்கள் செறிவாக வாழும் பிர தேசங்களை செயற்கையான முறையில் துண்டாடி நிர்வாக மாவட்ட எல்லைகளை வரைந்து எப்படியெல்லாம் அவர்களது எண்ணிக்கைப் பலத்தைச் சிதறடித்து வரு கின்றார்கள் என்பது பற்றிய உண்மைகள் வெளியாகுமானால் அது அதிர்ச்சிகரமான செய்தியாகவே இருக்கும். எனவே நிர்வாக மாவட்ட எல்லைகளை தேசியப் பிரச் சினையைத் தீர்த்து பொருளாதார அபி விருத்தியை மேம்படுத்தும் விதத்தில் மீள்வரைபு செய்வதே சமஷ்டி முறையின் தொடக்கப் புள்ளியாக இருக்கும். நியாய மான முறையில் இந் நிர்வாக எல்லை கள் வரையப்பட்டாலே அங்கு வாழும் தேசியங்கள் அனைத்திற்கும் நீதி கிடைப் பதில் பாதித் தூரத்தையாவது கடக்க லாம்.

இதனையடுத்து சமஷ்டி முறையில் நில உரிமை, நிதி மூலவளங்களைக் கையாளும் உரிமை தமது பாதுகாப்பை தாமே உறுதி செய்து கொள்ளும் உரிமை தமது மொழியில் நிர்வாகம் நடத்தும் உரிமை என்பன தொடர்பான தெளிவான கொள்கை வகுக்கப்பட்டு அரசமைப்பில் உறுதிசெய்யப்படவேண்டும். அடுத்து இலங்கை சிங்கள பௌத்த நாடு என அரசியல் யாப்பில் உறுதிசெய்யப்பட்டிருப் பதை மாற்றி மதச் சார்பற்ற மொழிச் சம அந்தஸ்து உடைய நாடாக ஏற்றுப் பிரச் சினை தீர்க்கப்பட வேண்டும். அப்போது தான் சமஷ்டி முறை அமைந்தால் அது அர்த்தமுள்ளதாக இருக்கும்.

# அர்த்தமுள்ள கூட்டாட்சி - 2

*- எஸ். எம். மியாஜ் -*

இலங்கைத்தீவில் 25 வருடங்களாக நடந்த ஒரு உள்நாட்டுப் போர் ஒரு புரிந்து ணர்வு ஒப்பந்தம் மூலம் ஓய்வுக்குக்கொண்டு வரப்பட்டது. போரில் ஈடுபட்ட இலங்கை அரசு ஒரு தரப்பினராகவும் தனித்தமிழீழ அரசொன்றை அமைக்க இலங்கை அரசை எதிர்த்துப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னொரு தரப்பினராகவும் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டனர்.

அதுவரை பயங்கரவாதிகளாகச் சித் தரிக்கப்பட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் முதன்முறையாக சர்வதேசத்தின் முன்னிலையில் இனவிடுதலைக்காகப் போராடிய இலங்கையின் இன்னொரு தரப் பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாட்டு மக்கள் ஊடகங்களில் இருவகைச் சீருடை கள் அணிந்த இருவகை இராணுவத்தின ரையும் கட்டுப்பாட்டுப் பிரதேசம் கட்டுப் பாடற்ற பிரதேசம் என இருவகைப் பிர தேசத்தையும் சந்தித்தனர். இருவெவ்வேறு தேசங்கள் நிலவும் யதார்த்தம் இதன்மூலம் எல்லோர்க்கும் உறைக்கத் தொடங்கியது. இதன்பின்னர் கைதிகள் பரிமாற்றம், பரஸ் பர சில சுற்றுப்பேச்சு வார்த்தைகள், சில நிறுவன ஏற்பாடுகள், ஒருமித்த அறிக்கை கள் என்பன நிகழ்ந்தேறின.

தனியொரு தேசமாக நிலவியபோதும் புலிகள் தனித்தமிழீழத்திற்கான கோரிக்கை யைக் கைவிடவும் வெளியக சுயநிர்ணய உரிமையினின்றும் சற்றுக் கீழிறங்கி உள் ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் கூட்டாட்சி பற்றிப் பேசவும் சர்வதேசத்தின் முன் ஒப்புக்கொண்டது ஒரு பெரும் திருப்பு முனை என்றே கூறலாம். எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமி ழர்களதும் முஸ்லிம்களதும் தாயகம் என் றும் பிரகடனம் செய்தது. நீண்ட பேச்சு வார்த்தை, இழுத்தடிப்பு, காலவிரயம் தேவையற்ற முரண்பாடுகள், உணர்ச்சி வசப்பாடு போன்றவைகளைத் தவிர்க்கும் பொருட்டு தன்னிச்சையாகவே விடுதலைப் புலிகள் ஒரு அர்த்தம் பொதிந்த அதி காரப்பங்கீடு (Power Sharing) பற்றிப் பேசும் பொருட்டு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை ஒன்றை முன் வைத்தனர். இதன் ஆங்கிலப் பதங்களின் சுருக்கப்பதமாக ISGA என்றழைத்தனர். இந்த ISGA வைப்பற்றி விபரமாக உரை யாடுவதன்மூலமும் அதன் உள்ளடக் கத்தைத் தெளிவாக விளங்கிக் கொள் வதன் மூலமும்தான் உண்மையான கூட்டாட்சித் தத்துவமொன்றை இலங்கைக் குப் பிரயோகிக்கவும் உலகளாவிய சிறு பான்மையினங்களின் விடுதலைப் போராட் டத்திற்கு முன்மாதிரியொன்றை சர்வதேசம் உருவாக்கவும் தேசங்கள் சிதறுவதைத் தடுக்கவும் இறைமை எல்லோருக்குமானது என்பதை உணர்த்தவும் முடியும் என்பது எனது துணிபு.

இதுபற்றி உரையாட முன்னர் கூட்டாட் சித் தத்துவம் பற்றிப்பேச வரும் போதும் இனங்களின் உரிமைக்கான அதிகாரங்கள் பற்றிப் பேச வரும்போதும் கையாளப்படு கின்ற சில பதங்கள் பற்றிப் பேச வேண்டி யிருக்கிறது. ஏனெனில் இங்குள்ள பேராசிரி யர்கள், பத்தி எழுத்தாளர்கள், அரசறி வியலாளர்கள், அரசறிவியல் மாணவர்கள், அரசியற் கட்சிகள் என்பன இப்பதங்களை இடம் தவறிப் பிரயோகித்துக் குழம்பு வதை அவதானிக்க முடிகிறது.

Power Decentralization - அதிகாரப் பன்முகப்படுத்தல் Power Devalution - அதிகாரமாற்றம் அல்லது திரிபுற்ற தன் னாட்சி, Power sharing - அதிகாரப்பங்கீடு அல்லது அதிகாரப்பகிர்வு என்பனவே அப்பதங்களாகும். Power Deceritralization - அதிகாரப் பன்முகப்படுத்தல் என்பது நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் பொருட்டு அதிகாரங்களை பிராந்திய / பிரதேச மட்டம் வரை பன்முகப்படுத் துவதை / பரவலாக்குவதைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அரசியல் அதிகாரங்கள் பரவலாக் கப்படுவதில்லை என்பதுடன் தேவையேற் படுமானால் பன்முகப்படுத்தப்பட்ட / பர வலாக்கப்பட்ட அதிகாரங்களை ஒரு கட் டளை மூலம் அல்லது இலகு சட்டவாக் கம் மூலம் மீளப்பெறலாம். இதன் சிறப்பம் சம் யாதெனில் அன்றாட நிர்வாக நட வடிக்கைகளுக்காக மக்கள் அதிக தூரம் செல்லவோ அலையவோ தேவை யில்லை. இதற்கு உதாரணமாக மாவட்ட செயலக முறைமையையும் பின்னர் கொண்டு வரப் பட்ட பிரதேச செயலக முறைமையையும் குறிப்பிடலாம். இம்முறைமையில் பரந்து பட்ட மக்களின் அரசியல் அபிலாசைகள் எதுவும் பூர்த்திசெய்யப்படுவதில்லை. பிர தேச சபைகள் என்பது இம் முறைமையின் அரசியல் அம்சங்களைக் கொண்டிருப்பதா கக் கூறப்படினும் இச் சபைகளுக்கும் இச்செயலகங்களுக்கு மிடையே அமு லாக்க ஒருப்பாடு என்பது மிக அரிதானதா கவே காணப்படுகிறது. இலங்கை அனுப வத்தில் இவ்வொருப்பாடு அறவே இல்லை யென்றே கூறலாம். தென்னாபிரிக்கா, இந்தி யாவின் மேற்கு வங்காளம், கேரளா போன்ற இடங்களில் இம்முறைமை சிறப் பாகத் தொழிற்படுவதாகக் கூறப்படுகி றது.

அடுத்து எல்லோராலும் அதிகம் பயன் படுத்தப்படுகின்ற Power Devolution - அதிகாரமாற்றம் என்ற பதத்தைப் பார்ப் போம். இப்பதம் சமூக - அரசறிவியல் ஆய்வாளர்களால் திரிபுற்ற தன்னாட்சி முறைமை என்றும் அழைக்கப்படுகிறது. கூட்டாட்சித் தத்துவவியலா ளர்களால் இம்முறைமை Quasi Federation - அரை குறைச்சமஷ்டி என்றும் வழங் கப்படுகிறது. இதற்கு உதாரணமாக இந்திய மாநில ஆளுகை முறை பாகிஸ்தான் மாகாண ஆளுகை முறை, இலங்கை மாகாண ஆளுகை முறை என்பவற்றைக் குறிப் பிடலாம். இம் முறைமையில் நிர்வாக அதி காரங்களுடன் அரசியல் அதிகாரங்களும் மாகாணங்களுக்கு / பிராந்தியங்களுக்கு வழங்கப் படுகின்றன. நிதிக்கையாளுகை தொடர்பான அதிகாரம் மையக்கட்டுப்பாட் டிற்குள்ளும் காணப்படும். அரசியலமைப் பில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவ தன் மூலம் இம்முறைமையை அமுல் படுத்த முடியும். ஆயினும் இம்முறைமை யில் அதிகாரங்களின் அதுவும் பரந்துபட்ட மக்களின் மிகக்குறிப்பாக சிறுபான்மை இனங்களின் அரசியல் அபிலாஷையுடன் கூடிய அதிகாரங்களில் இணைந்த பட்டி யல் சட்ட ஏற்பாடு என்பது மிகப்பாதகமான அம்சமாகும். அத்துடன் அதிகாரங்களை ஒரு கையால் கொடுத்து இன்னொரு கையால் பெறக்கூடிய அல்லது செல்லு படியற்றதாக்கக்கூடிய சட்ட அம்சங்களின் உட்பொதிவை இம்முறைமை கொண்டுள் ளது. இதனாலேயே திரிபுற்ற தன்னாட்சி என்றும் அரைகுறைச் சமஷ்டி என்றும் அழைக்கப்படுகிறது.

ஆகவே, பொருள் பொதிந்த கூட் டாட்சித்தத்துவம் என்பதுடன் Power Sharing - அதிகாரப்பகிர்வு / பங்கீடு என்ற பதமே தொடர்புபட்டுள்ளது. இது ஒரு தேசத்தின் இறைமை மீதான உரித்து ஒவ்வொரு பிரஜைக்குமானது என்ற அரசி யல் அடிப்படையையும் எழுதப்பட்ட நெகிழா அரசியலமைப்பின் மூலம் மைய அரசுக் குரிய பொது அதிகாரங்களெனக் குறிப்பிடு பவை தவிர எஞ்சிய அதிகாரங்கள் அனைத் தும் தன்னாட்சி அலகுகளுக்கே உரியன என்ற அடிப்படையையும் கொண்டது. சுருங்கக் கூறின் இவ்விரு அடிப்படைக ளுமே கூட்டாட்சித்தத்துவத்தின் உயிர்நாடி மட்டுமல்லாது பொருள்பொதிந்த அதிகாரப் பகிர்வினதும் உயிர்நாடியுமாகும். இப்போது பேராசிரியர்களுக்கும் கலாநிதிகளுக்கும் பத்திக்காரர்களுக்கும் விஷயம் உறைத் திருக்கும் என்று எண்ணுகிறேன்.

இனி ISGA பற்றிய உரையாடலுக்கு வருவோம். மேலே சொல்லப்பட்ட பொருள் பொதிந்த அதிகாரப்பகிர்வு பற்றித்தான் விடுதலைப்புலிகள் தம்மால் முன்வைக் கப்பட்ட ISGAவில் வலியுறுத்துவதாகும். இதற்கு மேலதிகமாக இன்னொரு விடய மும் ISGAவில் வலியுறுத்தப்படுகிறது. அதுபற்றி இவ்வுரையாடலின் இறுதியில் பார்ப்போம். அதற்கு முன்னர் சில விடயங் களைத் தொட்டுச் செல்லவேண்டிய தேவை யுள்ளது. அதாவது பலவீனமானதொரு நிலையில் ஒரு விடுதலை அமைப்பு சர்வ தேச மத்தியஸ்தம் அல்லது அனுசரணை யின் மூலம் யுத்தநிறுத்தம் செய்துகொள்ள முன்வருவதில்லை என்பது பிணக்கு களைக் கையாளும் நிபுணர்களாலும் பன்னாட்டுக் கொள்கை வகுப்பாளர்களா லும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இவ்வாறானதொரு நிலையில் இராணு வச்சமநிலை - Military parity or Military Equilibrium என்பதே முன்னிருத் தப்படும் அம்சமாகும். ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சி, கட்டுநாயக்கா வான் அணிச் சிதைவுடன்கூடிய பொருளாதார வீழ்ச்சி என்பவற்றுடனேயே அரசு விடு தலைப்புலிகளை சர்வதேசத்தின் மத் தியஸ்தம் மூலம் இன்னொரு தரப்பாக ஏற்றுக்கொண்டதையும் உயர்பீடங்கள் - ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதையும் இங்கு நாம் நினைவுக்குக்கொண்டு வருவது இந்த உரையாடலை அர்த்தமுள்ளதாக்க உதவும் என நம்புகிறேன். இனி ISGA கொண்டுள்ள இன்னொரு அம்சம் என் பதைப்பற்றி சிறிது உரையாடுவோம்.

ISGAவை ஆழ்ந்து படிப்பவர்களுக்கும் அதன் ஒவ்வொரு அம்சங்களையும் அலசிப் பார்ப்பவர்களுக்கும் ISGA மறை முகமாக ஒரு நேசக்கூட்டமைவு Confederation பற்றி பேசுவதை அடையாளம் கண்டு கொள்ளலாம். உண்மையில் ஒரு கூட்டாட்சித் தத்துவம் பற்றிய சட்ட ஏற்பாடொன்றை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள முன்னம் நிலவுகிற தேசங் கள் தமக்குள் ஒரு நேசக்கூட்டமைவை ஏற்படுத்திக் கொண்டதே வரலாறும் நடை முறையுமாகும். இக் கூட்டமைவு சேர்ந்து வாழ முடியுமா என்ற கேள்விக்கான / பிரச்சினையை உரசிப் பார்ப்பதற்கான ஒரு பரிசோதனைக்களமும் காலகட்டமுமாகும் என்பதே முழு உண்மை.

இதற்கு மிக ஆரோக்கியமான உதார ணங்களாக அமெரிக்கா, சுவிற்சலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகள் கூட்டாட்சி அமைப்பாகத் தம்மை மாற்றிக்கொள்ள முன்னர் நேசக் கூட்டமைவாகப் பலவரு டங்கள் நிலவியதைக் கூற முடியும். அமெ ரிக்கா 1789 வரையும் சுவிற்சலாந்து 1874 வரையும் ஜேர்மனி1874 வரையும் நேசக் கூட்டமைவாக நிலவின என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசி யமாகும்.

அந்த வகையில் விடுதலைப்புலிகள் தனித்த பிரதேசம், தனித்த இராணுவம், தனித்த நிர்வாகம் எனப் பட்டியலிடக்கூடிய தேசநிர்மாணமொன்றிற்கான கட்டமைப் புடன் காணப்படுகின்றனர். குறிப்பாக வரிவ சூலிப்பும் பொது ஒதுக்கீடும் போன்ற விட யங்களில் கவனம் செலுத்துகிற அமைப் பாகவும் காணப்படுகின்றனர். ஆகவே ஒரு கூட்டாட்சி உருவாக்கத்திற்கு முன்னர் ஒரு நேசக் கூட்டமைவை வலியுறுத்துவது தவறில்லை என்பதை இலங்கை வர லாறைப் படிக்கின்ற ஒவ்வொருவரும் ஏற் றுக் கொள்ளலாம்.


இறுதியாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போதும் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தின் போதும் இரு தடவைகள் தென்னிலங்கை யின் இருபெரும் கட்சிகளால் சர்வதேசத் தின் முன்னிலையில் இலங்கையின் இன் னொரு தரப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடுதலைப்புலிகளை தெற்கின் அனைத் துக் கட்சிகளும் எதிர்காலத்தில் ஒன்றி ணைந்தாலும் அப்போதும் விடுதலைப் புலிகளே இன்னொரு தரப்பாக ஏற்கப்படும் நிலை யதார்த்தமாகிவிட்டது. ஏனெனில் அரசாங்கம் அல்லது தென்னிலங்கை சர் வதேசத்தை இனி ஏமாற்றமுடியாது. சர்வதேசம் இனி விடுதலைப்புலிகளை ஏமாற்ற முடியாது. ஆகவே இனி எந்த வொரு பேச்சும் தீர்வு பற்றியதாக ஆரம் பிக்கும்போது அது ISGA விலிருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றி விட்டது என்றே நம்பலாம்.

ஆயினும். போரில் ஈடுபட்ட இரு தரப் பினரும் இலங்கையில் வாழ்கிற நடை முறைத் தேசியங்களான முஸ்லிம் களையும் மலையக மக்களையும் கோட் பாட்டம் சங்களைப் புறக்கணித்து ஏற்றுக் கொள்ளாது போனால் நீடித்து நிலைக் கக்கூடிய அமைதியொன்றின் அத்தி வாரத்தைப் பலவீனமானதாகத்தான் போட முடியும் என்பதே உண்மை.

சம்மந்தப்பட்டவர்கள் அதனைப் புரிந்து கொண்டால் சரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "என்னுடைய படைப்புகள் சில எனக்கு தெரியாமலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன"

**- சண்முகம் சிவலிங்கம் -**


*'கேள்வி :* உங்கள் எழுத்துலகப் பிரவேசம் பற்றி சொல்வீர்களா?



:சிறு வயதிலிருந்தே எழுத்தார்வம் கொண்டிருந்தேன். பல எழுத்தாளர்களை மனதில் வரிந்துகொண்டு முதலில் கவிதை எழுதினேன். எனது 'அழைப்பு' எனும் கவிதையில் அதுபற்றிய உருவகத்தைச் சொல்லியுள்ளேன்.


தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்
பாதி இரவினிலும்
பட்ட பகலின் அனலினிலும்
மோதி தெறித்தே
மெல்ல முனகி அழுவதுபோல்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்

*'கேள்வி :* ஒரு ஆசிரியராக, அதிபராக கல்விப் பணி செய்து கொண்டிருந்த உங்களால் எவ்வாறு எழுதமுடிகிறது?



:எனது தொழிலுக்கும் கலையார்வத்திற்கும் இடையேயுள்ள முரண்பாட்டை எனது மென்மையின் தளைகளிலிருந்து என்னும் கவிதையில் காண்கிறீர்கள். எனினும், நான் என் தொழிலையே கலையாக்குகிறேன். எனது 'மழை', 'மனித நேயமும் மண்ணாங்கட்டியும்', நீக்கம்', 'துருவப் பறவைகள்' முதலிய கதைகளில் இதைக் காண்கிறீர்கள்.

*'கேள்வி:* சிறந்த படைப்பாளியாகக் கருதப்படும் உங்களின் முதல் கவிதை, முதல் சிறுகதை, முதல் நாடகம், முதல் நாவல் பற்றிக் கூறுங்கள்?



:முதற் கவிதை என் பட்டித்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில் சைக்கிள் ஓடிய ஒரு பள்ளித் தோழியைப் பற்றியது. முதற் சிறுகதை என் முதல் காதல் பற்றியது (கசங்கிய மலர்கள்). பிரசுரத்திற்கு உரிய முறையில் தயாரிக்கப்பட்ட முதல் நாடகப் பிரதி காத்திருப்பு - உலகமெங்கும் அலையும் தமிழ் அகதிகள் பற்றியது. பிரசுரிக்கப்பட்ட முதல் நாவல் (குறுநாவல்) காலடி.

*'கேள்வி :* நீங்கள் ஆங்கிலத்திலும் எழுதுகிறீர்கள். உங்கள் முதற் கவிதையும் கதையும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. சில ஆங்கில இதழ்களிலும் உங்கள் கவிதைகள் வெளிவருகின்றன. அண்மையில் வெளியான உங்களது சிறுகதையிலும் உங்களது ஒரு ஆங்கிலக் கவிதை இடம்பெற்றுள்ளது. உங்களது ஆங்கில எழுத்து முயற்சிகள் எவ்வாறு உள்ளன?



:அதிகமில்லை. இடைக்கிடை சில கவிதைகளை எழுதியிருக்கிறேன். My Feminica, Songs of a Refugee ஆகிய ஆங்கில கவிதைத் தொகுப்புகளை தயாரித்துள்ளேன். My Feminica என் வாழ்வில் எதிர்ப்பட்ட பெண்களின் குறுங்க விதைவரிகள். Songs; of a Refugee மட்டக்களப்பு எழுவான் கரையிலிருந்து படுவான்கரை வரையிலுமான எங்கள் அகதி வாழ்க்கை பற்றியது. உதிரியாக மேலும் சில ஆங்கிலக் கவிதைகள் உண்டு.

*'கேள்வி :*ஆங்கிலத்திலும் எழுதுகின்ற நீங்கள் மொழிபெயர்ப்பிலும் ஈடுபட்டிருக்கிறீர்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குமான மொழிபெயர்ப்புக்கள் எவ்வாறுள்ளன?



:அதிகமில்லை. மொழிபெயர்ப்புகளை ஒரு முழுநேர வேலையாகவோ பகுதி நேர வேலையாகவோ நான் கொள்வதில்லை. அவ்வப்போது பிறர் என்னைக் கேட்டுக்கொள்ளும்போது மாத்திரமே மொழிபெயர்ப்பில் ஈடுபடுகிறேன். 'கவிஞன்' கவிதை இதழ் வெளிவந்த காலத்தில் ஆங்கிலம் வழியான சில ரஷ்ய, சீன, ஜேர்மனிய, அமெரிக்க கவிதைகளை மொழி பெயர்த்துக் கொடுத்தேன்.

அதுபோலவே தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்க்கிறேன். உமா வரதராஜனின் 'எலியம்' சிறுகதையை ஆங்கிலத்தில் (Rattology) மொழிபெயர்த்தேன். என்னுடைய 'காட்டுத்தோடை' சிறுகதையையும் ஆங்கிலத்தில் (Wild Oranges) மொழிபெயர்த்தேன். இரண்டும் அஷ்லி ஹல்பே. ரஞ்சினி ஒபேசேகர, எம்.ஏ. நுஃமான் ஆகியோர் தொகுத்த A Lankan Mosaic என்னும் ஆங்கிலத் தொகுப்பில் வெளிவந்துள்ளன.

*'கேள்வி:* உங்களுடைய படைப்புகள் பிறரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதா?



:இப்போதெல்லாம் பல தமிழ் மொழி எழுத்தாளர்கள் தங்களுடைய படைப்புகளை யாரையேனும்கொண்டு மொழிபெயர்த்துக்கொள்வது சகஜமாகிவிட்டது. என்னுடைய படைப்புகள் சில எனக்குத் தெரியாமலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

பத்மநாப ஐயர் சிலரைக் கொண்டு எனது சில படைப்புகளை மொழிபெயர்த்துள்ளார். எனது நீக்கம் என்ற கதையும் ஆக்காண்டி, சமாதானச் சாக்கடை போன்ற கவிதைகளும் இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. செல்வா கனகநாயகம் கனடாவிலிருந்து தொகுத்த Lutesong And Lament என்னும் ஆங்கிலத் தொகுதியில் இவை இடம்பெற்றுள்ளன. பேராசிரியர் சிவசேகரம் துருவத் தரையின் வசந்தப் பூவுக்கு என்னும் கவிதையையும் இன்னும் சில கவிதைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இவை Saturday Review இல் வெளிவந்தன. எனது ஆக்காண்டி கவிதை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'கேள்வி:சிறந்த விமர்சகராகவும் கருதப்படும் உங்களின் முக்கிய விமர்சனப் பங்களிப்புகள் யாவை?



:அதிகமில்லை. சில நூலாய்வுகளும் கவிதை விமர்சனங்களும் செய்துள்ளேன். சிறுகதை, நாவல் விமர்சனங்களிலும் ஈடுபட்டுள்ளேன். எனது இலங்கைத் தமிழ் கவிதை - சில அவதானங்கள். மஹாகவியும் தமிழ்க் கவிதையும், உலக - இலக்கியப் பரப்பில் மஹாகவியின் ஒரு சாதாரண மனிதரின் சரித்திரம், மூவர். நீலாவணன் கவிதைகள், மு.பொ.கவிதை ஆய்வு. இருத்தலியல் ஒரு நோக்கு முதலிய கட்டுரைகள் சிலாகிக்கப்பட்டுள்ளன. அமைப்பியல் பின் நவீனத்துவம் பற்றியும் எழுதியுள்ளேன்.

*'கேள்வி:* நவீனத்துவம் பின்நவீனத்துவம் பற்றிய உங்களின் கருத்து என்ன?



:நவீனத்துவம், விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பிரெஞ்சுப் புரட்சியின் சுலோகங்களின் அடிப்படையிலான அரசியல் பார்வையுடையது. தேசிய விடுதலையையும், தேசியத்தையும் உள்ளடக்கியது.

டார்வினிசம், மார்க்சீயம், அமைப்பியல், இருத்தலியல் ஆகிய மெய்யியல் தத்துவங்கள் அதன் சிந்தனை வடிவங்களாக உள்ளன. பின் நவீனத்துவம் இவைகளை கேள்விக்குள்ளாக்கி தேசிய எல்லைகள் தாண்டிய பொருளாதார சுரண்டலுக்கும் தேசிய எல்லைகள் தாண்டிய பொருளாதார சுரண்டலுக்கும், தேசியத்தின் நிராகரிப்புக்கும், வர்க்க முரண்பாட்டுணர்வை மழுங்கப்பண்ணும், உடனிருக்க வாழும் வர்க்க சமரச கொள்கைக்கும் உரிய தத்துவார்த்த சிந்தனையாக முன்வைக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பூகோளமயமாதல், உலக மயமாதல் என்ற மாயாஜாலப் பெயரைப் பெற்றுள்ளது. இவ்வாறு அது முன்னறுக்கின்ற பன்முகத்தன்மை உலகில் நிரந்தரப் போரையும், வறுமையையும் அவலங்களையும் ஒரு மந்திர மோகினி போல் வளர்க்க எத்தனிப்பதால் நாம் அதனை நிராகரிக்க வேண்டும்.

*'கேள்வி:* இந்த நிராகரிப்பில் உங்களைப் போன்ற எழுத்தாளர்களின் பங்கு என்ன?



:இன்றைய திரிசங்கு சொர்க்க நிலை அதுதான். உலகமயமாதலுக்கு எதிராக உலகெங்கும் அணிதிரளும் உலக மயமாதல் எதிர்ப்பாளர்களுடன் நாம் அணி சேரவேண்டும். இந்த காட்டாற்று அசுரத் தத்துவத்தை கிழித்தெறியும் காலம் ஒன்று வரும். இப்போதுள்ள பிரச்சினை என்னவென்றால் இந்த அசுரன் முகம் இல்லாதவன். சகல ஏகாதிபத்திய அச்சுறுத்தல்களும் இவனுடைய முகமே என்பதை இனங்காண வேண்டும். இனம்கண்டால் அவனைத் துரத்துவது எளிதாகும்.

*'கேள்வி :* படைப்பு, விமர்சனம் இரண்டிலும் காலூன்றி மெய்யியலில் வீச்சமாக உள்ளீர்கள். உங்கள் படைப்புகளிலும் விமர்சனங்களிலும் உங்கள் தத்துவார்த்த நோக்கு எவ்வாறு உள்ளது?



:எனது படைப்புகளிலும் விமர்சனங்களிலும் மார்க்சிய நோக்கு அடிப்படை. ஆனால், மார்க்சீயமே எல்லாம் அல்ல. மார்க்சீயத்தினூடு முன்னெடுக்கப்படும் தேசியம், ஒடுக்குமுறை எதிர்ப்பு, மேலாண்மை எதிர்ப்பு, இருத்தலியம், மனிதம், சர்ரியலிசம் மற்றும் ஆன்ம தரிசனம் முதலிய நோக்குகள் என் படைப்புகளில் உண்டு.

**நேர்காணல்:**

**ஜெஸ்மி எம். மூஸா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பம் -லண்டன்

## குறுந்திரைப்பட விழாவும் (2005) சிறந்த படத்திற்கான விருதும்

**உங்கள் படைப்புகளை 15.10.2005க்கு முன்பு அனுப்பி வையுங்கள்**

4 Burges Road
London E6 2BH
United Kingdom

+44(0)20 8470 7883
+44(0)7956 490 694
+44(0)7984 136 160
+44(0)7961 167 756

e-mail: vimbam@aol.com

VIMBAM


Printed By: A.C.M Press, 464, Hospital Road, Jaffna. Published By: Christine Santhavathanie.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org